கல்கி

KALKI
5.10.86
ரூ.1.50



சமுதாய நீதி:
சட்டத்தால் மட்டுமே சாதிக்க முடியாது!
— நீதிபதி பத்மினி ஜேசுதுரை


PHILIPS
பிலிப்ஸ்
சென்ற ஆண்டு பிலிப்ஸ் வழங்கிய "முற்றிலும் புதியதை" விட
வேறு சிறந்தது உண்டா ?
இந்த ஆண்டின்
மிக நவீனமானதை
வழங்குவதும் பிலிப்ஸ்
மோனோ டூ-இன்-ஒன்கள் மற்றும் கேஸட் ரெக்கார்டர்களின்
அணிவரிசையை காணுங்கள்
AR 153 ரூ. 1195/-*
AR 243 ரூ. 1300/-*
AR 343 ரூ. 1450/-*
AR 151 ரூ. 995/-*
AM 144 ரூ. 570/-*
AM 354 ரூ. 875/-*
AM 254 ரூ. 750/-*
AR 143 ரூ. 1025/-*
AM 155 ரூ. 795/-*
* எக்சைஸ் வரி உள்ளிட்டது. தல வரிகள் தனி. இந்த விலைகள் மாற்றத்திற்கு உட்பட்டவை. லைசென்ஸ் தேவை இல்லை.
CLARION/BP/201/203 TAM
பிலிப்ஸ்–ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

விருது பெற்ற திப்பு!



"என் பெயர் திப்பு. வயசு எட்டுதான் ஆகிறது. ஆனாலும் என்ன கம்பீர வளர்ச்சி பார்த்தீங்களா? நான் நாய்களிலேயே மிக உயர்ந்த கிரேட் டேன் ஜாதி. மூன்றடி உயரம்.

"என் எஜமானர் வீடு, பெசன்ட் நகரின் ஒரு கோடியில் கடைசி வீடு. மெயின் ரோட்டில் இருந்தாலும், இருட்டிவிட்டால் ஆள் நடமாட்டம் குறைச்சல்தான்.

"ஆகஸ்ட் இருபத்தி நாலாம் தேதி. இரவு ஏழேமுக்கால்மணி இருக்கும். என் எஜமானர் டாக்டர் ஹரிஹரன், ஓர் அவசர ஆபரேஷன் செய்ய ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தார். வீட்டிலே அவர் மனைவி சரோஜினி ஹரிஹரன் டீ.வி. பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய சினேகிதியும் அவர் கணவரும் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களை சந்தோஷமாய் "வாங்க.... வாங்க...." என்று சொல்லி வரவேற்றார் என் எஜமானி. அவர்கள் பின்னாலேயே மூன்று வாட்டசாட்டமான புதிய மனிதர்கள் உள்ளே நுழைந்தனர். நேரே டீ.வி. இருந்த ரூமினுள் நுழைந்து, "ஹாண்ட்ஸ் அப்" என்று சொன்னபடியே மூன்று தடியன்களில் ஒருத்தன் கைத்துப்பாக்கியை என் எஜமானியை நோக்கிக் காட்டினான். பக்கத்து ஹாலிலிருந்த நானும், டாக்டர் ஹரிஹரனின் தம்பியும் வந்து பார்த்த போது, இன்னொரு தடியன், வந்திருந்த பெண்மணியைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி, அவர் கழுத்திலிருந்தும் அவருடைய கணவர் கழுத்திலிருந்தும் செயின்களை அறுத்தெடுத்துக் கொண்டான். துப்பாக்கி வைத்திருந்த திருடன் என் எஜமானி கழுத்திலிருந்த செயினை வேகமாய் இழுத்துப் பறித்துக் கொண்டான்.

"மூன்றாவது திருடன் வெளியிலும், உள்ளுக்குமாய் நடந்து, யாராவது வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டிருந்தான். ஏதோ ஆயுதம் வைத்துக் கொண்டுமிருந்தான்.

"என் எஜமானரின் தம்பியை, கத்தியால் அந்தத் திருடன் லேசாய்க் கீற, எனக்குப் பயங்கர ஆத்திரம் வந்து, அவன் மேல் தாவி, அவன் கழுத்தைக் கவ்விப் பிடித்தேன். உடனே கைத்துப்பாக்கி வைத்திருந்த திருடன் என்னை நோக்கிச் சுட்டான். என் முதுகுப் பகுதியிலும், அடி வயிறு பகுதியிலும் குண்டுகள் பாய்ந்தன. ரத்தம் சொட்டியது. என் பலம் குறைந்தது.

"இதற்குள் மூன்று சங்கிலிகளில் ஒன்றை மீட்டுவிட்டார் என் எஜமானி. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே மூன்று திருடர்களும் தப்பி ஓடிவிட்டனர். நான் ரத்த வெள்ளத்தில் விழுந்தேன். என் எஜமானியும் ஒரு டாக்டர். என் காயத்துக்குத் தையல் போட்டு, முதலுதவி செய்துவிட்டு, போலீசுக்குத் தகவல் சொல்ல கொஞ்ச நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் வந்து சேர்ந்தனர். நான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகப்பட்டேன்.

"நான் உயிருக்கு அஞ்சாமல் பாய்ந்திராவிட்டால் திருடர்கள் துப்பாக்கி காட்டி நிறையவே கொள்ளை அடித்திருப்பார்கள். எனவேதான் போலீஸ் கமிஷ்னர் தேவாரம் என் வீரத்தைப் பாராட்டி, மெடல் அளித்துக் கௌரவித்தார். 'இதுபோல ஒரு நாய் போலீஸ் துறையினரால், வீரச் செயலுக்காகக் கௌரவிக்கப்படுவது, எனக்குத் தெரிந்து இதுவே முதல் தடவை' என்று கமிஷ்னர் பேசினபோது எனக்குச் சந்தோஷமாய் இருந்தது."

கட்டுரை வடிவம்; **எஸ். சந்திரமௌலி**

படம்: **யோகா**

"சமுதாய நீதி:
சட்டத்தால் மட்டும் சாதிக்க முடியாது!"

"**பெ**ண்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்ட எனது தாயின் நினைவாக இந்தப் பெண் குழந்தையையும் ஒரு வழக்கறிஞராக உருவாக்குங்கள்!" – பிறந்து முப்பது நாட்களே ஆகியிருந்த குழந்தைக்குப் பெயர் சூட்டி, **baptize** செய்வித்த பாதிரியார் குழந்தையின் அப்பாவைக் கேட்டுக் கொண்டார்.

"அப்படியே ஆகட்டும் ஃபாதர்" என்றார் அந்தத் தந்தை. குழந்தை ஆழ்ந்த அமைதியுடன் தூங்கிக் கொண்டிருந்தது.

இன்று சென்னை உயர்நீதி மன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக விளங்கும் திருமதி பத்மினி ஜேசுதுரையின் நீதித் துறைப் பிரவேசம்' இப்படி அவர் பிறந்த முப்பதாம் நாளன்றே தீர்மானிக்கப்பட்டது!

"அப்போதிருந்தே ஒவ்வொரு நிமிடமும் என்னை வழக்கறிஞர் தொழிலுக்குத் தயார் செய்யலானார் என் தந்தை" என்று கூறிய நீதிபதி பத்மினி ஜேசுதுரையிடம் கேட்டுேனாம்: "உங்கள் தந்தை ஃபாதர் ஃபாவரின் சொல்லைக் கட்டளையாகக் கொண்டு செயல்பட்டிருக்கலாம். ஆனால் உங்களுக்கு இதை மேற் கொள்ள ஆசையும் ஆர்வமும் இருந்தனவா?"

"ஓ! இருந்தன. பள்ளிப் பருவத்திலேயே நான் இத்தொழிலுக்கு என்னைத் தயார் செய்துகொள்ள ஆரம்பித்தேன். நான் சட்டம் பயின்றது சென்னை சட்டக் கல்லூரியில். படிப்பு முடிந்ததும் திருநெல்வேலியில் தொழில் தொடங்கினேன். அது 1954 ஆம் வருஷம். ஒன்பது ஆண்டுகளுக்கு என் சொந்த அலுவலகத்தை நடத்தி வந்தேன். இரண்டு பெண்கள் என்னிடம் ஜூனியர்களாக இருந்தனர்.

"1957 இல் கல்யாணம் ஆயிற்று. குழந்தைகள் பிறந்த பிறகு தொழிலைத் தொடர்ந்து தீவிரமாகச் செய்ய முடியவில்லை. குழந்தைகள் ஓரளவுக்கு வளர்ந்த பிறகு மீண்டும் பழைய ஈடுபாட்டுடன் பணியாற்றி வந்தேன்.

"முதலில் திருநெல்வேலியில் கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞராக (**additional public prosecutor**) நியமிக்கப்பட்டேன். பிறகு 1984 இல் சென்னை உயர் நீதிமன்ற அரசுத் தரப்பு வழக்கறிஞராகி இப்போது நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளேன்."

நீதிபதியின் சொந்த வாழ்க்கை பற்றிய கேள்விகளைத் தொடராமல் சமுதாயப் பிரச்னைகள் பற்றி அவர் கருத்துக்களை அறிய விரும்பினோம்: "பொதுவாகவே சட்டத்தை மீறுவது என்பது சகஜமாகி வருகிறது. பெரிய பெரிய கொள்ளைகள், மோசடிகள் ஒருபுறம் இருக்கட்டும்; ஹெல்மெட் போடாமல் போவது, சாலை விதிகளை மீறுவது போன்ற சின்னச் சின்னக் குற்றங்கள் மலிந்து வருகின்றன. ஏன்? தண்டனை அதிகரிக்கப்பட்டால் இதுபோன்ற குற்றங்கள் குறைய வாய்ப்புண்டா?"

நீதிபதி கூறினார்: "தண்டனையை அதிகரிப்பதால் குற்றங்கள் குறையும் என்று வாதிக்கும்போதே, அதனால் புதிய பிரச்னைகள் எழும் என்றும் எதிர்வழக்காடலாம். எனவே சட்டங்களும் விதிகளும் சமுதாய நலனுக்காக ஏற்படுத்தப்படுகின்றன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வைப்பதே சிறந்த வழி. அவற்றின்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியை மக்களிடம் உருவாக்க வேண்டும். வரதட்சிணை ஒழிப்புச் சட்டத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். பெயரளவில்தான் அது சட்டமாக இருக்கிறது. கல்யாணத்தின் போது, எப்படியோ திருமணம் நடந்தால் போதும் என்கிற எண்ணத்தில் பெண் வீட்டார் வரதட்சிணை கொடுத்து விடுகிறார்கள். வரதட்சிணை வாங்கியதாக எத்தனை பெண்கள் அல்லது பெற்றோர்கள் மாப்பிள்ளை வீட்டாரைப் பற்றிக் குற்றச்சாட்டுப் பதிவு செய்கிறார்கள்? 'எப்படியோ நம் பெண் சந்தோஷமாக இருக்க வேண்டும். புகுந்த வீட்டில் சிறிது ஏறத்தாழ இருந்தாலும் காலப் போக்கில் எல்லாம் சரியாகிவிடும். அவளுக்குச் சமூகத்தில் அவப்பெயர் ஏற்பட்டு விடக் கூடாது' என்ற எண்ணங்களே நம்மிடையே மேலோங்கியுள்ளன. பெரும்பான்மை மக்கள் இப்படி நினைக்கும் போது வரதட்சிணை ஒழிப்புச் சட்டம் என்பது நடைமுறையில் எப்படி முழு வெற்றி அடைய முடியும்? இதேபோல்தான் எந்தச் சமூக நீதியும் சட்டத்தால் மட்டும் சாதிக்கக் கூடியது அல்ல. அது கல்வி அறிவுப் பெருக்கத்தாலும் அதன் பயனாக உண்டாகும் மனமாற்றத்தாலும்தான் விளைய முடியும்.

"நான் வழக்கறிஞராகப் பணியாற்றிய போது விவாகரத்துக்கென வந்த பலரை அவ்வெண்ணத்திலிருந்து மாற்றி, தொடர்ந்து இல்வாழ்க்கை நடத்தும்படி அறி



வறுத்தியிருக்கிறேன். அனேகமாகச் சிறிய விஷயத்துக்காகச் சண்டை போட்டுக் கொண்டுதான் இப்படி விவாகரத்துக் கோரி வருவார்கள். அவசரப்பட்டு இப்படி முடிவு எடுப்பவர்களைப் பிரித்து வைத்துச் சமூகத்தில் அவர்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்குத் தீராத அபவாதம் தேடித் தருவதால் என்ன பயன்?''

''இப்படி விளைவித்த **out of court settlements** எவ்வளவு தூரம் வெற்றி அடைந்தன?'' என்று கேட்ட போது ''எழுபத்தைந்து சதவிகிதம் வெற்றிதான்'' என்றார் நீதிபதி.

''உண்மையான குற்றவாளி தப்பிப்பதும் குற்றம் செய்யாதவர் தண்டனைப் பெறுவதும்...'' என்று நாம் ஆரம்பிப்பதற்குள் இடைமறித்துச் சொன்னார்: ''நமது சட்டமே 'நூறு குற்றவாளிகள் தண்டனை பெறவிட்டாலும் ஒரு நிரபராதி கூடத் தவறாக தண்டிக்கப்படக்கூடாது' என்ற கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. அதனால் நிரபராதி தண்டிக்கப்படுவது சாத்தியமேயில்லை.

''குற்றவாளி தப்புவது எந்த வகையில் நியாயம்என்றுகேட்கிறீர்களா? ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு; '**Judges are prisoners of evidence**' என்று. நீதிபதிகள் சாட்சியங்களின் கைதிகள். சாட்சியங்களின் அடிப்படையில்தான் நாங்கள் தீர்ப்பு வழங்க முடியும். ஒருவன் குற்றம் செய்திருப்பதாக அவனைப் பார்த்ததுமே நீதிபதிக்குத் தோன்றலாம்; வழக்கை விசாரிக்கும் போது நம்பிக்கை கூடப் பிறக்கலாம்! ஆனால் அதெல்லாம் முக்கியமல்ல. சாட்சியம் இருக்கிறதா என்றுதான் அவர் பார்க்க வேண்டும்.''

''ஏழைகளுக்காகத் தொண்டாற்றி வரும் லீகல் எய்ட் போர்டு பற்றி...?''

''சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தவிர, லோக் அதாலத்களும் பெரிய முன்னேற்றம்தான். சாலை விபத்து வழக்குகளைத் துரிதமாகத் தீர்த்து வைக்கின்றன.''

''சில சமயங்களில் போலீஸில் புகார் செய்வதே வினையாக முடிகிறது. போலீஸ் சிலரை விசாரிக்கப் போய், விசாரணைக்கு உள்ளாகும் 'குண்டர்'கள் புகார் செய்தவருக்கு மேலும் தொல்லை கொடுக்க ஆரம்பிக்கின்றனர். இந்த நிலைமைக்குப் பயந்து பலர் புகாரே செய்வதில்லை. **FIR** பதிவு செய்யாமலே விசாரணை செய்ய வசதி கிடையாதா?''

''சில குற்றங்களைப் பொறுத்தவரை பாதிக்கப்பட்டோர் மட்டுமே வழக்குப் பதிவு செய்யலாம். (மான நஷ்ட வழக்கு போன்றவை). சமூகத்துக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைப் (கொலை போன்றவை) பொறுத்தவரை யார் வேண்டுமானாலும் வழக்குப் பதிவு செய்யலாம். மிரட்டலுக்குப் பயந்து போலீஸிடம் போகாமலிருப்பதை விடவும் பொருளாதார வசதியில்லாததாலும் போதிய கல்வி அறிவு இல்லாததாலுமே பல குற்றங்கள் வெளிச்சத்துக்கு வருவது இல்லை.''

''அப்படியானால் குற்றங்களின் எண்ணிக்கை புள்ளி விவரங்களைக் காட்டிலும் அதிகமாகத்தானிருக்கும் என்று சொல்லுங்கள்.''

''நிச்சயமாக...! நிச்சயமாக...! இதில் இன்னொரு வேடிக்கை பாருங்கள். சில சமயங்களில் ஒரு பெண் தன் கணவன் தன்னைக் கொடுமைப்படுத்தினான் என்று

வழக்குத் தொடர்வாள். வழக்கு நடந்து கொண்டிருக்கும்போதே அவள் மனம் மாறிப் போய் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுவாள். அந்த மாதிரி சமயங்களில் அவள் கூறும் சாட்சியங்களை நீதிமன்றம் ஏற்காது. குற்றவாளி தப்பிவிடுவான்! அவள் மனம் மாறியது ஏன் என்று ஆராய்ந்தால் ஒன்று ஆசை வார்த்தையாக இருக்கும்; அல்லது மிரட்டலாக இருக்கும். ஆனால் வெளியே விவரம் தெரிய வராது!''

''நீதித் துறையில் பெண்கள் மிகக் குறைவாக இருக்க என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள் ?''

''இந்தத் தொழிலில் ஒரு நிச்சயமற்ற தன்மை இருக்கிறது. அதை வெற்றிகண்டு பேர் பெற்று விட்டாலோ பிறகு இது ஒரு இருபத்து நான்கு மணிநேர வேலையாகி விடுகிறது. ஓய்வு என்பதே கிடையாது. இரவு பகல் அலுவலகம் உங்களோடு ஒட்டிக் கொண்டுவிடும்! மேலும், இத்துறையில் படிப்படியாக உயர்வது மிகவும் கடினம். இவ்வளவு போதாதா நம் நாட்டுப் பெண்களைத் தயங்கச் செய்ய!''

''நீதிபதிகள் தங்கள் தொழிலைச் செவ்வனே செய்து புகழ் அடைவதை வரவேற்கலாம். ஆனால் பிரபலமடைய எண்ணுகிறார்கள். விழாக்களில் பங்கேற்பது; வழக்கறிஞர்கள் தரும்விருந்துகளுக்குப்போவது இதெல்லாம் எந்த அளவுக்குச் சரி?''

''இது அவரவர் மனச்சாட்சியைப் பொறுத்த விஷயம். மற்றவர்களைப் பற்றி என்னிடம் கேட்காதீர்கள். என்னளவில் சொல்கிறேன். நான் பப்ளிக் பிராஸிகியூடராக இருந்த கால கட்டம் ஓர் அஞ்ஞாத வாசம் மாதிரிதான். யாருடனும் பேசிப் பழகிவிட முடியாது. அரசுத் தரப்பு வக்கீல் என்பதால் மிகவும் எச்சரிக்கையாக இருந்தேன். சமூக வாழ்க்கை என்பதே இல்லாமல் போயிற்று!''

மிகமிக மென்மையாகப் பேசிய நீதிபதியின் சொற்களில் அதே அளவிற்கு உறுதியும் காணப்பட்டது. தமது வரம்புகளை உணர்ந்து எல்லைகளை மீறச் செய்யக்கூடிய கேள்விகளைத் தாட்சண்யமின்றி ஒதுக்கினார்: கடைசி கேள்வியாக அவரது குடும்பத்துக்கே திரும்பி வந்தோம்:

''உங்கள் கணவர் மற்றும் குழந்தைகளைப் பற்றிச் சொல்லுங்கள் — குழந்தைகளுள் யாரேனும் இந்தத் தொழிலை மேற்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறதா?''


''கணவர் வைஷ்ணவா கல்லூரியில் கணிதப் பேராசிரியராய் உள்ளார். நான்கு குழந்தைகள்; கடைசி மகள் பாஸிதான் இந்தத் துறையில் ஆர்வம் காட்டி வருகிறாள். போகப் போகத்தான் தெரியும்...'' என்று புன்னகையுடன் பாஸியின் முதுகை வருடினார் நீதிபதி பத்மினி ஜேசுதுரை.

பேட்டி: **நமது நிருபர்கள்**

புகைப்படங்கள், மேலட்டை வண்ணப்படம்:
உத்ரா

அடுத்த இதழ்...

காமராஜர் மாவட்டத்தில் கல்கி—1



''இவங்களைப் பாருங்கய்யா! கலெக்டரிடம் சொல்லுங்கய்யா!''
— கவர் ஸ்டோரி

''கட்டிக்கிட்டா மிலிட்டிரிகாரனைத் தான் கட்டிக்குவேன்!''
— பெருமாள் தேவன்பட்டிக்கு ஒரு விசிட்



• பூன்

• கவாஸ்கருக்குப் பரிசு



ஹிட்ச்காக் தோற்றூர்; கிரிக்கெட் வென்றது!

* அகில உலக திரில் பட மன்னர் ஆல்ஃபிரட் ஹிட்ச்காக்,அவர் கூட கிரிக்கெட் திரில்லுக்கு முன் தோற்றுப் போக வேண்டியதுதான் என்று நிரூபித்தது சென்னை டெஸ்ட். ஆடுகிறபடி ஆடினால் ஒரு நாள் கிரிக்கெட்டை விட ஐந்து நாள் டெஸ்ட் திரில்லாக இருக்கும் ஏன்று உணர்த்தியது.

* ''காவஸ்கர் ரிடயர் ஆக வேண்டுமா?'' என்ற கல்கி தலையங்கத்தை மொழி பெயர்க்கச் செய்து அறிந்து கொண்டு மகிழ்ந்தார் சுனில். அந்தக் கல்கி இதழைப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தினார். என்ன தான் இருந்தாலும் தமது நாமுவது டெஸ்டில் செஞ்சுரி போடாதது அவருக்குக் குறைதான். 'பத்து குறைந்து போச்சே' என்ற அவரிடம் இரண்டு இன்னிங்ஸிலும் சேர்த்தால் நூறைத் தாண்டி விடுமே என்று கூட ஆறுதல் சொல்ல முடியவில்லை!

* ஆஸ்திரேலியாவில், அரசு ஊழியர் — எழுத்தர்தான் ஜோன்ஸ். சென்னையில் இரட்டை சதம் போட்டு அகில உலக ஹீரோவாகிவிட்டார். இங்கே உணவு ஒத்துக் கொள்ளாததால் உடல்நலக் குறைவுக்கிடையிலும் இதைச் சாதித்திருக்கிறார். ஆஸ்திரேலியக் காப்டனும் வைஸ் காப்டனும் ஆளுக்கொரு செஞ்சுரி போட்டனர். இந்தியக் காப்டனும் சளைத்தவரில்லை என்று நிரூபித்தார்.

* வெங்கட் காரியதரிசி பதவி ஏற்ற பிறகு வெளிப்படையாகத் தெரியும் பெரிய முன்னேற்றம் எலெக்ட்ரானிக் ஸ்கோர் போர்டு. 1¼ லட்சம் செலவு.

* பார்டரிடமும் சகாக்களிடமும் ஆட்டத் திறமை இருந்தும் ஸ்போர்ட்ஸ்மன்ஷிப் இல்லை. அம்பயரிடம் முறைப்பது, வாதாடுவது, அதட்டுவது என்றெல்லாம் ரசாபாசமாக நடந்து கொண்டது வருத்தத்தை அளித்தது.

* ஆஸ்திரேலியக் குழுவில் **Clown Prince** என்று அழைக்கப்படுகிறவர் மாத்யூஸ். கோமாளியாகச் சிரிப்பூட்டினாரே தவிர காரியத்தில் அசகாய சூரர். இந்தியா பெற்றிருக்க வேண்டிய வெற்றியை மறுத்து tie ஆக்கியவர் இவர்தான்.

* வெற்றிக்குக் கடைசி வரை பாடுபட்டவர் இதுவரை 2000 ரன்களும் நூறு விக்கெட்டுகளும் எடுத்துள்ள டபுள் சாதனையாளர் ரவி சாஸ்திரி.

* ஐந்தாம் நாள் காலை இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் போலீஸ் நாய்களுடன் கைகுலுக்கி மகிழ்ந்தனர்! வெடிகுண்டு வதந்திகளை நாய்கள் உடைத்தெறிந்ததற்காக இந்தப் பாராட்டு.

* கபிலுக்கு மோதிரம் அணிவித்து மகிழ்ந்தார் ராகவானந்தம்.

* சென்னை டெஸ்ட் ஆயுசுக்கும் நினைவிருக்கும்.

— குண்டுமணி

படங்கள்: பாலாஜி

* உங்களை நினைத்தால் பரிதாபமாய் இருக்குங்க! ஆறு வருஷத்துக்கு முந்தியே எங்கள் ஊர்க்காரர் ஒருவரின் வைக்கோல் போரில்ஏற்பட்ட தீயை அணைக்க வந்த தீ அணைப்புப் படையினர், பேரம் பேசி, ரூபாய் வாங்கிக் கொண்டு போனாங்க! இவ்வளவு நாட்களாய் இந்த விஷயம் தெரியாமல் இருந்திருக்கீங்களே!

கொப்பம்பட்டி,
செ. அன்பு மதியழகன்.

* ஏற்கெனவேஇழப்பால்தவித்துக் கொண்டிருந்த அந்த ஏழை, அப்பாவிகளிடம் தீயணைப்புப் படையினர் லஞ்சம் கேட்ட செயல் மூலம் எங்கள் நெஞ்சங்களில் நெருப்பைப் பற்ற வைத்து விட்டார்கள்!

ஈரோடு — 2, அருண்.

* சேவை மனமும் தூய்மைச் செயலும், மீட்புப் பணிகளில் 'செய் அல்லது மடி' என்ற மந்திரத்தையே மனத்தில் கொண்டு அடக்கமாக வெளி உலகத்துக்குத் தெரியாமல் இருக்கிற தீரம் மிக்க தீயணைப்புப் படை அதிகாரிகளையும், வீரர்களையும் பற்றி ஒரு கட்டுரை நீங்கள் வெளியிட வேண்டுவதும் நியாயமில்லையா?

திருவாரூர், ஜெ. ஜெயராமன்.

* 'கல்கி'யின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து உடனடி நடவடிக்கை எடுத்த மாநிலத் தீயணைப்பு டைரக்டர் ராஜகோபால் பாராட்டுக்கு உரியவர்...!

காரிமங்கலம், கலை ரமேஷ்.

* கொட்டு மேளத்தோடு காட்சியளித்த இசைக் கலைஞர்கள் கொட்டித் தீர்த்துப் பாடிய சோகராகம் எங்கள் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வடுவூர், எஸ். கண்ணன்.

* 'நாணயத்தின் இன்னொரு பக்கம்' கதையில் லஞ்சம் வாங்காத ராமச்சந்திரன் திடீரென்று லஞ்சம் வாங்கும்படி என்ன பலவீனம் அவரிடமிருந்தது என்பதை மலர்வண்ணன் சஸ்பென்ஸாகவே வைத்துக் கதையை முடித்து விட்டாரே?

மன்னார்குடி, வீ. அமிர்தலிங்கம்.

* அப்பப்பா! 'மாத நாவல்கள் என்ன செய்கின்றன?' என்ற பட்டி மன்றத்தில் காரசாரமாகத்தான் வாசகர்கள் மோதிக் கொள்கிறார்கள்! வளரட்டும் உங்கள் பட்டி மன்றப் பணி!

திட்டச்சேரி — 2, சித்ரகுமார்,
பிரேம்குமார், ரதீஷ்குமார்.

"கிளீன் போல்ட் செய்து விட்டீர்!"

* வாழ்க்கைவாழ்வதற்கேபகுதியில் 'வெற்றியின் விலை என்ன?' என்னும் தலைப்பில் வெளியான கடிதக் குறிப்பிலுள்ள துயரச் சம்பவத்தினைப் படித்தவுடன் ஐந்து வயதுச் சிறுவனின் உயிரைப் பலி வாங்கிய இதுபோன்ற தேர்தல் வெற்றி விழாக்களில் — இன்னும் எத்தனை விபரீதங்கள் நிகழப் போகின்றனவோ என்ற வேதனையுணர்வே மேலோங்கியது.

திருச்சி — 5, எம். காமராஜ்.

* இந்திய கிரிக்கெட்டின் ஆதாரசுருதியாக விளங்கும் 'லிட்டில் மாஸ்டரை'ப் பற்றிய தங்கள் தலையங்கம் இந்திய கிரிக்கெட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, கவாஸ்கரின் ரசிகர்களையும், விமர்சகர்களையும் ஒரே சமயத்தில் 'கிளீன் போல்ட்' செய்து, சிந்திக்கத் தூண்டிவிட்டது.

ஸ்ரீரங்கம், ஆர். கோபாலன்.

* புகைப்படம் எடுத்து வெளியிட்ட பின்புதான் திண்டிவனம் பெருமாள் கோயில் வீதியிலுள்ள குடிநீர் வால்வைச் சுற்றித் தேங்கியிருந்த சாக்கடை நீர் அகற்றப்பட்டு இன்றே சரி செய்யப்பட்டது. நகர மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திண்டிவனம், தண்.நடராசன்.

* தங்களது 7.9.86 இதழில் 'உலகமே இருண்ட போது' என்ற கட்டுரையைப் படித்ததும் மனநெகிழ்வோடு அன்பர் உதயசூரியனை எங்களது மதுரை மண்டல அலுவலகம் மூலம் தொடர்பு கொண்டு, அவர் தொழில் தொடங்குவதற்காக நாங்கள் கடன் வழங்கிடத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்தோம். என்ன தொழில் செய்வது என்பதை அவர் இன்னும் முடிவு செய்யவில்லையாதலால், அதுகுறித்த விவரங்களைப் பிறகு தெரிவிப்பதாகக் கூறினார். எந்த நேரமும் எங்கள் வங்கி அவருக்கும், அவரைப் போன்ற நிலையில் உள்ளவர்கட்கும் சேவை செய்வதைத் தலையாய கடமையாகக் கருதுகிறது.

சென்னை — 1, சோம. முத்தய்யன்,
மக்கள் தொடர்பு அதிகாரி,
பாரத ஸ்டேட் வங்கி,
வட்டாரத் தலைமையகம்.

* பாடல் பெற்ற தலமான திருவெண்ணெய் நல்லூர் அருள்மிகு கிருபாபுரீஸ்வரர் ஆலயத்தின் இன்றைய அவலநிலையினை ஆதாரமிக்கப் படங்கள் சிலவற்றுடன் வெளியிட்டு, ஆன்மீகத் தொண்டாற்றியிருந்த உமக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

தோட்டக்குறிச்சி,
இரா. வளையாபதி.

* எதிர்காலத்தைப் பற்றி முன்பே அறியத் துடிக்கும் நமது பலவீனம் எப்படி நம்மை ரோட்டோர ஜோஸ்யர்களிடம் ஏமாறச் செய்கிறது என்பதை 'மவுண்ட் பேட்டன் ரால்' சிறுகதையில் ஹெச். என். ஹரிஹரன் நகைச்சுவை ததும்ப எழுதியிருக்கிறார். கோபனின் படமும் நன்றாக இருந்தது.

சென்னை—86, எஸ். ஆராவமுதன்.

உங்கள்

தீபாவளி

குதூகலம் மும்மடங்காகிறது!

கல்கி நவம்பர் 2உ இதழில்...



காதலின் ஆழ்ந்த உணர்வுகளுக்குத் தொடர்கதை வடிவம் தருகிறார்

உஷாசுப்பிரமணியன்



★★

சின்னச் சின்ன கனவுகள்

— மின்னுகிற தலைப்பில் நெஞ்சை அள்ளுகிற தொடர்கதை எழுதுகிறவர்கள்:

சுபா

மற்றும்

பரபரப்பான முழு நீள நாடகம்

அதிக பக்கங்கள்:

அதேவிலை!



மாதம் ஒரு மாவட்டம்

திரும்பிப் பார்க்கிறோம்...



• திரு. வரதராஜுலு

மறுபடியும் மதுரை, பெரியார், தஞ்சை மாவட்டங்கள்!

"கடந்த மார்ச் மாதக் கல்கி இதழ்களில் மதுரை மாவட்டம் பற்றிய பல்வேறு செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். எழுதப்பட்ட பல்வேறு பிரச்னைகளில் ஒன்று, சோத்துப் பாறையிலிருந்து அகமலை கிராமம் வரை சாலை வசதி எதுவும் இன்றி, அகமலை கிராமத்தில் வாழும் மக்கள் படும் அவதி பற்றித் தாங்கள் குறிப்பிட்டிருந்ததாகும்.

"தற்போது சோத்துப்பாறையிலிருந்து அகமலை கிராமம் வரை 22 கி.மீ. மலைச் சாலையை உருவாக்கி மேம்படுத்தவும், அச்சாலையில் சிறு பாலங்கள் கட்டவும், நில மற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் அரசு, ரூபாய் 97 லட்சம் அனுமதித்துள்ளது. விரைவில் அதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளன என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்...." என்று நமக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் மதுரை மாவட்டக் கலெக்டர் இரா. வரதராஜுலு.

இதற்கு முன்பும், நாம் சுட்டிக்காட்டி எழுதியிருந்த மதுரை மாவட்டப் பிரச்னைகளுக்கு அரசு சார்பில் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் பற்றி மதுரை கலெக்டர் நமக்கு எழுதியிருந்தார். நாமும் பிரசுரித்தோம்.

ஆனால், நாம் சென்று வந்து எழுதிய மற்ற மாவட்டப் பிரச்னைகளுக்கான நடவடிக்கைகள் என்னவாயின? மதுரை மாவட்டக் கலெக்டரைத் தவிர, மற்ற மாவட்டக் கலெக்டர்கள் யாரும் நமக்குத் தெரியப்படுத்தவில்லை!

என்ன காரணம்? மதுரைக்கு அடுத்தபடியாகச் சென்று வந்த பெரியார் மாவட்டத்திலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் நடவடிக்கைகளே எடுக்கப்படவில்லையா? அல்லது 'விளம்பரம் எதற்கு?' என்று நினைத்து, அந்த மாவட்டக் கலெக்டர்கள் நமக்குத் தெரிவிக்காமல் விட்டுவிட்டார்களா? தெரியவில்லை!

அதனால், புதிய மாவட்டங்களுக்குச் செல்வதைத் தற்காலிகமாக ஒத்தி வைத்துவிட்டு, மறுபடியும் பழைய மாவட்டங்கள் சிலவற்றுக்கே சென்று வருவதென்று தீர்மானித்திருக்கிறோம்.

அதன் முதற்கட்டமாக, நவம்பர் மாதத்தில் மதுரை, பெரியார், தஞ்சை மாவட்டங்களுக்கு ரீ—விசிட் செய்து ஏற்கெனவே நாம் சென்று பார்த்து வெளியிட்ட பிரச்னைகளுக்கு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கப் போகிறோம். அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் நம்மிடம் உறுதி மொழி கொடுத்திருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமலிருந்தால், மறுபடியும் அந்தந்த மாவட்டக் கலெக்டர்களைச் சந்தித்து நடவடிக்கை எடுக்கப்படாததற்கான காரணத்தையும் கேட்டுப் பிரசுரிக்கப் போகிறோம். தவிர, அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் பிரசுரிப்போம்.

எனவே, மதுரை, பெரியார், தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள வாசகர்கள், ஏற்கெனவே கல்கி இதழ்களில் வெளியான பிரச்னைகள் மீது அந்தந்த மாவட்டக் கலெக்டர்கள் கொடுத்த உறுதிமொழிப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம். அவற்றோடு கலெக்டர்கள் சொன்னபடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமலிருந்தால் அதுபற்றியும் கல்கி அலுவலகத்திற்கு எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


மதுரை, பெரியார், தஞ்சை மாவட்டங்களிலுள்ள வாசகர்கள், தயவு செய்து அந்தந்த மாவட்டங்கள் பற்றிய புதிய பிரச்னைகளைத் தவிர்த்துவிட்டு, ஏற்கெனவே கல்கியில் வெளியான பிரச்னைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும், நடவடிக்கை எடுக்கப்படாத அவலம் பற்றியும் மட்டுமே எழுதுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கடிதங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 20.10.86

உடனடியாக எழுதி அனுப்புங்கள்!

— ஆசிரியர்

பி.கு.: உறையின் மேல் 'திரும்பிப் பார்க்கிறோம்' என்ற வாசகத்தோடு அந்தந்த மாவட்டப் பெயரையும் எழுத வேண்டியது மிகவும் அவசியம்.



காளிமுத்து!
கோட்டையை விட்டு வெளியே வந்து இந்தி போராட்டத்தில் குதிப்பேன்!
684 கோடி கொடுத்துட்டேன். திட்டங்களை சரியா நிறைவேற்றணும், தெரியுமா?
ஆனைப் பட்ட ஜோதி பாசுவே அலாய்ப் பறந்தாரு. நம்ம கதி...? தாயே!.. மூகாம்பிகே காப்பாத்து!
இந்திப் பிரச்னையை மத்திய அரசுடன் பேசித் தீர்ப்போம்!
தங்கப் பதக்கம் கானல் நீர்.
சியோல் ஆசிய விளையாட்டில் இந்தியா ஜீரோ
ராஜீவ் காந்தி இந்தித் திணிப்பு இல்லேன்னு சொல்லிட்டார்! மாணவர்கள் போராட்டத்தை வாபஸ் வாங்கிடணும்!

கல்கி

1986 அக்டோபர் 5
மலர் 45 இதழ் 10
அக்ஷய புரட்டாசி 19



நேருவின் உறுதி மொழி போதாது!

இ. காங்கிரஸ் எம். பிக்கள் பிரதமரைப் போய்ப் பார்த்துத் தெண்டனிட்டார்கள். ஹிந்தி பற்றிய மத்திய அரசின் சமீபத்திய சுற்றறிக்கை தமிழக மக்களிடையே எதிர்ப்பையும் மத்திய அரசின் உள்நோக்கங்கள் பற்றிய சந்தேகங்களையும் தோற்றுவித்திருப்பதாகச் சொன்னார்கள். உடனே ராஜீவ் அபயம் அருளிவிட்டார்! "கவலையே படாதீர்கள்! 'ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமும் ஓர் ஆட்சி மொழியாக இருக்கும்' என்று என் தாத்தா அளித்த உறுதி மொழியை என் தாயார் காப்பாற்றியது போல் நானும் காப்பேன். ஹிந்தி பேசாத மக்கள் மீது ஹிந்தியைத் திணிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆட்சி மொழி விஷயத்தில் அரசின் கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை" என்றெல்லாம் கூறி மூளைச் சலவை செய்து அனுப்பிவிட்டார்! நமது தமிழக அமைச்சர்களும் படுதிருப்தி அடைந்து, "கிளர்ச்சிகளுக்கு இனி அவசியமேயில்லை" என்று ஜால்ராபோட்டு விட்டனர்.

இவர்களில் யாருமே பிரச்னையைப் புரிந்து கொள்ளவேயில்லை. நாம் எதை எதிர்க்கிறோம்-என்பதையும் உணர்ந்து கொள்ளவில்லை. 'மொழிக் கொள்கையில் மாற்றம் இல்லை' என்றல்லவா ராஜீவ் கூறுகிறார்? நாம், 'மாற்றம் வேண்டும்' என்கிறோம். 'மும்மொழித் திட்டம் என்பது இருமொழித் திட்டமாக வேண்டும்' என்கிறோம். 'இதற்கு அரசியல் சாசனத்திலேயே மாற்றம் செய்து ஹிந்தி பேசாத மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்' என்கிறோம். 'மத்தியில் ஆங்கிலமும் ஓர் ஆட்சி மொழியாக இருக்கும்' என்றல்லவா நேரு உறுதி அளித்தார்? அது போதாது. 'ஆங்கிலம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்கும்' என்ற உறுதி மொழியை நாம் கோருகிறோம்.

காரணம், ஹிந்தி மீது உள்ள வெறுப்புமல்ல; ஆங்கிலம் மீது உள்ள மோகமும் அல்ல. மாநிலங்களில் பிராந்திய மொழிகள் ஆட்சி செலுத்த, மத்திய-மாநில உறவுக்கும் மாநிலங்களிடையே கருத்துப் பரிமாறலுக்கும் அகில உலகத் தொடர்புக்கும் ஆங்கிலமே இருக்க வேண்டும் என்கிற திட்டம்தான் இந்திய மக்கள் அனைவரையும் சரிநிகர் சமானமாகக் கருதும் திட்டம் என்பதால்தான் இரு மொழித் திட்டத்தை வலியுறுத்துகிறோம். தாய்க்கு அடுத்தபடியாக ஒருவன் தாய்மொழியை நேசிக்கிறான், பக்தி செலுத்துகிறான். நாம் அனைவரும் இந்தியர் என்றால் இங்கு வழங்கும் ஒவ்வொரு தாய்மொழியும் சம அந்தஸ்து பெற வேண்டும். இல்லையெனில் ஹிந்தி பேசுவோருக்கு மேலாதிக்க உயர்வு மனப்பான்மை உண்டாவதும் ஏனையோருக்கு இரண்டாந்தரப் பிரஜை என்ற தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதும் தவிர்க்க முடியாது போகும். நாளடைவில் தேசிய ஒருமைப்பாடு குலையும். இந்தப் பேராபத்தைத் தவிர்க்கவே இருமொழித் திட்டத்தை அடிக்கடி அடிக்கோடிட்டுப் பரிந்துரைக்கிறோம்.

இதற்கு அரசியல் சாசன ரீதியான உறுதிமொழி கிடைக்காத வரையில், குழந்தையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவது போல, ஹிந்தி திணிப்பை நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பலவிதங்களில் நடத்துவதும் அவ்வப்போது இதற்கு எதிர்ப்பு, கிளர்ச்சி என்று தலைதூக்கும் போது பிரதமர் ஆறுதலாகப் பசப்பு வார்த்தைகளால் அறிக்கை விடுவதும் ஆமாம் சாமிகள் தலையாட்டி மகிழ்வதும் தொடரும். ஹிந்தி தெரியாத ஒருவன் வடக்கே வியாபாரம் செய்ய முடியாது என்றால், ஹிந்தி பேசாத ஒருவன் தில்லியில் சுற்றுலா சென்று மகிழ முடியாது என்றால், அவன் மீது ஹிந்தி திணிக்கப்படுவதாகத்தான் அர்த்தம். இப்படி மறைமுகமாகவும் நேர்முகமாகவும் பலவிதங்களில் ஹிந்தி பிறமொழிக்காரர்கள் மீது திணிக்கப்பட்டு வருகிறது. ஹிந்தி பிரசாரம், வளர்ச்சிக்கென்று கோடிக் கணக்கில் செலவிடப்படுவதே திணிப்பு நடக்கிறது என்பதற்குப் போதிய அத்தாட்சி. டி. வி., சினிமா, பத்திரிகை விளம்பரங்கள் என்று பலவகையிலும் ஹிந்திக்கு ஆதரவு தேடப்படுகிறது. மத்திய அரசு ஊழியர்கள் மிரட்டலுக்கும் ஆசை காட்டலுக்கும் மாறி மாறி உள்ளாகிறார்கள்.

'இந்தியாவுக்கென்றே ஓர் இந்திய மொழி வேண்டாமா? அது ஹிந்தியாகத்தானே இருக்க முடியும்?' என்பது அழகிய சூர்ப்பனகை வாதம். மூக்கை வெட்டினால் அரக்கியின் சொரூபம் காண்போம். அந்த அரக்கி நம்மைப் பிரிவினை என்ற படுகுழியில் தள்ளவே பார்ப்பாள். 'இந்தியாவுக்கென்று ஓர் இந்திய மொழி இருக்கிறது. இருநூறு ஆண்டுகளாக நம்மிடமிருக்கும் அருமையான சர்வதேச மொழி, நம்மை ஒருமைப்படுத்திய மொழி. அதை விட்டுவிடாதீர்கள். தொடர்ந்து நம்மை ஐக்கியப்படுத்தி வைக்க அதையே பயன்படுத்துங்கள்' என்கிறோம் நாம்.

இதையெல்லாம் நாம் எடுத்துக் கூறும்போது ஹிந்தி வெறியர்கள் புரிந்தும் புரியாதது மாதிரி நடிப்பார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக நமது பிரதமர் மாற்றுக் கருத்துக்களுக்கு ஓரளவேனும் மதிப்பளிப்பவராக விளங்குகிறார். எனவே கருணாநிதி, கிளர்ச்சிகளைத் தூண்டுவதற்குப் பதில் ஹிந்தியல்லாத பிறமொழி அறிஞர்களை அழைத்து மாநாடு நடத்தலாம். [illegible] தீர்மானங்களுடன் பிரதமரைச் சந்தித்துப் பேசலாம். பயன

...த்திரு நாடு தன்னைப் பெற்ற'
...என்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


1926 - 1986
நரசுஸ் காபியின்
வைர விழா
வெகுமதிகள்!
நரசுஸ்
காபி
1926-1986
• 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் பிளேட்.
• 10 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
• 5 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் 'ஆனந்த்' டம்ளர்.
• 1½ கிலோ நரசுஸ் காபிக்கு துணிப்பை.
• 500 கிராம் நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் ஸ்பூன்.
REGD NO 58573
100% PURE COFFEE
NARASU'S COFFEE
NARASU'S COFFEE COMPANY
Head Office: SALEM.
BRANCHES ALL OVER TAMILNADU
மொத்தமாகவோ, சில்லரையாகவோ, வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள்.
29.9.86 முதல் 31.10.86ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.
ஜீவனுள்ள ஒரே காபி
நரசுஸ் காபி
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.
ADWAVE/NCC/3193

பாகிஸ்தானில் ஒரு பெண் புலி!



ஒரு மாத காலம் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியே வந்திருக்கிறார் பெனாஜீர் புட்டோ. அவர் விரும்பி ஏற்ற சிறைவாசம். உண்மையில் 'எங்கே நம்மை ஜியா சிறைப்படுத்தாமலிருந்து விடுவாரோ' என்ற கவலைதான் அவருக்கு ரொம்ப இருந்து வந்தது. ஏனெனில் சிறைவாசம் என்பது அரசியலில் அனுகூலம்! அது பெனாஜீருக்குத் தெரியாதா என்ன? இந்தச் சிறைவாசம் முன்னெப்போதையும் விட பெனாஜீருக்கு ஆதரவையும் அனுதாபத்தையும் பெருக்கியுள்ளது.

பெனாஜீரின் அரசியல் என்ன? 'பாகிஸ்தானில் ஜனநாயகத்தை மலரச் செய்வது தான்' என்று அவர் கூறிக் கொள்கிறார். 'இந்தக் குறிக்கோளை அடைய ஜியாவை எதிர்ப்பது தம் கடமையாகிறது' என்கிறார். ஜியாவின் ராணுவ ஆட்சியை எதிர்க்கும் எம். ஆர். டி. (**Movement for the Restoration of Democracy**) என்ற பல கட்சிக் கூட்டமைப்பினைச் சேர்ந்த ஒரு கட்சியே **PPP** என வழங்கும் **Pakistan Peoples Party.** இதன் தலைவி பெனாஜீர் புட்டோ.

ஜியா ஆட்சியின் ஆரம்பத்தில் பெனாஜீரின் தந்தை புட்டோ தூக்கிலிடப்பட்டதை பாகிஸ்தானிய மக்கள் மறந்து விடவில்லை. இந்தக் கொடூரமான சம்பவத்தினால் புட்டோவின் எதேச்சாதிகாரப் போக்கையும் மறந்து அவர்பால் அனுதாபமே கொள்ளலாயினர். இச்சம்பவம் நிகழ்ந்து ஏழு ஆண்டுகள் கழித்து இன்று — பெனாஜீர் அனுதாப அலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இயங்கி வருகிறார். அவரது கொள்கை 'புட்டோயிஸம்;' அவரது குறிக்கோள் ஜனநாயகம். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று முரணானவை என்று பலர் கூறி வருவதில் உண்மையில்லாது போகவில்லை. ஏனெனில் புட்டோவின் ஆரம்ப கால 'ஜனநாயகம்' சீக்கிரமே மாறிவிட்டது. அவர் ஃபாஸிசக் கொள்கைகளை ஏற்று, ஒரு கட்சி ஆட்சியை நிறுவ முயன்றார். அதைச் சாதகமாகக் கொண்டு ஜியா ராணுவ ஆட்சியை நிறுவி புட்டோவைத் தூக்கிலிட்டார். பாகிஸ்தானில் அடுத்தடுத்து நடந்த ஆட்சி மாற்றங்களில் பல, அமைதியான முறையில் நிகழ்ந்தவை அல்ல.

'பெனாஜீரின் பதவி ஆசை மட்டுமே மெய்யானது. அவரிடமும் அப்பாவைப் போலவே சர்வாதிகாரப் போக்கு இருக்கிறது. எம். ஆர். டி. யின் இதர கட்சிகளைக் கலந்தாலோசிக்காமலே அவர் ஜியாவுக்கு எதிராகப் போராட்டத்தில் இறங்கிவிட்டார்' போன்ற குற்றச் சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. ஆனால் பெனாஜீரிடம் பாக் மக்கள் பெரு நம்பிக்கை வைத்திருப்பதை பாகிஸ்தானில் ஒவ்வொரு பொதுக் கூட்டத்திலும் அவர் ஏராளமான மக்களை ஈர்ப்பதிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

எட்டு வருடங்களுக்கு முன் தமது தந்தை தூக்கிலிடப்பட்டபோது தலைமறைவானார் பெனாஜீர். சென்ற ஆண்டின் இறுதியில் அமெரிக்காவின் வற்புறுத்தலின் பேரில், ஜியா ராணுவ ஆட்சியைத் தளர்த்தி ஒரு பிரதம மந்திரியை நியமித்தார். பாக் அரசியல் சூழ்நிலை சற்றுச் சாதகமாகியுள்ளதை உணர்ந்து தமது அஞ்ஞாதவாசத்திலிருந்து வெளிப்பட்டார் பெனாஜீர். இங்கிலாந்திலிருந்து திரும்பியவருக்குப் பாகிஸ்தானில் அமோக வரவேற்பு காத்திருந்தது.

முப்பத்திரண்டு வயதான பெனாஜீர் புட்டோ ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். பேச்சுத் திறனாலும் ஆளுமையாலும் மக்கள் கூட்டத்தைக் கட்டிப் போடும் ஆற்றல் படைத்தவர். ராணுவ ஆட்சியின் கீழ் அவதியுறும் பாகிஸ்தான் மக்களுக்கு ஜனநாயகம் என்ற சொர்க்கத்தை இவர் தருவதாக வாக்களித்துள்ளார். 'புட்டோ மட்டுமே ஹீரோ; ஏனையவரெல்லாம் ஜீரோ' போன்ற கோஷங்கள் முழங்குகின்றன. புட்டோவுக்கு ஆதரவான

வாசகங்களையும் படங்களையும் தாங்கிய 'டீ' ஷர்டுகளைப் பலர் அணிந்து கொள் கின்றனர்.

பெனஜீர் கைதானதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் கலவரங்கள் தோன்றின. பஞ்சாப் பகுதியில் ராணுவம் எளிதாகக் கலவரத்தை அடக்கி விட்டாலும் சிந்த் பகுதியில் நிறைய வன்முறையும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டன. சிந்த் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பகுதி என்பதோடு இனக் கலவரங்களுக்குப் பெயர் போனதும் கூட. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் சிந்தி இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டி யுள்ளன. இப்பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் கண்மூடித்தனமாகச் செயல்பட்டுப் பல பெண்களையும் குழந்தைகளையும் கூடக் கொடுமைப்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸில் திருமதி அக்விேனா நிகழ்த்திய புரட்சியைப் போல பாகிஸ் தானிலும் நிகழ்ந்து, மக்கள் ஆட்சி மலர வாய்ப்பு இருக்கிறது என்று பலர் எண்ணுகி றார்கள். ஆனால் அமெரிக்க ஆதரவுடன் தாம் பதவியில் தொடர்வது நிச்சயம் என்று ஜியா நினைக்கிறார். ஒரு வேடிக்கை என்ன வென்றால் அமெரிக்கா ஜனநாயகப் பண்பில் ஊறிய நாடு என்றாலும் பல அயல்நாடு களில் தொடர்ந்து யதேச்சாதிகாரத்தையே ஆதரித்து வந்து கெட்ட பெயர் சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. பிலிப்பைன்ஸிலும் கடைசி வரை மார்க்கோஸுக்குத்தான் ஆதரவு அளித்து வந்தது. பிலிப்பைன்ஸ் போல பாகிஸ்தானிலும், அமெரிக்காவை மீறி ஜனநாயகம் மலருமா? நமக்குச் சந்தேக மாய் இருந்தாலும் பெனஜீர் ரொம்ப நம்பிக் கையுடன் இருக்கிறார். காலிஸ்தான் கோரிக்கை பற்றி அவர் தமது கருத்தைக் கூறியுள்ள விதத்தைப் பாருங்கள்:

"காலிஸ்தான் கோரிக்கையை நான் எப்படி ஏற்க முடியும்? காலிஸ்தானின் தலைநகரம் லாகூர்; அதன் வரைபடத்தின் ஒரு பாதியில் பாகிஸ்தானியப் பிரதேசங் களே அடங்கியுள்ளன. காலிஸ்தானுக்கு அங்கீகாரம் அளிப்பதானால் நான் பாகிஸ் தானையே துண்டாட வேண்டியிருக்கும். தேச ஒற்றுமையைப் பாதுகாப்பதுதான் என் கடமையே தவிர அதனைத் தகர்ப்பது அல்ல!"

பெனஜீர் புட்டோ சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் இப்படிப் பேசியிருப்பதன் மூலம் 'பாகிஸ்தான் தலைமை தம் கைக்கு வந்துவிடும்' என்ற தமது நம்பிக்கையை உணர்த்துவதோடு அதனால் இந்தியாவில் பஞ்சாப் பிரச்னையின் போக்கே மாறி விடக் கூடும் என்று கருதவும் இடமளித்துள் ளார்.

ஆம், பாகிஸ்தானில் மக்களாட்சி மலர்ந்து காலிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு அங்கு கிடைத்து வரும் ஆதரவு நின்றால், இந்தியா விலும் அவ்வியக்கம் வலுவிழந்து போக வேண்டியதுதானே!

— எஸ்ஸார்

தர்ம அடி எப்படி இருக்கும்?



° பரிசுக்கா எழுதினர்?

° புள்ளி விவரம்





° கணிப்பு சரியா?

° திப்புவைத் துப்பறிந்து...



நீங்கள் கேட்டவை — தராசு

° ஸி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்

? "நோபல் பரிசு பெறும் நோக்கத்துடன் பாரதியார் ஆங்கிலத்தில் எழுதினர்" என்ற க.நா.சு.வின் கணிப்பு ஏற்கக் கூடியதா?

! Fox with the Golden Tail என்று ஒரு கதையை ஆங்கிலத்தில் எழுதினர் பாரதி. இதைப் படித்த அந்தக் காலத்து ஆங்கிலேயர் மட்டுமின்றி ஆங்கிலம் படித்த இந்தியரும் 'ஆஹா, ஓஹோ' என்றனர். ஆங்கிலத்தில் எழுதினல்தான் கௌரவம் என்ற இந்த அடிவருடி மனப்பான்மையைப் பார்த்து, "கிடக்கிருன்கள் விதவைப் பயல்கள்" என்ருர் பாரதி. "எவ்வளவோ தமிழில் எழுதினேன். கவனிக்கவில்லை. இதற்குப் போய்க் குதிக்கிருன்களே" என்று ஆதங்கப்பட்டார். அப்படிப்பட்ட பாரதியா நோபல் பரிசுக்கு ஆசைப்பட்டு அதற்காக ஆங்கிலத்தில் எழுதியிருப்பார்? ஏற்க முடியவில்லையே!

* யூ. ஷேக் முகம்மது, திருச்சி

? நடிகர் திலகம், அஞ்சா நெஞ்சன், இலக்கியச் செல்வர் மூவரும் சேர்ந்து மும்மூர்த்தி காங்கிரஸ் என ஏற்பாடு செய்தால் விளைவு எப்படி இருக்கும்?

! மூன்று நாளில் உடைந்து விடும்.

* கே. விஸ்வநாதன், கோவை

? பதவி பெரிதா, செல்வம் பெரிதா, கல்வி பெரிதா, செல்வம் பெரிதா? குணம் பெரிதா, செல்வம் பெரிதா?

! இதையும் சேர்த்துக் கொள்ளுங்கள். வாசகர் எழுதும் கேள்வி பெரிதா, கல்கி வழங்கும் பரிசு பெரிதா?

* ஆர். கே. அருள் செல்வன்,
விக்கிரபாண்டியம்

? இப்போது யார் காட்டில் மழை?

! காட்டில் இல்லை, திருமலைப்பிள்ளை ரோட்டில் மழை!

* வீ சக்திவேல், திருப்பூர்

? இந்தி திணிப்புக்கு மாணவர் போராட்டம் அவசியம்தானு?

! அவசியமில்லைதான்; ஆனல் அதைவிட அவசியமில்லாதது ஹிந்தி திணிப்பு என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணரக்காணுமே?

* டி. தாழை பிரபு, குடியாத்தம்

? ராஜீவ் காந்தி மக்களிடம் என்ன கேட்டுக் கொண்டிருக்கிருர்?

! எந்த மக்களிடம்? பாரத மக்களிடமா? அயல் நாட்டினரிடமா? பதவி ஏற்ற பிறகு 77 நாட்கள் வெளி நாடுகளில் இருந்திருக்கும் ராஜீவ் 25 நாடுகளில் சுற்றி நமது வரிப் பணத்தில் 20 கோடி செலவழித்துள்ளார் என்று ஒரு புள்ளி விவரம் சொல்கிறது!

* ஜி. சந்தானம், கும்பகோணம்

? தமிழகத்தில் ஒரு பெண் முதல்வராக வந்தால் எப்படி இருக்கும்?

! கவர்ச்சிகரமாக இருக்கும்.

* கா. அப்துல் மஜீத், திருமயம்

? கடலூர் நகர சபைத் தலைவர் செய்த வசூல் மோசடியினைப் பார்த்திரா? கண்ணை மூடிக் கொண்டு எதிர்க் கட்சியை ஆதரித்தீரே! இப்போது என்ன கூற விரும்புகிறீர்?

! ஆட்சியில் இருப்பவர்கள் செய்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டுவது என்பது எதிர்க் கட்சிகளைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதாகாது. இதை நீர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூற விரும்புகிறேன். அடுத்தாற்போல், ஊழல் செய்ததாகக் கருதப்படும் அந்த நபரை தி.மு.க.வை விட்டே நீக்கிவிட்டாரே கருணாநிதி, அதைக் கவனித்தீர்களா? என்று கேட்க விரும்புகிறேன்.

* இந்திரா, சென்னை — 17

? கொங்குத் தமிழ்; சென்னைத் தமிழ்; நெல்லைத் தமிழ்; தஞ்சைத் தமிழ்; தில்லி தமிழ் — உங்களுக்குப் பிடித்தது?

! ஏன் ரேடியோ தமிழையும், டீ.வி. தமிழையும் சேர்த்துக் கொள்வதுதானே? எனக்குப் பிடித்தது தமிழ்.

* வி. பாலகிருஷ்ணன், மோகனூர் *

? ஆஸ்திரேலிய அணியினரின் விளாசல் எப்படி ஸார்?

! ஜோன்ஸின் இருநூறும் மற்ற இருவரது செஞ்சுரிகளும் கங்காரு பாய்ச்சல் என்றால் ஷ்பாலோ ஆனைத் தவிர்த்த கபிலின் ஆட்டம் இமாலய சாதனை. பார்டர் டிக்ளேர் செய்து ஆட்டம் சூடு பிடிக்க வைத்தது எல்லையற்ற பெருந்தன்மை எனில் கபில் அந்த சவாலை ஏற்று தோழர்களை வெற்றிக்கு விளையாடத் தூண்டியது தேவர்களையும் மகிழச் செய்வது. காவஸ்கர் முதல் இன்னிங்ஸில் அளித்த ஏமாற்றத்தை இரண்டாவதில் துடைத்தெறிந்தார் எனில் மற்றவர்கள் விக்கெட்டுகளைத் தூக்கி எறிந்ததன் மூலமே சாதனை படைத்தார்கள்! அதனால்தானே சரித்திரத்தில் இடம்பெறும் வகையில் முடிச்சில் முடிந்தது சென்னை டெஸ்ட்!

* ராகவன், திருநெல்வேலி

? திப்பு சுல்தான் நூலுக்காக ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் பரிசு ரூ 20000 பெற்றுள்ள லட்சுமி நாராயணன் பற்றி...?

! மாணவப் பருவத்திலேயே அவருக்குத் திப்பு சுல்தானிடம் ஒரு ஈடுபாடு ஏற்பட்டு விட்டது. காரணம் வாலாஜா பேட்டையில் அவர் பார்த்த திப்புவின் குழந்தைகளின் சமாதிகள். அக்குழந்தைகள் ஆங்கிலேயரால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்கள். பின்னர் சுதந்திரப் போராட்டத்தின் ஓர் அங்கமாகக் கிராம நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்தபோது திப்பு வாழ்ந்து அரசாண்ட பல இடங்களுக்குப் போய் வந்தார். பல தகவல்கள் திப்பு பற்றிக் கிடைத்தன. குறித்துக் கொண்டார். ஆனால் நூல் எழுதத் தூண்டியவை இரண்டு: முதலாவது, 'திப்பு சிறந்த வீரன், தேசியவாதி; அவன் சரித்திரத்தை பிரிட்டிஷார் உண்மைக்குப் புறம்பாக எழுதியிருக்கிறார்கள்' என்று ராஜாஜி சொன்னது; இரண்டாவது ஸ்டார் பிரசுரத்தார் அளித்த ஊக்கம். எழுதி முடிக்க மூன்று ஆண்டுகள் ஆயின. பத்திரிகை ஆசிரியராக நல்ல அனுபவம் பெற்றுள்ள லட்சுமி நாராயணன் பல நாவல்களும் எழுதியுள்ளார். இன்று அறுபத்தேழு வயதான இவர் இன்னமும் எழுத விரும்புகிறார் — ஓர் உதவியாளர் துணையுடன். காரணம், இரண்டு வருஷங்களுக்குமுன் ஒரு பஸ் விபத்தில் வலக்கரத்தை இழந்துவிட்டது தான்!

* சைதை முரளி, சென்னை — 15

? தர்ம அடி என்றால் எப்படி இருக்கும்?

! ஒருநாள் பிற்பகல் வேளையில் தெருவில் ஒரே கூச்சல். என்னடா என்று பார்த்தால் ஒரு பத்து வயசுப் பையனை ஒரு வீட்டுக்காரர், அவர் மனைவி, இரண்டு பிள்ளைகள் அத்தனை பேரும் சேர்ந்து மொத்திக் கொண்டிருந்தார்கள். பையன் யாரும் கவனிக்கவில்லை என்று நினைத்து கேட்டைத் திறந்து வந்து காயப் போட்டிருந்த துணிகளை நைஸாகத் திருடப் பார்த்ததின் விளைவு! தெருவோடு போனவரெல்லாம் ஆளுக்கொரு குத்து முதுகில் வைக்கத் தயாரானார்கள். குறுக்கிட்டால் எனக்கே விழும் போலிருந்தது. ஆக மொத்தம் தர்ம அடி பரிதாபத்தை ஏற்படுத்தியதோடு என் கையாலாகாத்தனத்தை உணர்த்தி சுய பச்சாதாபத்தையும் உருவாக்கியது.

* ரூ 10 பரிசு பெறுபவர்:
வி. பாலகிருஷ்ணன்,
32, முதல் அக்ரஹாரம்,
மோகனூர் 637 015.
சேலம் (மா.அ.)

உண்மையிலேயே பாதுகாப்பை விரும்புவோர்க்கு

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

டெபாசிட்தாரர்களுக்கு கூடுதல் வட்டி

கீழ்க்கண்ட வட்டி விகிதங்களில் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

+2% வழக்கமான விகிதத்துடன் வழங்கப்படுகிறது

1-வருடம்	17+2	19%
2-வருடங்கள்	18+2	20%
3-வருடங்கள்	19+2	21%
5-வருடங்கள்	22+2	24%

ரூபாய் 20,000/க்கு மேல் டிபாசிட் செய்யும் ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ஊக்க போனசும், மிக மதிப்புள்ள அன்பளிப்பும் வழங்கப்படும்.

உங்கள் டெபாசிட்டுகளை அனுப்பும் முகவரி

சென்னை	: 91, உஸ்மான் ரோடு, (சிவா-விஷ்ணு கோயில் அருகில்) தி.நகர், சென்னை-600 017. போன் : 447186/442218/445480
பெங்களூர்	: 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003. போன் : 366971
திருச்சி	: 22, மதுரை ரோடு (முதல் மாடி) ராஜா தியேட்டர் அருகில் திருச்சி-620 008. போன் : 31376/29772
பாண்டிச்சேரி	: 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) 2வது மாடி. பாண்டிச்சேரி-605 001. போன் : 6493
தஞ்சாவூர்	: எண் : 2 & 3 முதல் மாடி, ஜி.ஏ.கனல் ரோடு, தஞ்சாவூர்-613 001, போன் : 1626
திருவண்ணாமலை	: 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601, போன் : 2483
பட்டுக்கோட்டை	: 121, தலையாரி தெரு, (முதல் மாடி) பட்டுக்கோட்டை-614 601, போன் : 453
கோயமுத்தூர்	: 666, ராஜா வீதி (முதல் மாடி) கோயமுத்தூர்-641 001, போன் : 34369
மதுரை	: 41, வடக்கு வெளி வீதி (முதல் மாடி) மாடர்ன் லாட்ஜ் ஸ்டாப்பிங், மதுரை-625 001.

JAY ADTS

இப்படியும் ஓர் அப்பா!

அப்பா நெஞ்சைத் துடைத்துக் கொண்டு சொல்லிவிட்டார்:

''குரு... பாடம் சொல்லிக் கொடுத்த வாத்தியார். முப்பது வருடப் பழக்கம். மதிக்க வேண்டியதுதான். ஆனா அவர் பேரிலே நிக்குதே ஆறு மாத மளிகை பாக்கி. அதைக் கேட்காம விட்டுற முடியுமா? வாத்தியார் மேலே மதிப்பு வேறே. மளிகைக் கடை பாக்கி வேற. ரெண்டையும் ஒண்ணாக் கலந்துட்டா மரியாதையும் தேருது. பணமும் தேருது. இன்னிக்கு வாத்தியார் வந்தால் பாக்கியைத் தீர்த்துவிட்டுச் சாமான் வாங்கிக்கச் சொல்லு...''

''......''

''என்னடா சும்மா நிற்கிறே? உனக்குக் கூச்சமாயிருந்தால் சொல்லு. கணக்குப் பிள்ளையை விட்டுக் கேட்கச் சொல்றேன்.''

''வேண்டாம்ப்பா!'' — அவசர அவசரமாக மறுத்தேன். கணக்குப் பிள்ளை வசூலாகாத கடன்களுக்கு அமிலக் குண்டு; பாறை மனம்; நாக்கில் சவுக்கு; கொக்கிப் பார்வை; தப்ப முடியாது.

அப்பா எழ, நான் கல்லாவில் உட்கார்ந்தேன்.

கடைத் தெருவை 'தாட்... தாட்' டிக் கொண்டு தினகர் யமஹாவில் வந்தான்.

''சே... இந்த அப்பாக்களே மோசம். பணம், பணம்னு அலையறாங்க'' என்று முணுமுணுத்தான்.

''என்னடா விஷயம்?''

''ப்ச்... உனக்குத்தான் நம்ம வாத்தியார் கதை தெரியுமே. ஆறு மாச வாடகை பாக்கி. போய்க் கேள்டா கேள்டான்னு அப்பா ஒரே ரோதனை. நேத்து போனேன். அவர் சம்சாரத்துக்கு டைபாய்டாம். அஞ்சு ரூபாய் நோட்டை வச்சுக்கிட்டு எந்த மருந்து வாங்கறதுன்னு யோசனை பண்ணிட்டிருந்தார். 'இப்படிக் குடுங்க சார்'ன்னு பிரிஸ்கிரிப்ஷனை வாங்கிப் போய் மருந்து வாங்கினதிலே என் பாக்கெட் மணி காலி. அப்பா அவரை வீட்டைக் காலி பண்ணுன்னு சொல்லச் சொல்றாரு. நான் என்னடா செய்யட்டும்?''

இவன் கேசும் என் கேசுதான்.

ஆமாண்டா குரு. வாத்தியார் மகன் டப்பி மெட்ராசிலே என்னடா பண்றான்? மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறானே, பாவம் — வாத்தியாருக்கு ஒரு முந்நூறோ நானூறோ மாசா மாசம் அனுப்பக்



ரா. குருராசன்

கூடாதா...?"

"அவன் ஒழுங்கா அப்படி அனுப்பிச்சான்னு நீயும் நானும் ஏன் இப்படி இடிபடணும்?"

டப்பியின் இயற்பெயர் சூரி. படிப்பில் சூரன். மனப்பாடப் புலி. நல்ல ஞாபக சக்தி. எங்களுடன் நடுத்தெருவில் கோலி ஆடி முட்டி போட்டு, கில்லி ஆடித் தோப்புக்கரணம் போட்டு, பம்பரத்தின் தலை முழுவதும் தலையாரிக் குத்து வாங்கி அழுது கொண்டே வீட்டிற்கு ஓடியவன். இன்று அவன் மெட்ராசில் பெரிய அதிகாரி. கம்பெனி எம். டி. யின் மாப்பிள்ளை. பெரிய இடத்துச் சம்பந்தம் என்று வாத்தியாரும் கொஞ்சம் கூடத் தயங்காமல் தன் பிராவிடண்ட் பண்ட், கிராஜு



விடி பணம் எல்லாவற்றையும் மகன் கல்யாணத்தில் போட்டு விட்டுக் கவனிப்பாரற்றவரானார்.

கல்யாணமாகி இரண்டு வருடங்களாகின்றன. இன்னும் ஒரு தடவை கூட சூரி தம்பதிகள் ஊர்ப் பக்கம் திரும்பவில்லை. வாத்தியாரின் மருமகளை ஆசை தீரப் பார்க்க வேண்டும் என்பது எங்கள் தெருப் பெண்களது தீராத கனவு.

கல்யாணமான குஷியோ? கடிதம் போட நேரமில்லையோ? மனமில்லையோ?

வாத்தியார் தினமும் தபாலாபீஸ் வாசலில் காத்து நிற்பது தற்கால உண்மை.

இப்பொழுது அவரைக் காப்பாற்றுவது பென்ஷன் பணம் ரூ. 278 தான். தமிழுக்கு டியூஷன் படிக்க ஆள் இல்லை. பதினைந்து ரூபாய் தூரத்தில்தான் மெட்ராஸ். போவதற்குத்தான் அவரால் முடியவில்லை. மனைவியின் வியாதியும் சோதிக்க, நிராதரவானார். எங்கள் கடையில் ஏறும் கணக்கைக் குறைக்க அவர் வீட்டில் வெறும் மோருஞ்சாதம்தான் உண்கிறார்கள் என்று அக்கம்பக்கத்தில் பேசிக் கொண்டனர்.

அம்மாவுக்கு டைபாய்டு என்று டப்பிக்குக் கடிதம் எழுதினார். 'ஆபீஸில் வேலை அதிகம். அம்மா குணம் பெற அர்ச்சனை செய்திருக்கிறேன்'. என்று கபாலி கோயில் விபூதி குங்குமம் கவரில் வந்தது.

இன்று முதல் தேதி. வந்து விட்டார்.

"என்னடா குரு... பேப்பர்லே என்ன விசேஷம்?" செய்தித் தாளை வாங்கிக் கொண்டே சின்னக் காகிதத் துண்டை நீட்டினார்.

400 கிராம் கடலெண்ணெய்,
300 கிராம் மிளகாய்,
250 கிராம் தனியா,
ஒரு சின்னப் பெருங்காய டப்பா.

"இதெல்லாம் ரொம்ப முக்கியமா வேணும். இந்த மாத பென்ஷன் பணம் வந்ததும் தந்துடறேன்."

கணக்குப் பிள்ளையின் வில்லன் பார்வையை மறித்து நானே பொட்டலம் கட்டலானேன்.

"என்ன சார். சூரிகிட்டேயிருந்து லெட்டர் வருதா...?"

"எங்கடாப்பா எழுதறான். அவனுக்கு அங்கே என்ன பிரச்னையோ. என்ன வேலையோ... கல்யாணமான புதிசு. அப்படித்தான் இருக்கும். வர்றேன்... அப்பாகிட்டே சொல்லு..." கிளம்பி விட்டார்.

வியாபார விஷயமாகச் சென்னை போகும் போதெல்லாம் சூரியைப் பார்க்க முயற்சி செய்வேன். கிடைக்கவே மாட்டான். இந்த முறை விடப் போவதில்லை.

கதீட்ரல் சாலை. பச்சை விளக்கு கண் சிமிட்டச் சாலையைக் கடந்தவன் தோளை ஒரு சாக்லெட் மாருதி தொட்டது.

திரும்பினேன் ஆச்சரியம்!

ஸ்டியரிங்கில் சூரி. பக்கத்தில் சாக்லெட் கலர் புடைவை – சாக்லெட் கலர் ஸ்லீவ்லெஸ் ஜாக்கெட்டு – சாக்லெட் கலர் பொட்டில் அணைத்தபடி திருமதி சூரி!

"எங்கடா வந்தே குரு. ஏறுடா வண்டியிலே..."

சிக்னல் மாறுமுன் இடம் மாறினேன்.

"டார்லிங். இவன்தான் குரு. இவன் கடை அரிசி பருப்பைத் தின்னுதான் நான் வளர்ந்தேன். கல்யாணத்திலே பார்த்திருப்பியே."

அரை வினாடிக்கும் குறைவாக என் பக்கம் திரும்பி, அரைக்கால் மி. மீ. உதட்டை விரித்து "ஹலோ" சொன்னாள்.

சூரி சற்றுப் பருத்திருந்தான். வசதி கன்னங்களிலும் கழுத்திலும் உறுதியான புஜத்திலும் தெரிந்தது.

"என்ன சூரி, சௌக்கியமா? எங்கே கிளம்பிட்டே?"

"பிரேக்பாஸ்டுக்குத்தாண்டா. இன்னிக்கு உன் கம்பெனி கிடைச்சிருக்கு."

ஐந்து நட்சத்திர ஓட்டல். போர்டிகோவில் கார் வழுக்கு முன் ஒரு கலர் தொப்பிக்காரர் ஓடிவந்து கதவைத் திறந்தார்.

காலைப் பாதாளம் வரை அழுத்தும் கார்ப்பெட்டு. வரவேற்பில் முழுகிய உதட்டு முறுவல்கள். எல்லாவற்றிலும் நெடுநாள் பழக்க வாசனை வீசியது.

சபையர் கலர் சூட்டில் ஒருவர் டையைத் திருகிக்கொண்டு ஓடிவந்து, "டேபிள் செவன்டீன் பிளீஸ்" என்று வழி காட்டினார்.

டப்பியும் அவன் மனைவியும் அருகருகே உட்கார நான் எதிர்ப்பக்க நாற்காலியில் அமர்ந்தேன்.

"என்ன குரு பார்க்கறே. இதுதாண்டா என் பொசிஷன், ஐஸ் வாட்டர் வேணும்னாக் கூட ஐந்து நட்சத்திர ஓட்டல்லேர்ந்து வரணும். போரடிக்குதுன்னு சொன்னாள்! டேபிள் ரிசர்வ் பண்ணிட்டேன். நீ என்ன சாப்பிடறே சொல்லு. கூச்சப்படாதே. என் டார்லிங் ப்யூர் வெஜ். ஆம்லெட் மட்டும் சாப்பிடுவா."

"தலைவர் என்னவோ அறிக்கை விட்டிருக்காரே என்ன?"

"தன்னோட அஜீரணக் கோளாறுக்கும் தான் கட்சிப் பணத்தைச் சாப்பிட்டதாகக் கூறப்படுவதற்கும் சம்பந்தமில்லைன்னு அறிக்கை விட்டிருக்கார்!"

— கதிர்வேல்



வெள்ளைத் தொப்பிக்காரரிடம் அவன் ஏதோ பேச நான் கொஞ்சம் திருமதியை வேடிக்கை பார்த்தேன்.

தினமும் பில்ஸ் சாப்பிட்டு இளமையைக் காத்துக் கொள்ளும் இருபத்து மூன்று வயது: டைலரின் கத்தரி தாராளமாக இறங்கியிருந்தது. இருட்டிலும் பளபளக்கும் முகம். தப்புப் பார்வையைத் தூண்டும் சந்தனத் தோள்கள். மார்பின் இடுப்பு. பிரெஞ்சு, அமெரிக்க சோப், பவுடர், சென்ட் வகையறாக்கள் லாகவமாகத் தழுவிய உடம்பு. இப்படிப்பட்ட மனைவியை விட்டு ஒரு விநாடி கூட பிரிய யாராலும் முடியாது. தப்புப் பார்வையைத் திருத்திக் கொண்டேன்.

கணவனைத் தோளில் இடித்துக் கொண்டு அவள் லிப்ஸ்டிக்குக்குச் சேதம் வராமல் சாப்பிட்டாள். சூரிக்கும் கூச்சம் இல்லை. என் கண் முன்னாலேயே அவளைச் சுதந்திரமாகத் தொட்டான். கன்னத்தில் விழுந்த முடியை எடுத்துக் காதில் சுற்றி விட்டான். பின்னங்கழுத்து வியர்வையைத் தன் கர்ச்சிப்பால் ஒற்றினான். ஹேர்ப்பின்னிலிருந்து சரிந்த ரோஜாவைச் சரி செய்தான்.

பில் வந்தது. இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை வைத்து விட்டு சூரி எழுந்த போது போன வாரம் என் கடைக்கு முன்பு கடன் கேட்டு நின்ற வாத்தியார் முகம் நினைவுக்கு வந்தது.

"அப்புறம் எத்தனை நாள் மெட்ராசிலே தங்கப் போறே? கடை வியாபாரம் எப்படி?" என்னென்னவோ கேட்டான். தப்பித்தவறிக் கூட அப்பா அம்மாவைப் பற்றிக் கேட்கவேயில்லை. திருமதியும் அப்படித்தான். தனக்கொரு மாமனார், மாமியார் இருக்கிறார்கள் என்ற எண்ணமேயில்லாதவளாகக் காணப்பட்டாள்.

"இப்ப எங்களாலே ஊர்ப்பக்கம் வர முடியாது. எனக்கு ஆபீசிலே டைட் வொர்க். கே. கே. நகர்லே ரெண்டு கிரவுண்ட் நிலம் வாங்கிப் போட்டிருக்கேன். அமெரிக்கன் டைப் வீடு —கன்ஸ்ட்ரக்ஷன் நடந்துக்கிட்டிருக்கு. இவளுக்கு வீடியோ, சினிமா, கிளப்புன்னு பொழுது போயிட்டிருக்கு. பெரிய பேட்டையிலே என்ன இருக்கு. அங்கே வந்தா உட்காரக் கூட வீட்டிலே சோபா இல்லே. எப்பப் பார்த்தாலும் கிழிஞ்ச பாய், அழுக்குத் தலையணை, தரித்திரப் புராணம். சாரிடா..."

"அப்பா அம்மா உன்னைப் பார்க்கணும்னு துடியாத் துடிக்கிறாங்க."

"வந்தாப் போச்சு. எங்கே போயிடப் போறாங்க. அவங்களுக்கு இந்த மெட்ராஸ் 'ஹைப்பப்' பிடிக்காது. இவளுக்கு அந்தப் பட்டிக்காட்டுத்தனம் ஒத்து வராது. என்ன பண்றது...?"

"அப்பா அம்மாவுக்கு மாசா மாசம் ஏதாவது ஒரு இருநூறோ முந்நூறோ அனுப்பினால் கூட நல்லாயிருக்கும்."

"பணமா? அவுங்களுக்கா? எதுக்குடா? பெரிய பேட்டையிலே ரெண்டு பேருக்கு வர்ற பென்ஷன் பணமே ஜாஸ்தி. அங்கே

வாசகர் பட்டி மன்றம் - 10
பரிசு ரூ 300/-



தமிழ்நாட்டில் கல்வித்தரம் —
நெஞ்சு நிமிரச் செய்கிறது
தலைகுனிய வைக்கிறது

உங்கள் முடிவு என்ன? அனுபவ பூர்வமான கருத்துக்களைக் கல்கியில் அரைப்பக்க அளவில் எழுதி அனுப்புங்கள். இரு தரப்பிலும் இரு கட்டுரைகளுக்குப் பரிசு ரூ. 100 × 2.

தவிர, இரு கட்சிகளிலிருந்தும் முக்கியமான ஐந்து ஐந்து கருத்துக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரசுரமாகும். இவற்றுக்கு ஆறுதல் பரிசு ரூ. 10 × 10.

அதிக ஆதரவு பெறும் கருத்து எது என்பதை மதிப்பெண் உணர்த்தும்.

முடிவு தேதி: அக்டோபர், 20.

வேண்டுகோளும் நிபந்தனையும்: உறை மீது "பட்டிமன்றம் — 10" என்று குறிப்பிடுவதுடன் கீழே விலாசம் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்திரித்துக் கட்டுரையுடன் இணைக்கவும்.

பெயர்: ....

விலாசம்: ....

....

சற்றே கவனிப்போம். பார்வைக்கு எளிமையாகத் தோன்றும் இந்த கலர் டிவியை சிறப்பாகத் தயாரிப்பது அவ்வளவு சுலபமல்ல. தோற்றத்தைவிட திறனுள்ள இயக்கத்தை நாடுவோருக்காகவே CTS 605 தயாரிக்கப்பட்டுள்ளது.


CTS 605 கலர் டிவியில் நீங்கள் தைரியமாகப் பணத்தைப் போடலாம்; பின்னர் எதற்கும் கவலைப்பட வேண்டாம். ஏனெனில், பிரபலமான மேற்கு ஜெர்மன் உலகப்புகழ் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஹை-டெக் ITT உறுப்புகளை உபயோகித்து, இதைக் கச்சிதமாகத் தயாரித்து வருகிறோம்.

சாலிடேரின் உன்னத தரத்தைப் பெறுவதற்குக் குறுக்கு வழிகளே இல்லை. தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் திறமையுடன் பரிசோதிக்கப்பட்டு, கடுமையான தரக் கட்டுப்பாட்டுக்கு உள்ளான பிறகே ஒவ்வொரு CTS 605 செட்டும் வெளிவருகின்றது. இல்லையேல், அது சாலிடேரின் உயர்ந்த தரத்தை எட்ட முடியாது. ஆகையால்தான் லட்சக்கணக்கானோர் CTS 605 கலர் டிவியைப் பெருமையுடன் வாங்குகின்றனர். அவர்களையே கேளுங்களேன்!

இப்போது உங்கள் முடிவு என்ன? பணத்தை ஏன் வீணாக்க வேண்டும்? நம்பகத் தன்மை, திறனுள்ள இயக்கம், விற்பனைக்குப் பிந்திய உடனடி சர்வீஸ், உங்கள் பணவசதிக்கு உட்பட்ட விலை ஆகியவை உங்கள் குறிக்கோளாக இருப்பின், CTS 605 வாங்குங்கள். மிஞ்சிய பணத்தை வங்கியில் போடுங்கள்.

இதற்குப் பிறகும் CTS 605 விலை உயர்ந்த செட்டாக உங்களுக்குத் தோன்றவில்லை என்றால், கடவுள்தான் உங்கள் பணத்தைக் காப்பாற்ற வேண்டும்.

இந்தக் கலர் டிவியில் ‘ஹோஹோ’ன்னு சொல்ல என்ன இருக்கு?



CTS 605

தோற்றத்தில் எளிமை. ஆற்றலில் அருமை!

கலர் சாலிடேர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி



50 ரூபாயின் பெறுமானம் 500 ரூ!

சமீபத்தில் அரசு வெளியிட்டுள்ள 50 ரூபாய் நோட்டில் அதன் மதிப்பு 500 ரூபாய் என்பதாக அச்சாகியுள்ளது! சமஸ்கிருதத்தில் குறிப்பிடும்போது 'பஞ்ச சதம்' என்று இருக்கிறது. 'பஞ்ச தசம்' என்பதற்குப் பதில்!

— சம்பத்குமார்

ஆதாரம்: 'சண்டே'

என்னடா செலவு இருக்கு? வீட்டு வாடகை மலிவு. ரிடையர்ட் லைஃப். நான் அனுப்பற பெட்டிகேஷ்லேயா அவங்க வாழ முடியும். இப்ப மணி மார்க்கெட் டைட்...

......

"இன்னிக்கு எங்க பெங்களூர் பார்ட்டிக்காக ஒரு பிளோார் ஷோவுக்கு டேபிள் ரிசர்வேஷன் செய்திருக்கேன். நீயும் உன் அரிசி பருப்பு வியாபாரத்தை முடிச்சுண்டு ஏழரை மணிக்கு வீட்டாண்டை வா. நான் அழைச்சிண்டு போறேன். எனக்கும் இவளுக்கும் அதெல்லாம் பார்த்துப் பார்த்து அலுத்துப் போச்சு."

ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அங்கே இவன் அப்பா ஐந்து குடும்பத்துக்குக் கடன் சொல்லிக் கொண்டு எல்லோர் முன்பும் தலைகுனிந்தபடி நிற்க—இங்கே இவனுக்கு ஐந்து நட்சத்திர ஓட்டலில் பிரேக்பாஸ்ட்! பிளோார் ஷோ!

சே... இவனைப் பார்த்ததே பாவம்... இவனுடன் டிபன் சாப்பிட்டதே என் குருவிற்கு நான் செய்த துரோகம்!

"**மெ**ட்ராஸ் போயிருந்தேன். சூரியைப் பார்த்தேன்."

"அப்படியா? அவன் சம்சாரம் உண்டாகியிருக்காளாமா? அப்படியிருந்தா லெட்டர் எழுதச் சொல்றதுதானே? நீ போறது தெரிஞ்சிருந்தா கொஞ்சம் நார்த்தங்காய் ஊறுகாய் தந்திருப்பேன். பழையது. நார்த்தங்காய் ஊறுகாய்னா முழங்கை வழிய வழியத் தின்பான். எனக்கும் பட்டணம் போக ஆசைதான். இந்த ஓட்டை உடைசல் உடம்போடு எங்கே போக முடிகிறது." வாத்தியார் மாமி பேசப் பேச நான் ஊமையானேன்.

ஊருக்குள் வாத்தியாருக்குக் கடன் கொடுத்தவர்களின் முணுமுணுப்பு அதிகமாகியது. வரதனின் அப்பா ரிடையர்ட் இன்ஸ்பெக்டர். வழி சொன்னார்.

"வாத்தியார் சார், பேசாம பென்ஷனை கம்ப்யூட் செய்துடுங்க. பத்து வருஷங்களுக்குப் பண்ணினா பத்தாயிரம் வரும். கடனையெல்லாம் அடைக்கலாம். வர்ற பென்ஷன் பணம் கொஞ்சம் குறையும். கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியதுதான்."

சொன்னபடி செய்துவிட்டார். பத்தாயிரத்து சொச்சம் வந்ததாகத் தகவல்.

"இனிமேல் கவலைப்பட வேண்டியதில்லை" பல பேர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

நான்கு நாட்கள் கழிந்தன.

அதே தோய்த்துப் போட்ட காடா சட்டை. பழுப்பு பஞ்சகச்சம். விபூதிப் பட்டை மார்பு வியர்வையில் ஊறி ஒட்டிய சட்டைப்பை. சகிதம் வந்தார் வாத்தியார்.

"குரு... இந்த லிஸ்ட்படி கொஞ்சம் சாமான் கட்டித் தாயேன். ரொம்ப அவசரமா வேணும். இந்த மாதம் பென்ஷன் வந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக் குடுத்துப் பாக்கியைத் தீர்த்துடறேன்."

"சார். பென்ஷன் பணம் வந்ததாச்சொன்னாங்களே?"

"ஆமாண்டாப்பா. வந்துது. என்ன செய்யறது சொல்லு. பணத்தை என்ன செய்யலாம்னு கேட்க மெட்ராஸ் போனேன். அங்கே அவன் எனக்கு மேலே கஷ்டத்திலே இருக்கான். எங்கேயோ கே. கே. நகராம். வீடு கட்றானும். சிமெண்ட் வாங்கணும். கம்பி வாங்கணும். கையிலே பணமேயில்லேப்பான்னு ஒன்னு அழுதுட்டான். ஒரு லாரி மணல் நூறு ரூபாயாம். அக்கிரம விலை. இங்கே பாலத்திலே அள்ளிண்டு போக ஆள் இல்லை. எடுத்ததுக்கெல்லாம் காசு. ஏண்டா வருத்தப்படறே. நான் இருக்கேண்டான்னேன். செலவுக்கு வைச்சுக்கோன்னு வந்த பணத்தை அப்படியே கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். இருந்து சாப்பிட்டுட்டுப் போங்கப்பான்னான். உன் கஷ்டம் உன்னோட. என் கஷ்டம் என்னோடன்னு கிளம்பி வந்துட்டேன்.... அப்பா கிட்டே சொல்லி... ப்ளீஸ்..."

எண்சாண் உடம்பையும் கூனிக் குறுக்கிக் கொண்டு என் முன்பு அவர் நின்றபோது—

சட்டென்று எனக்கு அவர் மனம் புரிந்தது.

அந்த மனம்—

தன் மகனுக்குத் தன்னையும் தன் உழைப்பையும் வருமானத்தையும் கொடுத்துக் கொடுத்து, அப்படிக் கொடுப்பதிலேயே பெருமையும் சுகமும் காணும் தந்தை மனம்!

பிரதிபலனாகக் கால் காசைக் கூட மகனிடமிருந்து வாங்கக் கூச்சப்படும் தந்தை மனம்!


இன்று இரவு அப்பா கணக்குகளைப் பார்ப்பார். வாத்தியார் கணக்கில் பார்வை இடறும்.


— அப்பாவின் தாக்குதலுக்கு இப்பொழுது முதலே என்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளலானேன்!

இதுவும் ஒரு தந்தை மனம்!

★★

சென்னை நகரில்.. பட்டப்பகலில்..




ஒரு காருக்குள் விஜிதாவை ஏற்றினார்கள்.
ஐயோ! என்னை எங்கே அழைச்சுட்டுப் போறீங்க?
கூச்சல் போடவோ, தப்பி ஓடவோ நினைக்காதே! கத்தி வைச்சிருக்கேன்! உன் உடம்பிலே கோலம் போடும்!
அழகா இருக்கே! மிடில் ஈ:ஸ்ட்லே ஒரு அந்தப்புரத்துக்கு அனுப்புவோம். நல்ல பணம் கிடைக்கும்.
தினம் உன்னைக் கவனிச்சிட்டு இருந்தோம். இன்னிக்குப் பாட்டியை அனுப்பி வலை விரிச்சோம்!
கார் ஒரு டிரா:பிக் சிக்னலில் நின்றபோது கயவன் பிடி சற்றுத் தளர விஜிதா சரேலென்று வெளியே பாய்ந்து...
காப்பாத்துங்க! காப்பாத்துங்க!
கார் பறந்து விட்டது. விஜிதா ஒரு வீட்டில் தஞ்சம் புகுந்து...
ஹலோ... அப்பாவா உடனே வாங்க...
நம்புவது கடினம்; நடந்தது நிஜம்!

சித்திரம்: ராமு.

சருக்கம் — 26

திருத்தொண்டர் புராணம்

சித்திரை இளவேனில் செல்லமாய் நடம்புரியும் திருவாதிரைத் திருநாள்.

தில்லைக் கோயிலைத் தவிர, நகரில் அமர்க்களங்கள் தெரியவில்லை.

ஆரம்பம் அமைதியாக இருக்கட்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் சேக்கிழார் கட்டளை. அரங்கேற்றத்தை 'ஓகோ' வென்று செய்யலாம் என்று அநபாயகுலோத்துங்க சோழமாமன்னனும் இதற்கொப்ப நடந்து கொண்டான்.

தில்லை நடராசப் பெருமானுக்குப் பூசனைகள் தடபுடலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சந்நிதானத்துக்கு முன் சேக்கிழார் பட்டு வேட்டியுடுத்தி, இடுப்பில் பட்டாலான சிவப்புத் துண்டைச் சுற்றிக் கொண்டும் உடல் முழுவதும் சிவச் சின்னம் பளிச்சிட கரம் கூப்பி நின்று பஞ்சாட்சரத்தை ஓதிக் கொண்டிருக்கிறார்.

நமசிவாயத்தை ஓத ஓத நாடிவந்த பிரகாசமோ என வியக்குமளவுக்கு இமை மூடிய பிரார்த்தனைப் பிரகாசமுடன் நிற்கிறார் முதலமைச்சர் சேக்கிழார்.

நெற்றியில் ஒளிரும் திருநீற்றுக்கு நடுவே குங்குமம். அந்தக் கோமளத்தில் கூத்தன் நடம் புரிகிறார்.

பின்னே அரசர்ப் பெருமானும் அவரைச் சார்ந்தவர்களும்.

ஓம்... ஓம்... ஓம்...

சேக்கிழார் நாவில் உதயமாகி எழுகிற ஓங்கார நாதம்; பிரணவ கீதம்!

திருமந்திர ஓலை நாயகம் என்கிறவனை இதற்கெனவே நேமித்து விட்டான் சோழ மாமன்னன் குலோத்துங்கன். சேக்கிழார் பாடப் பாட எழுத்துப் பிறழாமல் அவன் குறித்துக் கொள்ள வேண்டும்.

முரசு கொட்டுகிறது; ஆலயமணியோசை அம்பலவனைக் கூவியழைப்பது போலக் கேட்கிறது. ஜம்ப தாளம் முழங்குகிறது. சங்கும், கொம்பும், துந்துபியும் அறுபத்து மூன்று நாயன்மார்களை அழைக்கின்றன. அவர்களை வந்து எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் கற்பனையில் வரிசை கட்டி நிற்க வேண்டுகின்றன.

ஏக அமர்க்களமாக வழிபாடுகள் முடிந்து அமைதி நிலவுகிறது.

வெளியே இந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு பட்டத்து யானை பிளிறுவது பளிச்சென்று கேட்கிறது.

முதன் முதலில் தலைநகர்ப் பிரவேசத்தில் யானையில் அமர்ந்து சென்றது சேக்கிழார் நினைவுக்கு வருகிறது. தும்பிக்கை தூக்கிப் பிளிறி வாழ்த்திய யானைமுகம்...

ஓ, விநாயகப் பெருமானே...!

சேக்கிழார் சிந்தாவசைகிறது.

விநாயகனைப் பாடுகிறார்...

'எடுக்கும் மாக்கதை
இன்றமிழ்ச் செய்யுளாய்...

தமிழ் மொழி, காவிரிபோல் தங்குதடையின்றி சேக்கிழாரின் நாவில், கரைபுரண்டு வருகிறது.

திருக்கூட்டத்தை வாழ்த்துகிறார்.

அவையடக்கம் பாட வருகிற போது...

கண் திறந்து பார்க்கிறார்...

எதிரே ஒட்டக்கூத்தர்...

'செப்பலுற்ற பொருளின் சிறப்பினால்..

என்று பாடி அடுத்த அடியையும் பாடி நிறுத்தி...

— பார்க்கிறார் ஒட்டக்கூத்தரை!

கவிராட்சஸரல்லவா?

கூத்தர் பெருமானே...!

'இப்பொருளுக்கு என்னுரை சிறிதாயினும்,
மெய்ப்பொருளுக்கு உரியார்
கொள்வர் மேன்யால்...!'

நீங்கள் மெய்ப் பொருளுக்குரிய மேன்மை மிகு தமிழறிஞர்! உங்களைப் போல் பல்லோர். உங்கள் மேன்மையால் இதனை மேன்மைப் படுத்துங்கள்...

...என்னே அவையடக்கம்!

அநபாயன் குலோத்துங்கன் கண்களில் நீர் ஆறாய்ப் பாய்கிறது. செய்த் தவத்தின் சென்னிமேல் கண்ட பயனல்லவா, திருத்தொண்டர் புராணம்?

அநபாயா......

நீ பணித்த பணியல்லவா, இந்த நாயன்மார் பனுவல் பணி...?

அவையடக்கம் பாடி வருகிற போது...

'தூய பொன்னணி சோழன் நீடூழிபார்
ஆயசீர் அநபாயன் அரசவை!'

'அநபாயன்' என்கிற சிறப்பு விருது செவியில் பட்டதும் குலோத்துங்க சோழ மாமன்னன் மெய்யெல்லாம் புளகம்

மாண்புமிகு முதலமைச்சர்

-கோவி.மணிசேகரன்



கண்டு மேதினியில் பெற்றது இதுவல்லவோ பயன் என்று மேலும் ஆனந்தக் கண்ணீர் பெருகுகிறது.

அவையடக்கம் முடிந்து நூலின் பெயர் என்னவென்றும் பாடுகிறார்.

'திருத்தொண்டர் புராணம்...'

இனி தொண்டர் கதையைத் தொட வேண்டும்!

ஜல்!

அமைதி, அமைதி, அமைதி...

தாம், தித்தாம்... தை... தித்தை.....

மெல்லக் கண்களைத் திறக்கிறார் சேக்கிழார். அங்கே ஜோதி மின்னுகிறது...

திருமலையாம் கைலைமலைச் சிறப்பை 'திருமலைச் சருக்கம்' என்று முதற் காண்டமாய்த் தொடங்குகிறார்...

'பொன்னின் வெண்திருநீறு புனைந்தெனப்' பாடி வருகிறார்.

ஓலை நாயகம் ஓலைகளில் எழுதிக் கொண்டே வருகிறார்...

சேக்கிழாரின் திறந்த அரைக் கண் பார்வையில் முழுக்கண் ஜோதியாய்த் தெரிகிறாள் ஜோதி...

இருகரம் கூப்பி, எழில்மிகு சிற்பமாய், 'எம்பிரான் அனுப்பிய சிவத்தூதுவோ, சிவகாம சுந்தரியின் தூதுவோ' என நிற்கிறாள்...

பாடிவந்த சேக்கிழார்...

'தூயமால்வரை ஜோதியில் மூழ்கி யொன் றூய அன்னமும் காணா தயர்க்கு மால்' என்று ஜோதியை வைக்கிறார்...

"சுவாமி!" — ஜோதி தன்னை மறந்து, தன்னிலை மறந்து முன்னைத் திருவினையோ என மூழ்கி அழைக்கிறாள்...

பாடிக் கொண்டு போகிறார்.

திருமலைச் சிறப்பைப் பாடி முடித்துக் கரம் கூப்பி வணங்குகிறார்.

'இன்று இதுபோதும்; இனி பிறகு தொடருவோம் என்பது போலச் சோழ மாமன்னனைப் பார்க்கிறார் சேக்கிழார் பெருமானார்.

ஜம்பதாளங்கள் முழங்குகின்றன.

கற்பூர ஆராதனையுடன் தொடக்கம் நிறைவு பெறுகிறது.

சித்திரைத் திருவாதிரை அநபாய குலோத்துங்க சோழமாமன்னன் வரலாற்றில் முத்திரை பதித்துவிட்ட முத்தனைய திருநாள்.

திருத்தொண்டர் மாக்கதை தில்லையில் இனிது தொடங்கிய வைபவங்களைக் கேள்விப்பட்டு, தியாகவல்லி தேவி ஒரு புறம் பெருமகிழ்வு கொண்டாள்; மறு புறம் மன்னிக்க முடியாத வருத்தம் கண் டாள்.

அனைவருமே தலைநகர் திரும்பி விட் டனர்.

மாண்புமிகுமுதலமைச்சர்சேக்கிழார்,வழக் கம்போலத் தமது அரசியல் செயல்களில் இறங்கினார். கடந்த ஆறு மாத காலத்தில் என்னென்ன நடந்தது என்பது குறித்து ஆராயத் தீவிரமாக முனைந்தார்.

தியாகவல்லி தேவியோ, முக்கோக்கிழா னடி தேவியோ குற்றம் புரிந்து விட்டவர் கள் போலக் காணப்பட்டனர்.

பெருமைமிக்க அவர்கள், சிறுமைமிக்க செயல் புரிந்துவிட்டதாகவே அவர்கள் நெஞ்சு குத்தியது.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ சேக்கிழார்?

தலைநகருக்கு அவர் வந்து இருதினங்களாகி யும் பட்டத்தரசி ஏன் வரவில்லை என்று அவரும் கேட்கவில்லை. தில்லையில் கேட் டாரா என்று அறிந்து கொள்ள அரசமாக் கணவரிடம், இன்னும் பேச்சு வைத்துக் கொள்ளவுமில்லை. அநபாயனும் அது குறித்துக் கவலைகொள்வதாக இல்லை.

திருமந்திர ஓலைநாயகம் இப்போது அறுபது நாழிகையும் முதலமைச்சர் மாளிகையில் இருக்க வேண்டும் என்பது அநபாயன் கட்டளை. அரசியல் ஓலைகள் எழுதும் நேரம் போக, எந்த நேரம் சேக்கி ழாருக்குக் கற்பனைப் பிரசவம் எடுக்கிறதோ அந்த நேரத்தில் பாடுகிற போது, அவன் ஓலையில் குறித்துக் கொடுக்க வேண்டும்.

ஜோதி சற்று முன்னர்தான் சேக்கிழாரிடம் பேசிவிட்டுத் தனது மாளிகை நோக்கிப் பயணப்பட்டிருந்தாள். அவ்வாறு பயணப் படுகிற போதெல்லாம், சேக்கிழார் மாளி கையிலிருந்து ஜோதி புறப்பட்டதும், எங் கிருந்துதான் குலோத்துங்கன் வெளிப்படு வானோ? — பார்ப்பவர்கள் சேக்கிழாரை பழிக் கண்களுடன் நோக்காதவாறு, 'ஓ... சோழ மாமன்னரும் உடன் சென்று திரும்பு கிறார்' என்று நினைத்துக் கொள்ள உடன் சென்று விட்டுத் திரும்புவான். தனது நாட்டைக் காட்டிலும் முதலமைச்சரின் பெய ரையும் புகழையும் காப்பதில் பெரும் கவனம்

அருள்வாக்கு



ஒவ்வொரு தெய்வத்துக்கு ஒவ் வொன்று முக்கியம். சிவனுக்கு அபிஷேகம். விஷ்ணுவுக்கு அலங் காரம். பிள்ளையாருக்கு நைவேத் யம். ஒரு குழந்தையென்றால் அது எப்போது பார்த்தாலும் "ஹாவு ஹாவு" என்று எதையாவது தின்னத் தான் பறக்கும். கத்தியா, கப டாவா, வாயில் கொள்ளுமா கொள் ளாதா என்றில்லாமல் எதைப் பார்த்தாலும் வாயிலே அடைத் துக் கொள்ளத்தான் குழந்தை பறக்கும். அது என்ன விஷமம் பண்ணினாலும் "அப்பிச்சி தரேன்" என்றுதான் ஸமாதானப்படுத்துகி றோம்! குழந்தை ஸ்வாமியான பிள்ளை யாருக்குக் குறைவில்லாமல் கொழுக் கட்டை, அப்பம், பொங்கல், தேங் காய், பழவகைகளெல்லாம் நைவேத் யம் பண்ண வேண்டும். அவ்வை யாரும் அவரை ஸ்துதிக்க ஆரம் பிக்கும்போதே, "பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும்" என்று சாப்பாட்டில்தான் ஆரம்பிக்கிறாள். இப்படியே திருப்புகழிலும் எடுத்த எடுப்பில் "கைத்தலம் நிறைகனி அப்ப மொ(டு) அவல்பொரி" என்று சாப்பாட்டு தினுசுகளைத்தான் அடுக்கி யிருக்கிறது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சாரிய சுவாமிகள்.

''மன்னரைப் பார்த்து அமைச்சர், 'உன்னை மாதிரி முட்டாள் ராஜாவிடம் மந்திரியாக இருப்பதைக் காட்டிலும் ஒரு நல்ல ராஜாவிடம் சேவகனாக இருப்பது மேல்'னு கோபமாப் பேசிட்டார்!''

''ஐயையோ! ராஜா என்ன பண்ணினார்?''

''அமைச்சர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட்டார்!''

— கதிர்வேல்



செலுத்தினான். நாட்டைக் காக்கத்தான் முதலமைச்சர் இருக்கிறாரே என்கிற நம்பிக்கை.

முதலமைச்சர் மாளிகையில் கனகதீபங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன.

அப்போதுதான் பெரிய புராணத்துத் திருநாட்டுச் சிறப்பை எழுதி முடித்திருந்தார். மொத்தம் முப்பத்து ஐந்து பாடல்கள்.

படிக்கக்கேட்டு ஜோதி பரவசத்திலாழ்ந்து போனதை சேக்கிழார் எண்ணிப் பார்க்கிறார். முதலில் முப்பத்து நான்கு பாடல்கள் தாம் எழுதியிருந்தார்.

''சுவாமி! நாட்டுச் சிறப்பு பாட வந்த தாங்கள் நாட்டின் நாயகன் சிறப்பு பாட வேண்டாமா?' என்று ஜோதி தேன் சொட்டக் கேட்டுக் கொண்டதன் பேரில், முப்பத்து ஐந்தாவது பாடலாக 'நற்றமிழ் வரம்பின்' என்று தொடங்கி, அதில் 'கொற்றவன் அநபாயன் பொற்குடை' என்று சேர்த்தார்.

ஜோதி விடைபெற்றுச் சென்ற பிறகு, சேக்கிழார் மீண்டும் சிந்தனையைத் திருத்தொண்டர் கதையில் திருநடம் புரியச் செய்கிறார்.

அப்போது...,

பட்டத்தரசியார் வந்திருப்பதாகச் செய்தி வரவே, அவரே எழுந்து சென்று வரவேற்கிறார்.

மாளிகையின் பிரதான கூடத்தில் அமருகிறார்கள்.

அப்போதும் சேக்கிழார், 'ஏன் தில்லைக்கு வரவில்லை?' என்று கேட்டாரில்லை.

தியாகவல்லியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை: ''என்னால் தில்லைக்கு வந்து பெரிய புராணத் தொடக்கத்தைச் சிறப்பிக்க முடியாமல் போய்விட்டது. அமைச்சர் பெருமானே!''

''தேவி! நான் எவர் வருகையையோ சிறப்பையோ எதிர்பார்த்துப் பாடவில்லையே?''

தியாகவல்லியின் முகம் சுருங்கத்தான் செய்தது.

''நான் வராததன் காரணம் கேளுங்கள், தமிழ்ச் செல்வமே! நீங்கள் கற்பனையில் பெண்ணாகவும் மாறக் கூடியவர். தயவு செய்து எனது நிலையில் மாறி எண்ணிப் பாருங்கள்! ஆடவந்தாள் ஜோதி; உங்கள் அரும்புகழைப் பாட வந்தாள் ஜோதி! ஓர் உண்மையைச் சொல்வேன். திருநாகேச்சுரத்துக்கு நான் உங்களை அனுப்பியதே மாமன்னர் உத்தரவின் பேரில்தான். பிறகு தான் அங்கே ஜோதி வந்த செய்தி எனக்குத் தெரியும்.''

இப்போது சேக்கிழார் திணறிப்போகிறார். ஜோதி எனக்காகவே வந்தவளா?

''சுவாமி! உங்களைத் திருத்தொண்டர் புராணம் பாட வைக்க மன்னர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளமாக இருக்கலாம்! அதில் ஜோதியும் ஒன்றாக விளங்கலாம். ஆனால் ஜோதியின் வலையிலே அவரே விழுந்து விட்டாரே! என்னைக் காப்பாற்றுமாறு வேண்டவே தங்களிடம் வந்தேன்! உங்களுக்கும் இதில் பொறுப்புண்டு. நாட்டைக் காப்பாற்ற வேண்டுமல்லவா?''

''சோழமாதேவி! நீங்கள் கூறுகிற செய்தி எனக்குப் புதியது. அவ்வாறு இருப்பின் நிச்சயம் உங்களையும் நாட்டையும் காக்க முயற்சி செய்வேன். இது எனது கடமை!''

கண்ணீர் கரைபுரள, கரம் கூப்பில் நிறைமிளிர எழுந்து கொண்டாள் தியாகவல்லி.

''வருகிறேன் அமைச்சர் பெருமானே!''

''சென்று வாருங்கள் செம்பியன் தேவி! ஒன்றைச் சொல்வேன்! சோழக் குலோத்துங்கனோ, ஜோதியோ சொப்பனத்திலும் தவறு செய்ய மாட்டார்கள். விசாரிப்பேன்; விடை கூறுவேன். சென்று வாருங்கள்!''

தியாகவல்லி திருத்தமான நெஞ்சுடன் விடைபெற்றாள்.

வெகுநேரத்துக்கு வெகுநேரமாகச் சிந்தனையில் மூழ்கிப் போனார் முதலமைச்சர் சேக்கிழார்.

அரசியல் அதிகாரிகளின் தீய நடத்தைகளைக் கண்டிப்பதும் தண்டிப்பதுமாக இருப்பது போக, இப்போது தலைவனே தடம் புரண்டு இருக்கிறான் என்றால்?

உணவுக்கு நேரமாகவே பணியாளன் அழைத்தான்.

உண்டு முடித்துச் சற்றே ஓய்வு கண்டார். அப்போது...

கபாலீச்சரன் வந்திருப்பதாகப் பணியாளன் செய்தியறிவித்தான்.

கபாலீச்சரனா? சிந்திக்கிறார் சேக்கிழார்.

(தொடரும்)

இதோ!
இன்ட்டர்நேஷனல் டூரிஸ்ட்டர்

மிஞ்சமுடியாதது தகர்க்க முடியாதது ஈடு இணையற்றது



இன்ட்டர்நேஷனல் டூரிஸ்ட்டர்.
நீங்கள் நாடிடும் பெருமைகள் அனைத்தும் அடங்கி
மவுல்டெட் லக்கேஜ்: நீடித்த உழைப்பு, ஸ்டை
வனப்பு, பணத்திற்குப் பெருமதிப்பு.

திகைப்பூட்டும் வகைவாரிகள்—விலே
ரூ. 200 முதல். மனமயக்கும் விதவி
சைஸ்கள், வர்ணங்கள், டிசைன்க
இன்ட்டர்நேஷனல் டூரிஸ்ட்டர்
ஒவ்வொன்றும் சாகசம் புரிக்கு
திக்விஜய வாழ்வுக்கேற்ப
திடம்படக் கட்டமைந்தது.

தரமான சூட்கேஸ் விற்கப்படு
எவ்விடத்திலும் கிடைக்குது
தட்டிக்கொண்டு போங்கள்
பெட்டி வடிவிலே ஒரு
'சூறாவளி'.



INTERNATIONAL
TOURISTER

மகிழ்ச்சித் துள்ளல் இதன் விலேயே மாபெரும் "த்ரில்"

வி.ஐ.பி. யின் தரமான தயாரிப்பு

LINTAS BPL IT 1 2416 TM

கு.க.வுக்கு ஆள் சேர்க்கப் படும் அல்லல்!

ஜூன் தொடக்கத்தில் கல்கிக்கு பேட்டி அளித்த ஹெக்டே, 'குடும்பக் கட்டுப்பாட்டில் இனி கட்டாயம் இராது' என்று கூறியுள்ளார். ஆனால் ஆள் சேர்க்குமாறு அரசு ஊழியர்களை முடுக்கி விடுவது இன்னமும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. திருவையாறு பஞ்சாயத்து யூனியனின் சுற்றறிக்கை இதற்கு ஒரு சான்று. கு. க. திட்டத்துக்கு ஆள் சேர்க்க அல்லல்படும் ஓர் ஊழியன் நான்.

(தமது பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளும் இவர் இணைத்து அனுப்பியுள்ள அவசரக் குறிப்பாணையில் தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவமனையில் நடக்கும் லாப்ராஸ்கோப்பி முகாமுக்குத் திருவையாறு ஒன்றியத்துக்கு 1000 நபர்கள் என்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கேற்ப ஒவ்வொரு ஊராட்சிப் பணியாளருக்கும் தனித்தனிக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் விவரமாகக் காணப்படுகிறது. திட்டத்தில் ஈடுபாடு கொள்ளாதவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எச்சரிக்கையும் உள்ளது.

— ஆசிரியர்)

கோவிலுக்கு அருகே சாராயக்கடை!


ஈரோடு 'கோட்டை' பகுதியிலுள்ள ஈஸ்வரன் கோயில் வீதியில் பல டெக்ஸ்டைல் நிறுவனங்கள் தவிர சிவபெருமான் மற்றும் திருமால் கோயில்களும் உள்ளன. இந்தக் கோயில்களுக்கு மிக அருகில் ஒரு சாராயக் கடை முளைத்திருக்கிறது. கோயிலுக்கு 200 அடி தொலைவில் சாராயக்கடை! வியாபார மையமானதால் எந்நேரமும் மக்கள் கூட்டம்! முக்கியக் கோயில்கள் இருப்பதால் மாலை வேளைகளில் அதிகமாகப் பெண்கள் நடமாட்டம்! இந்தச் சூழ்நிலையில் அப்பகுதியில் திடீரென இந்த அநியாயம் ஆரம்பித்தது பலரை வெறுப்படைய வைக்கிறது.

— அருண், ஈரோடு — 2.

எச்சிலில் பரவலாம் எய்ட்ஸ்

எய்ட்ஸ் பரவுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கைகளைப் பற்றி டீ. வி. யில் பார்க்கிறோம்; பத்திரிகைகளிலும் படிக்கிறோம். ஆனால் நடைபாதைகளில் டீ, குளிர்பானம், கரும்புச் சாறு விற்பவர்கள் ஒரு பக்கெட்டில் தண்ணீர் வைத்துக்கொண்டு அதிலேயே ஒருவர் குடித்த எச்சில் தம்ளரை முக்கி அலம்பிவிட்டு வேறு ஒருவருக்கு டீயோ, கரும்புச் சாறோ கொடுக்கிறார்கள். இது எவ்வளவு பெரிய சுகாதாரக்கேடு என்று யாருமே யோசிக்காதது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. சுகாதார அதிகாரிகள் இதைக் கவனித்துப் பேப்பர் கப்களில் டீ கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடலாம். பேப்பர் கப்புக்காகப் பத்து பைசா காசு வாங்கினாலும் பரவாயில்லை; நோய்கள் பரவுவது தடுக்கப்படும்.

— சீதா ராமநாதன்,
சிமெண்ட் நகர் (மகாராஷ்டிரா)



வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா

இளம் வயதில் நான் முதன்முதலில் சமைக்கத் தொடங்கியபோது, நெய் பயன்படுத்தும்படி எனக்குச் சொன்னார்கள். அம்மா சொன்னாள், ''இந்திய உணவின் மணமே அதுதான் என்று. அப்போது அவள் சொன்னது சரியாக இருந்தபோதிலும், 20 ஆண்டுகளுக்குப் பிறகு அதைவிட மிகச் சரியானதை கண்டுகொண்டேன். ஸன்ஃப்ளவர் வனஸ்பதி. சொல்லப் போனால், சுத்த நெய்க்கு அடுத்ததாகச் சுவையில் சிறந்தது அதுதான். அது ஊட்டமிக்கது மட்டுமல்ல, சிக்கனமானதுங்கூட. ஸன்ப்ளவர் வனஸ்பதியால் கீழ்க்கண்ட உணவை சமைத்துப் பாருங்கள், உங்களுக்கே புரியும், நான் சொல்வது.

வெஜிடபிள் பஃப்

பொருட்கள் அளவு

நல்ல மைதா 150 கிராம்
ஸன்ஃப்ளவர் வனஸ்பதி
15 கிராம்
(முதன் முறை)
உப்பு 2 கிராம்



க்ரீமிங்

ஸன்ஃப்ளவர் வனஸ்பதி 50 கிராம்
(இரண்டாம் முறை)
அரிசி மாவு 5 கிராம்

ஃபில்லிங்

பச்சை பட்டாணி 50 கிராம்
காரட் 50 கிராம் • வெங்காயம் 50 கிராம்
உருளை கிழங்கு 50 கிராம்
பீன்ஸ் 100 கிராம் • உப்பு 5 கிராம்
பச்சை மிளகாய் 2 கிராம்
கடுகு 1 கிராம் • எலுமிச்சை ½
மஞ்சள் பொடி 1 சிட்டிகை • பச்சை கொத்தமல்லி 2 அருக்கு
கறிவேப்பிலை 1 இலை • ஸன்ஃப்ளவர் (வறுக்க) 15 கிராம்.

தங்கம் பிலிப்* சொல்கிறார்



"இருபது ஆண்டுகளுக்கு பின் நான் கண்டு கொண்ட ஒரு உணவுப் பொருள்..."

WIPRO LIMITED
Closer to the consumer

ஸன்ஃப்ளவர் வனஸ்பதி—

செய்முறை

1. மைதாவையும், உப்பையும் கலக்கவும்.

2. ஸன்ஃப்ளவர் இட்டு, தண்ணீர், உப்புடன் மென்மையான மாவாக பிசையவும்.

3. பிசைந்த மாவை சமமான உருண்டை களாகச் செய்து கொள்ளவும்.

4. இரண்டாம் முறை ஸன்ஃப்ளவரையும் அரிசி மாவையும் கலந்து பசைபோல் செய்து தண்ணீரில் வைக்கவும்.

5. உருண்டைகளை மும்மூன்றாக அடுக்கி, அரிசிமாப் பசையை தடவவும்.



6. 2.5 செ.மீ. (1") துண்டுகளாக நறுக்கவும்

7. ஒவ்வொன்றையும் தட்டையாக்கி, வட்டவடிவமாக்கவும்.

8. வெஜிடபின் கலவையை வைத்து, அரைவட்ட வடிவில், சோமாஸ் போல் மடிக்கவும். முனைகளை நன்கு அழுத்தி மூடவும்.

9. ஸன்ஃப்ளவர் வனஸ்பதியிட்டு பொன்னிறத்தில் வறுத்தெடுக்கவும்.

ஃபில்லிங்

1. பச்சை மிளகாய், வெங்காயத்தை நறுக்கவும். காரட், பீன்ஸ், உருளைக் கிழங்கையும் சன்னமாக நறுக்கியெடுக்கவும்.

2. கடுகைத் தாளித்து அதில் காய்கறி, வெங்காயம், பச்சை மிளகாய், மஞ்சள் பொடி இவற்றை இட்டு, சிறிது நீர் தெளித்து, மெல்லிய தீயில் (15 நிமிடம்) உருளைக் கிழங்கு வேகும் வரை வேக வைக்கவும்.

3. உப்பு கலந்து, 5 நிமிடத்திற்கு நன்கு கலக்கவும், லீம் ஜூஸ், அரிந்த கொத்தமல்லி இவைகளை இட்டு, இறக்கி வைக்கவும்.

இச் சமையற் குறிப்பில், ஒவ்வொரு நிலையிலும் ஸன்ஃப்ளவர் வனஸ்பதி பயன்படுத்துவதைப் பாருங்கள், சுவையில் தான் எவ்வளவு வேறுபாடு! நீங்களே முயன்று பாருங்கள், வேறுபாட்டைச் சுவையுங்கள்.

* உணவு வல்லுநர், நியுட்ரிஷனிஸ்ட்




கோத்ரெஜ் படைத்துள்ள சுகபோகத்தின் சிகரம் : மார்வல் லக்ஷரி சோப்
Marvel
ELLOUS PERFUME
செழுமையான
க்ரீம்போன்ற நுரை
மற்றும் மனம் மயக்கும் நறுமணம்
விலை (75 கிராம்) : ரூ. 4.50 (தலைவரிகள் தனி)
Mudra B:GS:2704 TM



பட்டுக்கோட்டை பிரபாகர்

என்னைக் காணவில்லை

10 பரத், ஹிந்து ஞாயிறு இதழில் மேட்ரிமோனியல் பகுதி பார்த்துக் கொண்டிருக்க......

கதவைத் தட்டாமல் உள்ளே வந்த சுசிலா, அவன் தன்னைக் கவனிக்காததை உணர்ந்து, கைப்பையை ஓசையின்றித் திறந்து, லிப்ஸ்டிக் எடுத்துக் கொண்டு, பைய நடந்து பின்புறம் நின்று, முதுகில் லிப்ஸ்டிக் முனையைப் பொருத்தி, ஆண் குரலில், ''ஹேண்ட்ஸ் அப்'' என்றாள்.

கொஞ்சமும் அசையாமல் பரத், ''சரி, குரல் எல்லாம் ஆம்பளை மாதிரிதான் இருக்கு. ஆனா எதிர்ச் சுவத்திலே விழுந்திருக்கிற நிழல்லே கழுத்துக்குக் கீழே அப்படித் தெரியவில்லையே மேடம்'' என்றான்.

முன்னால் வந்து அமர்ந்து கொண்ட சுசிலா, ''என்ன மேட்ரிமோனியல் பார்க்க ஆரம்பிச்சிட்டீங்க பரத்?'' என்றாள்.

''அது இருக்கட்டும். நீ எப்போ திருந்தினே? பனியன்ல வசனத்தைக் காணோமே...?''

''முதுகுப் பக்கம் இருக்கு பரத். வாண்ட் டு ரீட்?'' என்று எழுந்து முதுகைக் காட்டினாள்.

முன் நெற்றியில் லேசாகத் தட்டிக் கொண்ட பரத், ''ஒரு தடவை உன் மேல கேஸ் போட்டு மூணு மாசம் உள்ளே தள்ளினால்தான் சரிப்பட்டு வருவேன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''யாரை? என்னையா? எப்படி சார்?''

''செக்ஷன் இருநூத்தித் தொண்ணூத்தி நாலைப் பக்கத்திலே வச்சிக்கிட்டுத்தான். என்ன போய்ட்டு வர்றியா? நூல் நூற்கக் கத்துக் கொடுப்பாங்க. செருப்பு தைக்கக் கத்துக் கொடுப்பாங்க.''

''இதயத்திலே இரக்கமே இல்லாத அரக்கக் காதலன் நீங்கதான். ஷ்! சத்தம் போடாதே, திட்டிக்கிட்டுஇருக்கேனில்லே...'' என்றாள் டெலிபோனைப் பார்த்து.

பரத் எடுப்பதற்குக் கைநீட்ட, அதைத் தட்டிவிட்டு, ''மன்னிப்புக் கேளுங்க. அப்பதான் டெலிபோனை அட்டெண்ட் செய்ய விடுவேன்.''

''எதுக்கு மன்னிப்பு?''

''வழக்குப் போடுவேன்னு சொன்னது மகா இன்சல்ட்.''

''இனிமேல் வசன பனியன்

போட மாட்டேன்னு ப்ராமிஸ் செய்.''

''ப்ராமிஸாவது, கோல்கேட்டாவது. நெவர்! சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை.''

''சுசி, பத்து ரிங் அடிச்சிடுச்சி. வெச்சிடப் போறாங்க. ரிசீவரை எடு.'' சுசி எடுத்தாள்.

''ஹலோ'' என்றாள்.

''லாயர் இருக்காராங்க?''

''இருக்கார். நீங்க யார் சார்?''

''என்னை அவருக்கு அறிமுகம் இல்லே. ப்ளீஸ், சீக்கிரம் அவரைப் பேசச் சொல்லுங்க. ஐ யாம் இன் ட்ரபிள்.''

சுசி ரிசீவரைப் பொ த்தி, பரத்துக்குக் கண்ணடித்து, ''புது கேஸ் பரத்'' என்று நீட்டினாள்.

''ஹலோ, பரத் பேசறேன்.''

''சார், என் பேர் அசோக். நான் ஒரு மகா சிக்கல்ல இருக்கேன்.''

''முதல்ல எங்கே இருக்கீங்கன்னு சொல்லுங்க.''

''ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்துக்குள்ள இருக்கேன்.''

''நான் கேட்பது உங்க அட்ரஸ்.''

''இப்போதைக்கு கோர் ஆஃப் பிளாட்ஃபார்ம் சார். என்னைத் தீவிரமா போலீஸ் துரத்திக்கிட்டு இருக்கு சார். நான் உடனடியாக உங்களைச் சந்திச்சாகணும்.''

''நான் வீட்லதான் இருக்கேன். வாங்க.''

''உங்க அட்ரஸ் எனக்குத் தெரியாது. என் ஃபிரண்டு உங்க போன் நம்பர் மட்டும் கொடுத்தான்.''

''அட்ரஸ் சொல்லட்டுமா? குறிச்சுக்கங்க'' என்று சொன்னான்.

''சார், ரொம்ப சீக்கிரம் வர்றேன். நீங்கதான் எனக்கு உதவணும்.''

''வாங்க, நேர்ல பேசிக்கலாம்'' என்று வைத்தான் பரத்.

''போலீஸ் துரத்துதுன்னு காதிலே விழுந்த மாதிரி இருந்திச்சி?'' என்றாள் சுசீலா.

''ஆமாம். என்ன பிரச்னைன்னு புரியலே. பேசினாத்தான் புரியும். யெஸ். கதவு திறந்து தான் இருக்கு. உள்ளே வாங்க'' என்றான் வாசல் அழைப்பு மணிக்கு.

உள்ளே வந்தவன் வெங்கடேசன். நிறைய எண்ணெய் தடவித் தலே சீவியிருந்தான். சட்டையின் டாப் பட்டன் வரை சின்சியராகப் போட்டிருந்தான். கிருதா அருகே ஒரு பவுடர் தீற்றல். செருப்புகளை ஓரமாக விலக்கி விட்டு வந்து, ''சௌக்யமா பரத்?'' என்றான்.

''வாப்பா வெங்கு. எப்படி இருக்கே? ஒரு மாசம் இருக்கும் பார்த்து. உக்காரு. சுசி, டீ, காப்பி எது உனக்குச் சிறப்பா வருமோ அது'' என்றான் பரத்.

சுசீலா உள்ளே செல்ல...

''பரத், எனக்கொரு உதவி செய்யணும் நீ.''

''செஞ்சிடலாம், சொல்லு.''

''என் வைஃபைச் சிங்கப்பூர் தமிழ்ச் சங்கத்திலே பேசக் கூப்பிட்டிருக்காங்க.''

''பாராட்டுக்கள். விசா பிராப்ளமா?''

''அதெல்லாம் எதுவும் இல்லே. எவ்ரிதிங் அரேன்ஜ்ட். நாளைக்குக் காலேயிலே நாங்க புறப்படறோம். வர பதினைஞ்சு நாளாகும். இந்தா.''

''என்னது?''

''ஒரு செட் சாவிகள்.''

''எதுக்கு?''

''பதினைஞ்சு நாட்களுக்கு வீட்டைப் பூட்டி வச்சிட்டுப் போற மாதிரியா இருக்கு மெட்ராஸ்? ரெண்டு நாட்களுக்கு ஒரு தடவையாச்சும் நீ வீட்டுக்குப் போய்த் திறந்து பார்த்துக் கொஞ்ச நேரம் இருந்துட்டு வரணும். அப்பதான் அக்கம்பக்கத்திலே வீட்ல யாரோ இருக்காங்கன்னு தோணும்.''

''இவ்வளவுதானா? உன் வீட்டுக்கு என்னப்பா? சினிமா செட் போட்ட மாதிரி வச்சிருக்க... பேசாம என் வீட்டைப் பூட்டிட்டு நீ வர்ற வரைக்கும் அங்கேயே குடியிருந்துட்டாப் போச்சி. இங்கே திருட, புஸ்தகங்கள்தான் இருக்கு.''

''குட் ஐடியா பரத்!''

''சேச்சே. நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன். இங்கே என்னைத் தேடி வர்றவங்களுக்கெல்லாம் யார் பதில் சொல்றது? நீ சொன்ன மாதிரி அப்பப்போ போய்ப் பார்த்துக்கறேன். கவலைப்படாமல் போய்ட்டு வா.''

சுசீலா ட்ரேயில் வைத்து மூன்று பீங்கான் கோப்பைகள் எடுத்து வந்து, இருவருக்கும் கொடுத்துத் தானும் எடுத்துக் கொண்டு தனி நாற்காலியில் அமர்ந்தாள்.

வெங்கடேசன் எழுந்து கொண்டு, ''வரட்டுமா பரத்? வாடகைக்கு விட்டுடாதே'' என்று சிரித்தான்.

''விட்டாலும் நீ வர்றதுக்குள்ளே காலி பண்ணிக் கொடுக்க வேண்டியது என் பொறுப்பு.''



வெங்கடேசன் போனதும்:

''பரத், எப்போ மேரேஜ் வச்சிக்கலாம்?'' என்றாள் சுசீலா.

''தம்பதின்னு சொல்லிப் பாரு. காதலர்கள்னு சொல்லிப் பாரு. எந்த வார்த்தை தித்திக்குது?''

''ஒவ்வொரு லெட்டர்லயும் அம்மா, 'எப்ப தாண்டி கல்யாணம் பண்ணிப்பீங்கன்னு கடைசி வரில கேக்கறாங்க.''

''கடைசி வரிதானே? பார்த்தியா அவங்களே அதுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கலே. இங்கே கிட்டே வாயேன், காதோட ஒண்ணு சொல்றேன்.''

''முடியாது.''

''இப்ப வரப் போறியா இல்லையா?''

பரத் அவளைப் பிடிக்கப் பாய... சுசீலா நைலக்ஸ் சேலையாய் வழுக்கிக் கொண்டு ஓட... இருவரும் சோபாவைச் சுற்றி மூன்று வட்டங்கள் ஓடிக் கொண்டிருக்க...



''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றது வாசல்.

''யெஸ், வாங்க.''

அசோக் உள்ளே வந்து வியர்த்து, மூச்சு வாங்கி நின்ற இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''கற்பனையைத் தட்டி விடாதீங்க! ஹாலைச் சுத்தம் பண்ணிக்கிட்டிருந்தோம். அவ்வளவு தான். உக்காருங்க, நீங்க...''

''அசோக், உங்களோட போன்ல பேசினேனே...'' என்று தனது சூட்கேஸை ட்ரே மேல் வைத்துவிட்டு அமர்ந்து, ''ப்ளீஸ், வாசலைச் சாத்திடுங்க, பேசலாம்'' என்றான்.

பரத் சுசீலாவைப் பார்க்க, அவள் சென்று கதவைத் தாழிட்டுவிட்டு வந்து அவனை முழுதாகப் பார்த்தாள்.

தலை கலைந்திருந்தான். முகம் வாட்டத்தில் இருந்தது. சட்டை அங்கங்கே கசங்க லுடன், அழுக்குடனிருக்க... சூட்கேஸ் சற்று உயர்தரத்தில் பெரிதாய் இருந்தது. சிகரெட் கொளுத்திக் கொண்ட போது, நெருப்பை முனையில் பொருத்தத் தடுமாறினான். விரல்களில் லேசாய் நடுக்கம், கண்களில் தூக்கமின்மை புரிந்து கொள்ள முடிந்தது.

''மிஸ்டர் அசோக், உங்களைக் கொஞ்சம் விரிவா அறிமுகப்படுத்திக்கங்க. அதுக்கு முன்னாடி ஒரு டீ.''

சுசீலா உள்ளே சென்றதும்......

''அவங்களை வச்சிக்கிட்டே நாம பேசலாமா...?'' என்றான் அசோக்.

''தாராளமா. சக்தி இல்லையேல் சிவன் இல்லை. வெல், யு ஆர் நாட் இன் த மூட் ஃபார் ஜோக்ஸ். சொல்லுங்க.''

''ராஜ் டெக்ஸ்டைல்ஸ் தெரியுமா?''

''காலண்டர்கள் பார்த்திருக்கேன்.''

''எங்கப்பாதான் எம். டி. நான் ஒரே பையன். எனக்கு அவரைப் பிடிக்காது. சதா சச்சரவு. எங்கம்மாவைக் கொன்னுட்டு அதைத் தற்கொலையா செட்டப் செஞ்சிட்டார்ன்னு நான் வலுவா சந்தேகப்படறேன். சமீபத்திலே என் எதிர்ப்பை மீறி மாயான்னு ஒருத்தியை ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிட்டார். அவளோட மயக்கத்திலேயோ, இல்லே அவள் போட்ட கண்டிஷன் காரணமாவோ தனக்குப் பிறகு சொத்துக்கள் பூரா அவளைத்தான் சேரணும்னு உயில் எழுதிட்டார். இதுக்கு நடுவிலே என்னைக் கொலை செய்ய ஒரு முயற்சி நடந்திச்சி. அவரோட வரவேற்பிலே அவரைக் கொல்லவே ஒரு முயற்சி நடந்திச்சி. சொத்துக்கள் மேல் எனக்கிருக்கிற உரிமைகளை வச்சி நண்பனோட போய் அப்பாகிட்டே சத்தம் போட்டுட்டு வந்தேன். மறுநாள் — அதாவது முந்தா நாள் ராத்திரி அது சம்பந்தமா பேச ராத்திரி ஒன்பது மணிக்குத் தனியா வரச் சொல்லி மாயா போன் செஞ்சதாலே, நான் மட்டும் போனேன். போன இடத்திலே...''

''இருங்க. டீ சாப்பிட்டுட்டு மிச்சம் சொல்லுங்க.''

சுசீலாவிடம், ''தாங்க்யூ'' சொல்லி எடுத்துக் கொண்டு சாஸரில் ஊற்றி, ஊற்றிக் குடித்தான் அசோக். வைத்துவிட்டுக் கர்சீப்

எடுத்து ஒற்றிக் கொண்டான்.

நிதானமாக அரை மணி நேரம் சொன்னான்.

கனமான அமைதி.

''நீங்க செஞ்சது பெரிய குற்றம் அசோக்'' என்றான் பரத்.

''அய்யோ, சார்! இந்தக் கொலையை நான் செய்யவே இல்லே.''

''நான் அதைச் சொல்லலே. மேல் விசாரணைக்காக ஸ்டேஷனுக்கு உங்களை அழைச்சுட்டுப் போறப்போ வழில தப்பி ஓடி வந்துட்டதைச் சொல்றேன்! இப்படி பாதி விசாரணையிலே நீங்க தப்பி வந்தா என்ன அர்த்தம்? குற்றம் நீங்களே செஞ்சதாத்தானே அர்த்தம்?''

''சார், நீங்க சிச்சுவேஷனுக்கு ரொம்ப வெளில இருந்து மேம்போக்கா பொது நியாயம் பேசறீங்க. கொஞ்சம் யோசிங்க. எப்பேர்ப்பட்ட சூழ்நிலே பாருங்க. முதல் நாள்தான் அப்பாவை வேலைக்காரங்க மத்தியிலே கடுமையா பேசினேன். மறுநாள் ராத்திரி, நான் போறப்போ வீட்ல யாருமில்லே. ரூமிலே அவர் கத்திக் குத்துப்பட்டுக் கிடக்கிறார். வாட்ச் மேன் ஓடியாந்து 'பாவி கொன்னுட்டியேடா' ன்னு கத்தறான். போலீசுக்கு போன் பண்றான். வந்த இன்ஸ்பெக்டர் இறங்கின பத்தாம் நிமிஷமே சட்டைக் காலரைப் பிடிச்சிக்கிட்டு 'ஏண்டா கொன்னே'ங்கறார். பத்தே நிமிஷத்திலே கேசை முடிக்கத் துடிக்கிறார். வெளியே போயிருந்த மாயாவும், அவங்க அண்ணனும் வந்து பதறிப் போறாங்க. இவன்தான்.. இவனேதான்னு கத்தறாங்க. எனக்கு மட்டும்தான் உயில் காரணமா மோடிவ் இருக்குன்னு எடுத்துச் சொல்றாங்க. வாட்ச்மேன் திருப்பித் திருப்பி நான்தான் கொன்னதா சத்தியம் செய்யறான். என் மறுப்பு வார்த்தைகளுக்கு மரியாதையே கிடையாது. ரொம்ப வலுவான வலையிலே நான். போலீஸ் கைல நான் இருந்தா அதை மேலும் இறுக்கிடுவாங்க. நான் அவ்வளவுதான். அந்த நிமிஷம் தப்பிச்சி ஓடறதைத் தவிர வேற எதுவுமே தோணலே.''

பரத் குறுக்காகத் தலையை அசைத்துக் கொண்டே, ''நோ, நோ, யு ஆர் ராங். சரி, சொல்லுங்க. தப்பிச்சி என்ன செஞ்சீங்க?'' என்று கேட்டான்.

''நேரா நான் தங்கின ஹோட்டலுக்கு வந்து அஞ்சே நிமிஷத்திலே காலி பண்ணிட்டு என்னோட ஃபிரண்ட் கதிரோட ரூமுக்குப் போயிட்டேன். ராத்திரி அவன் கூடவே தங்கினேன். காலைல, மத்தியானம் ரெண்டு சினிமா தியேட்டர்களிலே தூங்கினேன். ஈவினிங் திரும்பினப்போ போலீஸ் வந்து விசாரிச்சதா சொன்னான். இனி அவனோட தங்கறது டேஞ்சர்ன்னு பட்டுது. மேற்கொண்டு என்ன செய்யறதுன்னு புரியலே. அவன்தான் உங்க போன் நம்பர் கொடுத்தான். உங்களைச் சந்திச்சிட்டு உங்க யோசனைப்படி நடந்துக்கலாம்னு புறப்பட்டு வந்துட்டேன். சார், நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்.''

''நிறைய சிக்கல் பண்ணிட்டீங்க மிஸ்டர் அசோக். போலீசைப் பொறுத்தவரை இப்போ நீங்க தப்பி ஓடித் தலை மறைவா இருக்கிற ஒரு குற்றவாளி. இப்போ உங்களுக்கு யார் அடைக்கலம் கொடுத்தாலும், அதுவே ஒரு குற்றம்'' என்றான் பரத்.

''பரத், வெய்ட். அது என்ன சத்தம்?'' என்றாள் சுசிலா.

அந்த போலீஸ் சைரனின் சத்தம் அதிகமாகிக் கொண்டே வந்து, பரத் வீட்டின் வாசலில் ஜீப் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. தொடர்ந்து பூட்ஸ் ஒலிகள்!

(தொடரும்)

ஹராரேயில் செந்தில்!



"நமது பிரதமர் சென்று வந்தாரே, ஹராரே, அதே ஆப்பிரிக்க நகருக்கு நானும் போய் வந்தேனுக்கும்!" என்று செந்தில் கூறியதுமே ஒரு சுவாரஸ்யம் ஏற்பட்டது. 'என்ன? ஏது?' என்று விசாரித்தேன்.

'ஆப்பிரிக்காவில் அப்பு' என்ற படத்தில் நடிப்பதற்காகத்தான், சமீபத்தில் ஹராரே சென்று திரும்பியுள்ளார் செந்தில். அவரது அனுபவங்களைக் கூறினார்:


"மொழி தெரியாத அந்த ஊரிலே ஒன்பது நாட்கள் இருந்தேன். இந்தியாவிலிருந்து பன்னிரண்டரை மணி நேர விமானப் பயணம். ஹராரே ஏர்ப்போர்ட்டில் இறங்கியதும் 'ஷூட்டிங் எங்கே நடக்கப் போவுது?' என்று கேட்டேன்.

"நடுக்காட்டிலே" என்றார்கள். பயந்து கொண்டே போனேன். இந்தப் படத்திலே டிஸ்கோ சாந்தியின் முறை மாப்பிள்ளையாக நடிக்கிறேன். அங்குள்ள காடுகளில் யானை, சிங்கம், கரடி எல்லாமே நம் நாட்டில் உள்ளவற்றைவிட நாலைந்து பங்கு பெரிதாக இருக்கின்றன. ஜீப்பில் போகும் போது திடீரென்று நாற்பது சிங்கங்கள் கூட்டமாக ஓடுவதைப் பார்த்தேன். உடலே சற்று நேரம் சில்லிட்டுப் போய்விட்டது. நான் சிங்கத்துடன் பேசி நடிப்பது போல் சில சீன்கள் எடுக்க வேண்டியிருந்தது. சிங்கத்துக்குக் கறித் துண்டு போட்டு அது அசை போடும்போது நான் அதனருகே நின்று வசனம் பேச வேண்டும்! சிங்கம் என் மேலே பாயாமலிருக்க ஆறு பேர் எச்சரிக்கையாகத் துப்பாக்கியைப் பிடிச்சுக்கிட்டு நின்னாங்க. என்னதான் பாதுகாப்பு இருந்தாலும் நடுங்கிக்கிட்டேதான் சார் நடிச்சேன்!"

ஹராரே போய்ச் சேர்ந்ததும் முதல் வேலையாகச் சில ஆப்பிரிக்க வார்த்தைகளைக் கற்றுக் கொண்டாராம் செந்தில். 'மங்குவா நானி' என்றால் 'குட்மார்னிங்' 'மைநேர்' என்றால் 'குட் ஈவினிங்,' 'டாரோ' என்றால் 'நல்லா இருக்கு.'

மெஸ்ஸில் செந்தில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது ஓர் இளம் ஆப்பிரிக்கப் பெண் இவரிடம் வந்து 'காச் மூச்' என்று சப்தம் போட ஆரம்பிக்கவும், திணறிப் போய்விட்டாராம். சில நிமிஷங்கள் ஒன்றுமே புரியவில்லையாம். "நான் படப்பிடிப்புக்குப் போவதற்காக ஆப்பிரிக்கன் விக் வைத்திருந்தேன். அந்தக் 'காச் மூச்' பெண்மணியின் தாய்மாமன் என்னைப் போலவே இருப்பாராம். கொஞ்ச நாட்களாக அவரைக் காணவில்லையாம். அதுதான் அந்தப் பெண்ணின் குழப்பம், கூச்சலுக்குக் காரணம்! ஓட்டல் நடத்தும் பெண்மணி ஓடோடி வந்து என்னைப் பற்றிச் சொல்லி அவளை நல்லவிதமாக அனுப்பி வைத்தாள்" என்றார் செந்தில், ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன்.

— மன்னை சௌரிராஜன்



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

"என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்"...

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாதுகாப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேலைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு... போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும். நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடி துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருககிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்.

தவிரவும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லார்ஜ் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/6746/R/TAM

ஒட்டுண்ணி

சந்தோஷ்

போட்டிக் கதை — 4

அறிமுக எழுத்தாளர்

குனிந்து எழுதிக் கொண்டிருந்த சீதா கையை உதறிக் கொண்டு சோம்பல் முறித்தாள். அவளுக்குக் கொஞ்ச நேரம் படுத்துக் கொண்டால் தேவலை போல் இருந்தது. இரவு முழுவதும் சரியான தூக்கமில்லாமல் தள்ளாடியது உடம்பு. 'ஊஹூம்... படுத்தால் அசதியில் நல்ல தூக்கம் வந்துவிடும். அப்புறம் இந்த நாவலை எழுதி முடிக்க முடியாது.-பத்திரிகை அலுவலகத்திலிருந்து போன் வேறு வந்துவிட்டது... அவள் சோம்பலை உதறிவிட்டு சுறுசுறுப்புடன் எழுதத் தொடங்கினாள்.

தூங்கிக் கொண்டிருந்த கண்ணன் ''அம்மா'' என்ற முனகலுடன் புரண்டு படுத்தான். சீதா அவனருகில் சென்று அவன் மார்பில் கைவைத்துப் பார்த்தாள். ஜுரம் குறைந்து நன்றாக வியர்த்து விட்டிருந்தது.

'பாவம்... நேற்று ராத்திரியிலிருந்து ஐந்தாறு முறை பேதியாகிக் குழந்தைதுவண்டு விட்டான். இரண்டு வயதுக் குழந்தையால் எவ்வளவுதான் தாங்க முடியும்...? காலையிலிருந்து நல்ல ஜுரம் வேறு...' அவள் கவலையுடன் ஒன்றுமே தோன்றாமல் குழந்தையையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

குழந்தையை டாக்டரிடம் அழைத்துப் போக அவள் கணவன் கோபியிடம் பணம் கேட்ட போது அவன் பேசிய பேச்சு... கொட்டிய வார்த்தைகள்... நினைக்கும்போதே அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் குளமாகக் குழந்தையின் தலைமுடியை மெல்லக் கோதி விட்டாள்.

''சனியன்... உனக்கும் உன் பிள்ளைக்கும் வியாதிக்கு மருந்து வாங்கிக் கொடுத்தே நான் பிச்சைக்காரன் ஆயிட்டேன்... குழந்தையை கார்ப்பரேஷன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்க் காண்பித்து விட்டு வா... எங்கிட்ட இப்ப பைசா கிடையாது'' என்று கத்தியவன் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டுசாப்பிட்டுவிட்டு ஆபீசுக்குப்போய் விட்டான்.

அடுப்பில் கஞ்சி கொதித்துக் கொண்டிருந்தது. சீதா கஞ்சியை இறக்கி வைத்துப் பாலைக் காய்ச்சி சூடாகக் காப்பியைக் கலந்து குடித்தாள். காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமல் இருந்ததால் உண்டான களைப்பு விலகியது போல் உணர்ந்தாள்.

இரண்டு நாட்களுக்குள் நாவலின் இரண்டாவது பகுதியைக் கொடுப்பதாகச் சொல்லியிருந்தாள். ஆனால் இன்று என்னவோ... அவளால் தொடர்ந்து எழுத முடியாமல்... வேதனை அவளை வாட்டியது.

அவள் கவலைம் எதிரே இருந்த கண்ணாடியில் தெரிந்த அவள் உருவத்தின் மீது நிலைத்தது! நானா....? கண்களைச் சுற்றிய கருவளையங்கள்... கழுத்து எலும்புகள் துருத்திக் கொண்டு... கன்னங்கள் ஒட்டிப் போய்... தலைமுடியெல்லாம் கொட்டிப் போய்... இது நான்தானா? அவளுக்கே அவள் உருவம் பிடிக்காமல் போயிற்று. கல்யாணமான புதிதில் அவர்கள் எடுத்துக் கொண்ட போட்டோவை பெட்டியிலிருந்து எடுத்துப் பார்த்தாள். 'எவ்வளவு அழகாக... தளதளப்பாக... மாம்பழக் கன்னங்களோடு... கருவண்டு விழிகளோடு இருந்தவள்... இப்போது இவ்வளவு கேவலமாக... 'இந்த மூன்று வருடங்களுக்குள் இவ்வளவு மாற்றமா?' அவள் கை ஒட்டிய கன்னங்களைத் தடவியது. மனம்... பழைய நினைவுகளை அசைபோடத் தொடங்கியது.

''சீதா, நீ அதிர்ஷ்டசாலிம்மா... மாப்பிள்ளை கோபி பார்க்க அழகாக ராஜா மாதிரி இருக்கிறான்... பிக்கல் பிடுங்கல் இல்லை... கல்யாணமானவுடன் தனிக் குடித்தனம்தான். உன் ராஜ்யம்தான்'' என்று கேலியாக நாராயண சர்மா சொன்னதும் அவள், ''போங்கப்பா'' என்று தன் முகத்தை வெட்கத்தால் மூடிக் கொண்டாள்.

கனவுலகில் மிதந்தவளுக்குச் சோபன அறையில் நுழைந்ததுமே அதிர்ச்சி காத்திருந்தது.

கோபி அவள் அழகை ரசிக்கும் மனநிலையில் இல்லை. அவள் கழுத்தில், கைகளில் உள்ள நகைகளைத் தொட்டுப் பார்த்தான்.

''ஆமாம்... நீ போட்டுக்கொண்டிருக்கும் நகைகள்... உண்மையான தங்கம்தானே... கவரிங் இல்லையே...?''

அவன் கேள்வியில் அதிர்ந்த சீதாவுக்கு வார்த்தைகளே வெளிவரவில்லை.

''உங்கம்மா நகைகள் பத்து பவுன் வரை தேறும். அதையே போட்டுடறேன்னான் உங்

கப்பன்.. பார்த்தால் எட்டு பவுன்கூடத் தேறாது போலிருக்கு... இளிச்சவாயன்னு என்னை நினைச்சுட்டான் போலிருக்கு. அப்படித் தானே?''

அவளிடமிருந்து கேவல் வெளிப்பட்டது.

''சரி, சரி... அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாதே. எதற்கு இப்போ அழறே? என்ன கேட்டுட்டேன்? நாளைக்கு உங்கப்பனைக் கேட்கிறபடி கேட்டுக்கறேன்'' என்று கூவிக் கொண்டே திரும்பிப் படுத்தான்.

அன்று ஆரம்பித்த அழுகைதான் — இன்னும் ஓயாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது...

மறுநாள் அமர்க்களப்பட்டது. நாராயண். சர்மா அவன் காலில் விழாத குறையாகக் கெஞ்சியும் அவன் மசியவில்லை.


''திருமாங்கல்யத்தையும் சேர்த்துச் சொல்லிவிட்டேன் மாப்பிள்ளை... தயவு செய்து தவறாக... நினைக்க வேண்டாம்'' சர்மா அவன் இரு கைகளையும் பிடித்தபடி நா தழுதழுக்கச் சொன்னதை அவன் பொருட்படுத்தவில்லை.

''எனக்கு அதெல்லாம் தெரியாது... சொன்னபடி மேலும் இரண்டு பவுன் போடுவதாக இருந்தால் உங்கள் பெண்ணை அழைத்துக் கொண்டு போகிறேன்... இல்லாவிடில் எப்போது முடியுமோ அப்போது பவுனுடன் பெண்ணையும் கொண்டு வந்துவிட்டால் போதும்...''

சீதாவின் உறவினர்கள் நிலைமை மோசமாவதைக் கண்டு உதவிக்கு வந்தனர். இன்னும் ஆறு மாதங்களுக்குள் இருபவுன் போட்டு விடுவதாகவும், இப்போது சீதாவை அழைத்துக் கொண்டு போகும்படியும் அவர்கள் கேட்டுக் கொள்ளவே ஒருவாறு அரைமனத்துடன் சம்மதித்தான் கோபி.

சொன்னபடி சரியாக ஆறுவது மாதத்தில் சீதாவை அவள் தந்தையிடம் விரட்டினான் கோபி. நாராயண சர்மாதான் என்ன செய்வார்? அவருடைய பிழைப்பே நிலையில்லாமல் இருந்தது. மளிகைக் கடையும் அதை ஒட்டியபடி சொந்தமென்று சொல்லிக் கொள்ள ஒரு சின்ன வீடுமே அவருடைய சொத்து. சீதாவுக்கு அடுத்தபடி பானுவும், சுகந்தாவும் வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அடுத்தபடி ராமுவும், பிரபுவும் பள்ளியில் படிக்கும் சிறுவர்கள். சீதாவின் கல்யாணத்தைச் செய்ததே அவர் வரையில் பெரிய காரியமாக இருந்தது.

''சீதா... நான் சொன்னபடி என்றால்... இரண்டு பவுன் கூட....'' அவர் முடிக்க



வில்லை. இடைமறித்தாள் சீதா.

''வேண்டாம்பா... உங்கள் மாப்பிள்ளை அதற்காக இங்கு என்னை அனுப்பலைப்பா... சும்மாத்தான்... பார்த்து ரொம்ப நாள் ஆச்சேன்னு... நான்தான் வந்தேன்...''

கோபி வார்த்தைகளால் நாள்தோறும் அவளைக் கொல்வதைச் சொல்லித் தன் மனக்குமுறலைத் தணித்துக் கொள்ள வந்த சீதா, எதுவுமே சொல்லாமல் அவனை நல்லவனாக அவர்களுக்கு முன் காட்டிவிட்டு வெறுங் கையுடன் திரும்பினாள்.

அன்று ஆரம்பித்த அடியும் உதையும் தொடர்ந்தன. தொட்டதற்கெல்லாம் கோபப்பட்டான். சீதா தீர்மானித்து விட்டாள். இனி செத்தாலும் தன் தந்தையிடம் போவதில்லை என்ற முடிவுடன் அவன் கொடுத்த சொற்பப் பணத்திற்குள் தன் வயிற்றைக் கட்டி வாயைத் திறக்காமல் ஊமையாக வாழத் தொடங்கினாள்.

சிறு வயது முதல் இயற்கையாகவே அவளிடம் அமைந்திருந்த சொல்வளமும், இலக்கிய நயமும் தனிமையில் அவள் மனவேதனையில் பிரவாகமாக ஊற்றெடுத்து அவள் உணர்ச்சிகளைக் கவிதைகளாக வடிக்க உதவின. நம் உணர்ச்சிகளை... கதைகளாக வெளிப்படுத்தினால் என்ன...? என்று தோன்றியதும் அவள் செயல்பட்டாள்.

கற்பனை, கதையாக உருவானதில் அவளுக்கே வியப்பு.

பல நாட்கள் தயக்கத்திற்குப் பிறகு ஒரு நாள் துணிந்து அவனிடம் தன் மூன்று சிறு கதைகளையும் கொடுத்துத் தன் எண்ணத்தை மெதுவாக அவள் வெளியிட்ட போது, அவன் அட்டகாசமாகச் சிரித்தான்.

''கதை எழுதற மூஞ்சியைப் பாரு... எல்லாப் பெண்களையும் போல உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்கவே யோக்கியதை இல்லை யாது...'' என்றவன் அவளுடைய கதைகளை அலட்சியமாகத் தூக்கி மேஜையின் மீது போட்டான்.

அன்று இரவு என்ன தோன்றியதோ அவனே அந்தக் கதைகளை எடுத்துப் படித்தான். மறுநாள் அவனே மனம் வந்து 'நிறைகுடம்' பத்திரிகைக்குக் கொடுத்துவிட்டு வந்தான்.

தன் கதைகள் பத்திரிகையில் வெளிவந்ததைக் கண்ட சீதா அளவற்ற மகிழ்ச்சியுடன் அவசர அவசரமாக எழுதியவரின் பெயரைத் தேடிய போது... அவள் கண்கள் பனித்தன. ஆம்! கோபிநாத் என்ற பெயரில் தான் அவை பிரசுரமாகியிருந்தன.

அதன் பிறகு அவள் எவ்வளவோ கதைகள் எழுதினாள். பத்திரிகைகள் கோபியின் கதைகளைப் போட்டி போட்டுக் கொண்டு பிரசுரித்தன. பேனாவைத் தொடாமலே சிறப்பான கதைகளைப் படைக்கும் சிறந்த எழுத்தாளனாகி விட்டான் கோபி.

இப்போதெல்லாம் கோபி அவளை முன் போல் தொட்டதற்கெல்லாம் திட்டுவதில்லை. அவள் பொன் முட்டையிடும் வாத்து என்று கண்டு கொண்டான்.

சிறந்த எழுத்தாளனாகிவிட்ட கோபிக்கு ரசிகர்களின் எண்ணிக்கை அதிகமாயிற்று. அவனைப் பார்க்க வரும் ரசிகர்கள் முன்னிலையில் சீதா வரக் கூடாது.

சமீப காலமாக கோபியின் நடவடிக்கைகளில் சில மாற்றங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள் சீதா. கண்ணாடி முன்பு நின்று மணிக்கணக்காகத் தலைவாரிக் கொள்வதும், ஸ்நோ, செண்ட் என்று வாங்கித் தடவிக் கொள்வதும், விதவிதமாக உடை அணிந்து கொண்டு அழகு பார்ப்பதும், அவளுக்குப் புதுமையாக இருந்தது.

இரவு மணி ஒன்பதடித்தும் கோபி வரவில்லை. சீதா கவலையுடன் வாசலையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்பாஸடர் காரிலிருந்து இறங்கிய கோபி சிரித்துக் கொண்டே, ''பை... ஸீ... யூ... நாளைக்கு கரெக்டா ஐந்து மணிக்கெல்லாம் பார்க்கில் வெயிட் பண்ணுவேன்... ஓகே'' என்றான்.

''ஓகே'' என்று தலையை மென்மையாக அசைத்துச் சிரித்தபடி அவனுக்கு விடை கொடுத்த அந்த அழகிய பெண், காரில் இருந்தபடி கொஞ்சலாக: ''என்ன கோபி... வீட்டிற்குள் கூப்பிடக்கூடாதா?'' என்றாள்.

''ஓ... தாராளமா... யூ ஆர் வெல்கம்.. கமான்... வா நளினி'' என்றவன் காரின் கதவைத் திறந்து விட்டான்.

''வீட்டில் உங்களுடன் யார் இருக்கிறார்கள்?''

''யாருமில்லை... நான் ஒரு தனிக்கட்டை... உதவிக்கு ஒரு சர்வண்ட் மெயிட் இருக்கிறாள்... அவ்வளவுதான்.''

பேசிக் கொண்டே இருவரும் உள்ளே வருவது தெரிந்ததும் தலையை உள்ளே



''சாதாரண தலைவலிக்காக உங்க அம்மாவைப் பக்கத்துத் தெரு டாக்டரிடம் அனுப்பி விட்டீங்களே, டாக்டர்! நீங்களே பார்க்கக் கூடாதா?''

''என்னோட கன்ஸல்டிங் ஃபீஸ், இருபது ரூபாய்; அவரோட ஃபீஸ், ரெண்டு ரூபாயாச்சே!''



அம்மாவின்
அன்புடன்
அம்மானை பிடிக்க
முயலும் அன்புச்
செல்வம்

அச் செல்வத்தை
ஊக்குவித்து வளமான
வாழ்வு அளிக்க
இன்றே போலியோ சொட்டு
மருந்து அளித்திடுங்கள்

உங்கள் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து அளித்து இளம்பிள்ளை வாத நோயிலிருந்து பாதுகாப்பு அளித்திடுங்கள்

எல்லா வார நாட்களிலும்
மாலை : 3 முதல் 6 வரை
ஞாயிறு : விடுமுறை

மருத்துவரின் மேற்பார்வையில் போலியோ சொட்டு மருந்து
டிரிபிளாண்டிஜென் மற்றும் மீஸில்ஸ் வாக்ஸின்
அளிக்கப்படும் இடம் :

தமிழ்நாடு தாதா பார்மஸூடிகல்ஸ் லிமிடெட்

10, பத்மாவதியார் சாலை, ஜெய்பூர் நகர், (ஆயிரம் விளக்கு மசூதி அருகில்)
சென்னை-600 086. தொலைபேசி : 470656 479603

[illegible]



இழுத்துக்கொண்ட சீதாவுக்கு, இந்தப் பூமி வெடித்து அந்த சீதாதேவி போனது போல் தானும் உள்ளே போய்விட்டால் என்ன என்று தோன்றியது.

ஹாலில் இருவரும் அமர்ந்து பேசத் தொடங்கியதும் அவன், "சீதா... சூடா இரண்டு கப் டீ கொண்டு வா..." என்றான்.

டீயுடன் ஹாலுக்குச் சென்றவளைப் பார்த்து முறுவலித்தவள்,

"இவள்தான் உங்க செர்வன்ட் மெயிடா கோபி?" என்றாள்.

"ஆமாம்" என்ற கோபி, தன்னையே கண்களில் நீர் மல்கப் பார்த்துக் கொண்டிருந்த சீதாவிடம்,

"டீயை இப்படி வைச்சுட்டுப் போம்மா!" என்றான்.

அவமானத்தோடு உள்ளே சென்ற சீதா குமுறிக் குமுறி அழுதாள்.

"சீதா"- பரிவுடன் அழைத்த கோபி அவள் தோள் மீது கையை வைத்து அணைத்தபடி அழைத்துச் சென்று கட்டிலில் தன் அருகே உட்கார வைத்தான்.

இது எதற்கு அஸ்திவாரமோ...? 'இவ்வளவு பரிவாக என்னிடம் நடந்து கொள்ள மாட்டாரே...' அவள் குழப்பத்தோடு அவனைப் பார்த்தாள்.

"கண்ணன் தூங்கியாச்சா?"

"உம்."

"ஜுரம் தேவலையா?"

"உம்" ... 'ரொம்பதான் அக்கறை!'

"சீதா... நாவலின் இரண்டாவது பகுதியை எழுதியாச்சா?"

"இல்லே... இன்னமும் முடிக்கலே"

"நிறைகுடம் பத்திரிகையில் சிறுகதைப் போட்டி ஒன்று வைத்திருக்கிறார்கள். சிறந்த பரிசாக ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். அதையும் உடனே எழுதித் தயாராக வைத்திரு... அனுப்பலாம்... என்ன?" என்றவன் அவள் எதுவும் பேசாமல் கேள்விக் குறியோடு அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு,

"சீதா... வந்து... இப்போ வந்தாளே... நளினி... அவள் என்னுடைய ரசிகை. நளினியோட அப்பா தனகோடி பெரிய லட்சாதிபதி... ஏராளமான சொத்து சுகம் இருக்கு... இருந்தும் அவள் என்னைத்தான் மணக்க ஆசைப்படுகிறாள்... என்றவன் தயங்கியபடி.. நானும்... அவளை... விரும்பறேன் சீதா" என்றான்.

சீதா விருட்டென்று எழுந்து நின்றாள்.

"அதிர்ச்சியாக இருக்கா?... அவளுக்கு நான் மணமானவன் என்றே தெரியாது... அதான் பார்த்தாயே இப்போ... அதனாலதான் உன்னை வேலைக்காரி'என்றேன்..."

"அதனாலே..!" தன்னையுமறியாமல் வீறிட்டாள்.

"அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை எங்கள் திருமணம் திருப்பதியில் நடக்கப் போகிறது..."

அவன் பேசப் பேச அவளுக்கு கண்கள் இருண்டு உலகமே தட்டாமாலை சுற்றுவது போல இருந்தது.

"என்ன யோசனை... எப்படி இந்த கல்யாணத்தைத் தடுக்கலாம் என்று யோசிக்கிறாயா... ஒன்றும் நடக்காது... அனாவசியமா அழுது ஆர்ப்பாட்டம் செய்யாமல் இரு... உன்னை நான் டைவோர்ஸ் பண்ண விரும்பலே... நீயும் எங்களுடனேயே இதே வீட்டில் கண்ணனோடு இருக்கலாம்..."

அவன் பேசியது எதுவும் அவள் காதில் விழவில்லை. உணர்வுகள் மரத்துப் போன நிலையில் இருந்தாள் அவள். அவள் உள்ளம் குமுறிற்று.' அவன் அவளை இலட்சியம் செய்யாமல் கட்டிலில் படுத்துக் கொண்டான்.

கதை எழுத ஒருத்தி... அனுபவிக்க... புகழில் பங்கு பெற இன்னொருத்தியா...? நாவலையா முடிக்கணும்... மாட்டேன்... மாட்டேன்... பாதகனே... கொலை பாதகா... நான் இருட்டில்இருந்துகொண்டுஉன்னைஒளிபெற விட்டேனே... இதற்கா தண்டனை? அப்படியே சுவரில் சரிந்து கொண்டு அமர்ந்தவள் அழ ஆரம்பித்தாள். இதயமே வெடித்து விடுவது போலக் கதறினாள்!

அசையாமல் ஒன்றுமே தோன்றாமல் இரவு வெகுநேரம் அழுது கொண்டிருந்தாள் சீதா.

விடியற்காலை, பொழுது புலரும் முன்பே எழுந்த சீதா, கண்களைத் துடைத்துக்கொண்டாள். கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனை மெல்லத் தூக்கித் தோள் மீது சாய்த்துக் கொண்டாள். கட்டிலில் நிச்சலனமாகத் தூங்கிக் கொண்டிருந்த கோபியை ஒரு நிமிடம் நின்று பார்த்தவள், நீண்ட பெருமூச்சோடு, தீர்மானமானதோர் முடிவோடு அந்த வீட்டை விட்டு வெளியேறி நடக்கத் தொடங்கினாள்.

"இனி நான் எழுதும் கதை... என் கண்ணனைக் காப்பாற்றும்" என்ற நம்பிக்கையில் அவள் விடிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தாள்.

ஆகாயமும் கனவுகளும்

— ஜி. நடராஜன்



"சாந்தி, உனக்கு விஷயம் தெரியுமா, இன்னிக்கு உன் வீட்டுக்குப் பிரபல டைரக்டர் கருடராஜன் பெரிய காண்டெஸ்ஸா காரிலே வந்துட்டுப் போயிருக்கார்."

டைப்பிங் இன்ஸ்டிட்யூட்டிலிருந்து வந்து கொண்டிருந்த சாந்தியை எதிர் கொண்ட அலமேலு மூச்சு வாங்கக் கூறியபோது, சாந்திக்குக் கலர் கலராக நட்சத்திரங்கள் பூவாரி விட்டன.

நகரத்தை விட்டுச் சற்றுத் தள்ளியிருக்கும் அந்த மேலூர் அக்கிரகாரத்து சாஸ்திரிகளின் ஒரே பெண் அவள். பார்ப்பதற்கு சினிமா நடிகையை விடக் கவர்ச்சியாகத்தான் இருப்பாள். பதினேழு முடிந்து பதினெட்டில் அடியெடுத்து இளமைக் கவிதைகள் பாடி, கனவுகள் கண்டு கொண்டிருக்கும் அவளுக்கு உள்ளூர் வாலிபர்கள் 'அன் அஃபிஷியலா'கவே ரசிகர் மன்றம் வைத்துப் பால் குடம் எடுத்தார்கள்.

கவர்ச்சிகரமான கண்கள். அடிக்கடி மாறும் முகவெட்டு. 'நீ சினிமா நடிகை ஆனா நிறைய சம்பாதிப்பேடி' என்று பக்கத்து வீட்டுச் சினேகிதிகள் முதல் இன்ஸ்டிட்யூட் மானேஜர் வரதராஜன் வரை ஆசை மூட்டியதும் அவளுக்குத் தானாகவே ஒரு 'ஸ்டார் வால்யூ' வந்துவிட்டது. பத்திரிகைகள் பல வாங்கிக் கிசுகிசுக்களைக் கரைத்துக் குடித்து, அறிமுகங்களுக்குப் புகைப்படங்கள் அனுப்பி, பஸ் ஸ்டாண்டில் ஒயிலாக நின்று அப்போதாவது டி. ராஜேந்தர் மாதிரி யாராவதுகண்டுபிடித்துசான்ஸ்தரமாட்டார்களா என்று தவம் கிடந்து... தவிர, ஊரைச் சுற்றி வயல்கள், பசுஞ்சோலை, அடிக்கடி ஷூட்டிங் நடக்கும். அங்கெல்லாம் ஆஜராகி விடுவாள். 'ஒரே ஒரு சான்ஸ் கொடுத்தால் அமலா விமலா மாதிரி புகழ் கிட்டி விடாதா? அப்புறம் கொஞ்ச நாட்கள் தமிழ்ப் படங்களைப் புறக்கணித்து, மலையாளப் படங்களில் கந்தர்வ சொப்பனங்கள் படைத்து, அப்புறம் தெலுங்கில் பிசியாகி... அம்மாடி! திருமணம் மட்டும் தன் வாழ்வில் குறுக்கிட்டு விடக்கூடாது...'

வீட்டையடைந்ததுமே, திண்ணையில் ராமாயணம் படித்துக் கொண்டிருந்த அப்பாவிடம் "என்னப்பா, சினிமா டைரக்டர் கருடராஜன் வந்திருந்தாராமே?" என்று ஆவல் பொங்க, இமைகள் படபடக்கக் கேட்டாள்.

"ஆமாம்மா...நீதான் அந்தச்சமயம்இருக்கலியே... நான் என்னத்தைப் பேசறது அவர் கிட்டே? ஏனக்கு என்ன தெரியும், இந்த ஷூட்டிங் விவகாரம் எல்லாம்?"

"என்னப்பா இது, சான்ஸ் கேட்டு வந்தால் சம்மதம்னு சொல்லியிருக்க வேண்டியதுதானே?"

"அம்மா சாந்தி... நீ என் ஒரே பெண்.... உன்னைக் கேட்காமல் நான் எப்படியம்மா.. பம்பாய்லேதான் ஷூட்டிங் இருக்குமாம்... நம்ம கலாசாரம் கோயில் இதெல்லாம் விட்டுட்டு..."

"மண்ணாங்கட்டி... இந்த சான்ஸ் ஆயிரத்தில் ஒண்ணு அப்பா... எனக்குப் பூரண சம்மதம்... அட்வான்ஸ் கொடுத்தாரா?"

"இல்லேம்மா... நாளைக்கு இதே நேரம் வர்றேன்னு சொல்லிட்டுப் போனார்."

"உடனே சம்மதம்னுடுங்கோப்பா... நான் தயார்..."

"நீ எதுக்கும்மா தயாராகணும்? அவர் தேடி வந்தது என்னைன்னு...!"

"என்னது?"


"ஹீரோயினுக்கு அப்பாவா, சாஸ்திரிகள் வேஷத்துலே ரெண்டு காட்சிகள்லே நடிக்கத் தயாரான்னு என்னைன்னு பம்பாய்க்குக் கூப்பிட்டிருக்கார்... எனக்கு என்ன கவலைன்னு உன்னைத் தனியா விட்டுட்டுப் பணத்துக்காக அந்த சினிமாக்காரங்களோட நான் எப்படிப் போயிட்டு வர்றதுன்னு..."

நடிகை, சூப்பர் ஸ்டார், நம்பர் ஒன் ஸ்தானம், ரசிகர் மன்றங்கள், பத்திரிகை கிசுகிசுக்கள், அத்தனை கனவுகளும் புஸ்வாணமாகப் புகைய நின்றாள் சாந்தி.

SRICHAND ENGINEERING & MOULDING CO.,

Mfrs.: All Types of Braiding Machines & Exporters.
'E' WARD, KUBERNAGAR, AHMEDABAD-382 340.

SEMCO Machines: approved by NSIC.



High Speed 3Ply Twisting Machine

STOVE WICKS ஸ்டவ் திரி, BRAIDED CORD பின்னல் கயறு காட்டன் & ஆர்ட் சில்க் டேப் ரகங்கள், எலாஸ்டிக் டேப் & கயறு ரகங்கள், ASBESTOS ROPE அஸ்பெஸ்டாஸ் கயறு, இன்சுலேஷன் சிலீவிங்க்ஸ் INSULATION SLEEVING மற்றும் ஹைஸ்பீடு நீடில் டேப் லூம்

★ சப்ளை செய்கிறோம் ★

APPROVED SUPPLIERS.
National Small Industries Corpn. Ltd., Madras-6.

For Particulars: Phone: 31939

SREE MAHENDRA BROS.,
5, OLD ENGLISH CLUB STREET,
Near Sourashtra High School, MADURAI-625 009.

S. R. உபேந்திரன், 160-A 1 காமராஜர் சாலை, நிர்மலா ஹைஸ்கூல் சமீபம், மதுரை-625 009.

— ஆத்மாஸ்

ரெங்காச்சாரி சாரிஸ்

(மிக மிக உயர்ந்த பட்டும் நூலும் கலந்து தயாரிக்கப்பட்டது)
8, ஏலா கந்தப்பன் தெரு, (வால்டாக்ஸ் ரோடு, ப்ளூ ஸ்டார்
இண்டர்நேஷனல் ஹோட்டல் அருகில்
சென்னை—600 003 போன்: 33779
(கிளை: 57, ஆர்.கே. மடம் ரோடு, மந்தைவெளி
(மந்தைவெளி போஸ்ட் ஆபீஸ் அருகாமை)
சென்னை—28 போன்: 77178

ரெங்காச்சாரி சாரிஸ் கிடைக்கும் இடங்கள்:

எம்.என். நாகேந்திரம் சன்ஸ், மலைவாசல் (உட்புறம்) திருச்சி—620 002, போன்: 24053; திரு டி.எஸ். வெங்கடாசலம் நெ. 6, தளவாய் தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்—2; திருமதி எஸ். செல்லமணி, நெ. 46, கிழக்கு 2வது தெரு, மன்னார்குடி, தஞ்சாவூர் மாவட்டம்; திருமதி சாரதா கணேஷன் நெ. 408, கீழ 4ம் வீதி, புதுக்கோட்டை—1; டி.எல். சுப்பிரமணியன், நெ.47, சுந்தரேஸ்வர சுவாமி கோவில் தெரு, கொசப்பேட்டை, வேலூர் (வ.ஆ.); திருமதி ஆர். சாந்தா நெ. 6, காசி விஸ்வநாதர் கோவில் தெரு, மஹா மஹ குளம், கும்பகோணம், தஞ்சை மாவட்டம், போன்: 1108; சி.கே. கார்த்திக் நெ. 5., ஏ.இ.இ. ரோடு, பாலரெங்க புரம், மதுரை — 9. ஜெயா ஷாப்பிங் சென்டர், 2 — 2 — 647 — 28/22 சென்ட்ரல் எக்ஸ்சேன்ஞ் காலனி, சிண்டிகேட் பாங்க் எதிரில், நியு நல்லகுண்டா, ஹைதராபாத்—13

குறிப்பு: சென்னை நகரில் எந்த கடைகளுக்கும் எங்கள் புடைவை சப்ளை கிடையாது. மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.



நெருப்பாக நீ

பொறி கலங்கிப் போய்விட்டாள் இன்பா.

ஏதோ விளையாட்டாய் வரையப் போய், அது இத்தனை பெரிய விபரீதத்திலா கொண்டு போய் விடவேண்டும்....

புவனா மயங்கி விழும்போதே ஓடிச் சென்று தாங்கிப் பிடித்தவன் நந்துதான்.

மாதையன் தண்ணீர் எடுத்து வர ஓடுகிறான்.

லோகநாதனோ, சிலை மாதிரி பிரமித்து நின்றுவிட்டார்.

''அப்பா.... டாக்டருக்கு போன் பண்ணுங்க....''

நந்து அதட்டிய பிறகுதான் அவருக்குச் சுய நினைப்பே வருகிறது.

டாக்டருக்கு போன் செய்யும் போதுகூட அவரது கண்கள் இன்பா துணியில் எழுதி யிருந்த சித்திரத்தின் மீதே இருக்கின்றன.

என்ன தத்ரூபமான ஓவியம்.... அந்த முகம், பார்வை, நகைகள், ஏன், புடைவை டிஸைன் கூட மாறவில்லையே....

இன்பா, புவனாவின் அலறலில், கையிலிருந்து பேலட்டை விட்டெறிந்துவிட்டுத் திரும்பிய தால், மங்களாம்பாளின் வலது நெற்றிப் பொட்டுப் பக்கமும், கழுத்துப் புறமும் சிவப்பு. வர்ணம் வாரியடித்திருந்தது.

மொத்தத்தில், லோகநாதன் கடைசியாய்ப் பார்த்தபோது மங்களாம்பாள் எப்படியிருந் தாளோ, அப்படியே அச்சாக இருந்தது அந்த ஓவியம்.

'ஐயய்யோ... கடைசியில நீங்க இங்கேயா இருக்கீங்க...'

புவனாவின் இந்த அலறலை வேறு யார் யாரெல்லாம் கேட்டிருப்பார்கள் என்று யோசித் துப் பார்க்கிறார்.

இன்பா.... நந்து.... மாதையன்....

மாதையன் எசமானியம்மாள் விழுந்ததிலேயே அதிர்ச்சியுற்றிருப்பது முகத்திலேயே தெரிந்தது.

இன்பாவின் முகத்திலிருந்து எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை. மேலும், அவளையே மங்களாம்பாளாக அவர் கருதுவதால் அவர், அவளது. எண்ண ஓட்டத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை.

'நீ இன்னும் என்னவெல்லாம் செய்யப் போறே....'

இந்தக் கவலைதான் அவருள்....

'ஆனால் நந்து, அவன் ஏதாவது புரிந்து கொண்டிருப்பானோ, என்னைப் பற்றிய உண்மை அவனுக்குத் தெரிந்து விடுமோ....

அவர் அவன் முகத்தையே உற்றுப் பார்க்கிறார்.....

ஊஹூம்.... அவன் மயங்கி விழுந்த தாயையே பார்த்துக் கொண்டிருக்கிறான்.

கடைசியில — மங்களா, இந்தத் தூணுக் குள்ளயா...?

அடக் கடவுளே...

நல்லசிவம் ஏன் இப்படிச் செஞ்சான்...?

இப்ப நாலு பேருக்கு நடுவுல தூணை உடைக்கவும் முடியாது...

மங்களாம்பாளோட, அந்த நகைகளுக்கும் சேர்த்துச் சமாதியா...

என்றோ, மங்களாம்பாள் சொன்ன வார்த்தைகள் நினைப்புக்கு வருகிறது...

"என்னிஷ்டமில்லாம, நகைகங்களே என் கிட்டயிருந்துப் பறிக்கணும்னு நினைச்சா மட்டும் முடியாது... நான் உயிரோட இருக்க றப்ப மட்டுமில்லே... செத்ததுக்கு அப்புறமா வும், நகைகள் யாருக்கும் பிரயோசனமில் லாதபடி செஞ்சிடுவேன்."

லோகநாதன், புவனாவின் அருகில் மண்டி யிட்டு அமர்ந்து, அவள் முகத்தில் ஈரத் துணியை ஒற்றிக் கொண்டிருக்கும் இன் பாவை ஆத்திரத்துடன் பார்க்கிறார்.

'சண்டாளி... கடைசி மட்டும் தான் பிடிச்ச பிடியை விடவே இல்லையே... பாவி... இருந் தும் என் நிம்மதியைக் கெடுத்தா... செத்தும் கெடுத்தாளே...'

டாக்டர் வீட்டுக்கு போன் செய்து விட்டு ஓர் அரை மணி நேரம், கூடத்தில் கையைப் பிசைந்து கொண்டு நிற்கிறார் அவர்.

இதற்குள், நந்து — தாயைக் கொண்டு போய் அவளது அறையில் படுக்க வைக் கிறான்...

இன்பா, அவனுடன் தயங்கித் தயங்கிப் போகிறாள்.

அப்பொழுதுதான் லோகநாதனுக்குச் சுய உணர்வு வருகிறது...

"மாது...

"என்னங்க...?"

"இந்தத் தூணை சுத்தி ஒரு திரையைக் கட்டு... ஆச்சு... இப்ப டாக்டர் வருவாரு... நம்ம வீட்டு விஷயம், அவர் எதிருல வேறே சந்தி சிரிக்க வேண்டாம்!"

மாதையன், எஜமானரை விநோதமாய்ப் பார்த்தபடியே தலையசைக்கிறான்.

இத்தனை வருஷத்தில் — டாக்டருக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம் என்று லோக நாதன் எதையும் மறைத்ததில்லை...

இப்பொழுது இந்த மறைப்பே — அவனுள், புழுக் குடைச்சலாய்...

டாக்டர் வரும் போது, அப்படியே மாடிக்கு அழைத்துப் போகத் தயாராய் நிற் கிறார் லோகநாதன்.

"என்ன ஆச்சு திடீர்னு..."

டாக்டர் வர, அவர் பின்னாலேயே — முகத்தை முன்னுக்கு நீட்டியபடி ஸ்டேஷன் மாஸ்டரும் வர...

'இவனெங்கேயிருந்து திடீர்னு முளேச் சான்...?'

ஸ்டேஷன் மாஸ்டரின் வருகையினால் லோகநாதன் முகத்தைச் சுளிக்க...

அவரையும் கூடத்தில் நிற்க விடாமல், மாடிக்கே அழைத்துப் போய் விடுவது என் கிற தீர்மானத்தோடு லோகநாதன் அச ்மரை. வடம் போட்டு இழுக்காத குறையாக இழுக் கிறார்...

"நீரும் வந்து பார்க்கிறது... திடீர்னு இருந் தாப்பல இருந்து மயக்கம் போட்டு விழுந் துட்டா புவனா... ஏதாவது காத்து, கறுப்போட வேலையா என்னன்னு தெரி யலே... பார்த்துச் சொல்லுங்கோ..."

ஸ்டேஷன் மாஸ்டர் சற்று தயங்குகிறார்.

அவருக்கு வியாதியஸ்தர்களைப் பார்க்கும் போதே மயிர்க்கால்களில் சிலிர்ப்பெடுக்கும். மேலும், காலையிலிருந்து அவர் விழித்த முகமே சரியில்லே என்பது போன்ற சலிப்பு வேறு...

"நான் அப்புறம் பார்க்கறேன்... நானும், டாக்டரும் சேர்ந்து ஒரு பேஷண்ட்டைப் பார்க்கறதுங்கறது அத்தனை சிலாக்கியு மில்லே... நீங்க அவரை அழைச்சுண்டு போய்க் காமிங்கோ..."

அவ்வளவுதான்... கூடத்து சோபாவி லேயே உட்கார்ந்து மூக்கை அடிக்கொரு தரம் சுளித்துக் கொள்கிறார்.

"என்ன டர்பன்டைன் வாசனே... இல்லே.. பெயிண்ட் வாசனே வர்றது..."

"நந்துதான் என்னமோ வரைஞ்சிண்டிருந் தான்... மாதையா..."

அவசரமாய் லோகநாதன் குரல் கொடுக் கிறார்.

"இதோ... இங்கே இருக்கேங்க..."

அவன் கைகட்டி வந்து நிற்கிறான்.

"இங்கேயே இரு... ஜோஸியரய்யாவுக்குக் காப்பி, பலகாரம் கொண்டு வந்து தரச் சொல்லு... நீ ஓடாதே... அதுக்குன்னு வேலைக் காரங்க இருக்காங்க இல்லே... கூப்பிடு..."

ஸ்டேஷன் மாஸ்டர் ஆச்சரியத்துடன், ஜமீன்தாரையே பார்க்கிறார்.

டாக்டருக்குமே லோகநாதனின் செய்கை கள் வித்தியாசமாகத்தான் இருக்கிறது...

'என்ன ஆச்சு இவருக்கு...?'

மாடியில், படுக்கையில் நினைவு நீச்சில் லாமல் கிடக்கிறாள் புவனா.

"என்ன நடந்தது...?"

டாக்டரின் கேள்விக்கு, நந்து பதில் சொல்ல ஆரம்பிக்க — லோகநாதன் அவசர மாய் முந்திக் கொள்கிறார்.

"ஒண்ணுமே நடக்கலே... திடுதிப்புன்னு தலை சுத்தி விழுந்துட்டா..."

தந்தையை வெறித்துப் பார்க்கிறான் நந்து.

'எதற்காக அநாவசியமாய்ப் பொய் சொல்ல வேண்டும் அப்பா... ஒரு வேளை, அம்மா வாய் திறந்து பேசினதை அவர் கவ னிக்கலேயோ...?'

அவன் குறுக்கிட்டுக் குட்டை உடைக் கிறான்...

"ஏம்பா... அம்மா இத்தனை வருஷமா இல்லாம இன்னிக்குத்தான் முதல் தடவை யாப் பேசியிருக்கா... அதை நீங்க டாக்டர் கிட்டே சொல்லவே இல்லையே..."

"என்னது... புவனா பேசினாங்களா... என்ன ஜமீன்தார்... ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கறீங்க... எப்ப பேசினா... என்ன பேசினா...?"

அதிர்ச்சியில் டாக்டருக்கே ரத்தக் கொதிப்பு ஏறிவிடும் போல இருக்கிறது...

"அதாவது டாக்டர்..."

நந்து, மிச்சத்தைச் சொல்வதற்கு முன் — எங்கிருந்துதான் லோகநாதனுக்கு அத்தனை கோபம் வந்ததோ...

"டேய்... பைத்தியக்காரா... அதான் நான் ஒருத்தன் சொல்லிட்டிருக்கேன் இல்லே? நடுவுல எதுக்காகக் குட்டையைக் குழப் பறே? அவர்கிட்ட எதை எப்படிச் சொல்ல ணும்னு எனக்குத் தெரியும்... நீ அவளையும் அழைச்சிட்டு வெளில போ..."

முகம் கருங்கி விட்டது நந்துவுக்கு...

என்னது இது... எங்கம்மா உடம்பைப் பத்தி எனக்கு மாத்திரம் கவலையில்லையோ... நான் என்ன, இன்னும் சின்னப் பையனா...?"

"நான், டாக்டரோட தனியாகக் கொஞ்சம் பேசணும்... இப்ப நீ வெளில போறியா...?"

"அதைச் சொல்லிட்டுப் போங்க. நானு விலகிக்கறேன்... அதை விட்டுட்டு, காரண மில்லாம என்னை எதுக்காகத் திட்டணும்... நானென்ன, அத்தனை நாகரிகம் கூடத் தெரி யாதவனா...?"

அவன் 'விருட்'டென இன்பாவின் கையை யும் பற்றிக் கொண்டு அறையை விட்டு வெளி யேற...

மாடிப்படி வரையில் நகர்ந்தவனின் உள் ளங்கையைப் பிடிச்சு அழுத்துகிறாள் இன்பா.

"என்ன...?"

"ரொம்ப சமர்த்தாப் பேசினே... உன் கிட்டே காதலைத் தவிர — மத்த உணர்ச்சி களும் இருக்குங்கறதை இப்பத்தான் தெரிஞ் சுட்டேன்... ஐ லவ் யூ..."

"என்னது?"

"எனக்கு, உன்னை ரொம்பப் பிடிச்சிருக் குன்னு சொன்னேன். சீக்கிரமா நம்ம கல் யாணத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்ல ணும்... உங்க அம்மா, உசிரோட இருக்கறப் பவே நம்ம கல்யாணத்தைப் பார்த்து நாலு வார்த்தை ஆசி சொல்லணும்..."

நந்து, சந்தோஷமும் துக்கமும் தொண் டையை அடைக்க, அவளது இரு கைகளையும் பிடித்துக் கொண்டு சொல்கிறான்:

அம்மாவோட ஆசீர்வாதம் நமக்கு எப்ப வும் உண்டு இன்பா... அவ மடியில ஒரு பேரனைப் போட்டுட்டா அவ வியாதியெல் லாம் பறந்தே போயிடும்... இப்பவே பேச ஆரம்பிச்சுட்டா..."

இன்பா, எங்கோ வெறித்தபடி சொல் கிறாள்:

அதனாலதான் நான் கவலைப்படறேன் நந்து... எப்ப உங்க அம்மா, தன்னை மறந்து பேச ஆரம்பிச்சிட்டாங்களோ, அப்பவே அவங்க உசிருக்கும் ஆபத்து நெருங்கியாச் சுன்னு அர்த்தம்..."

"ஏய்... என்ன சொல்றே...?"

"இதைச் சொல்ல வருத்தமாத்தான் இருக்கு. இருந்தாலும் என்ன செய்யறது... சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம்..."



இன்பா ஒரு வினாடி தயங்கிவிட்டு, அவன் காதருகே உதட்டைப் பதித்துச் சொல்கிறாள்.

"பேசினா தன் உயிருக்கு ஆபத்துங்கறது உங்க அம்மாவுக்கே தெரியும் நந்து... அதனாலத்தான் அவங்க இத்தனை நாளும் பேசலை..."

அவன், அதிர்ந்து போய்ப் பார்க்கிறான்...

அவள், நடந்த விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்கிறாள்...

"இதை ஏன் இத்தனை நாளும் என்கிட்டே சொல்லலை நீ..."

"உன் அக்கறை வேற எதிலேயோ இருந்தது... அதுவுமில்லாம சில விஷயங்கள்லே நீ ஓட்டை வாய்... இப்ப சித்த முன்னால அப்பா முன்னாலே டாக்டர்கிட்டே உளறினியே... அது மாதிரி உளறிடுவே... இப்ப, அம்மாவுக்கு வந்திருக்கிற ஆபத்து, அப்ப, என்னாலேயோ, உன்னாலேயோ வந்திருக்கும்..."

"ஆபத்து, ஆபத்துங்கறியே... அம்மாவோட விரோதி யார்?"

"உங்க பெரியம்மாவை யார் கொலை பண்ணினாங்களோ அவங்க..."

"இன்னமும் பெரியம்மா கொலை செய்யப்பட்டதாத்தான் நம்பறியா...?"

"நம்பறது என்ன? அதுதான் நிஜம்..."

"சரி... யார் கொலை செஞ்சிருப்பாங்க...? எங்க அப்பாவா...?"

"இருக்கலாம்..."

"அவருக்குக் கொசு அடிக்கக் கூடத் தைரியம் போதாது... ஒருவேளை இந்த டாக்டரா இருக்குமோ...?"

"அதுக்கும் சான்ஸ் இருக்கு..."

அவன் முகம் சிவக்கிறது...

"இப்படிச் சொன்னா எப்படி...? ரெண்டு பேர்லே யாருன்னு பளிச்சுனு சொல்லாம...?"

அவள், அவனது காதைத் திருகுகிறாள்...

"இதப் பாரு... உங்க அம்மாவைத் தீர்த்துக் கட்ட யார் முனைப்பா இருக்காங்களோ... அவர்தான் உங்க பெரியம்மாவைக் கொலை செஞ்சதும்..."

"எங்க அப்பாவுக்கு, அம்மாதான் உலகமே... அவர், இப்படி ஒரு விஷயத்தைக் கற்பனை செஞ்சு கூடப் பார்க்க மாட்டார்..."

நந்து, இங்கே அழுத்தமாய்ச் சொல்லிக் கொண்டிருந்த அதே நேரத்தில் — லோகநாதன், டாக்டர் கையைப் பிடித்துக்கொண்டு அழுகிறார்...

"கொஞ்சம் விஷம் இருந்தாக் கொடுத்திடுங்க டாக்டர்..."

"என்ன ஜமீன்தார்வாள் இது... குழந்தை மாதிரி..."

"சாவு ஒண்ணுதான் என் நிம்மதிக்கு வழி..."

டாக்டர், லோகநாதனையே வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார்.

(தொடரும்)


மேனி
ரெக்ஸோனா
AND GLOWING SKIN
மின்னி மிளிரும் மேனி...எந்நாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா
உங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
LINTAS RX 90 2416 TM

தமிழகத்தில் இந்திரா காங்கிரஸ்...

இந்திரா காங்கிரஸ் அ.தி.மு. க. வைச் சார்ந்திருக்க வேண்டும்
முதல் பரிசு வாதம்

காமராஜருக்குப் பிறகு தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குச் சரியான தலைமை இதுவரை அமையவில்லை. மேலும் தமிழகத்தில் இ. காங்கிரஸில் செயல் திறமையும், தீவிர ஆர்வமும், துடிப்பும், பற்றும் உள்ள தொண்டர்கள் அதிகம் இல்லை. இந்த இரண்டும் இல்லாத நிலையில் தமிழகத்தில் இ. காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்துதான் இருக்க வேண்டும்.

மேலும் இன்று மக்களிடையே நிலவும் பிராந்திய மனப்போக்கு நீங்கும்வரை, அகில இந்தியக் கட்சியான இ. காங்கிரஸ் தமிழகத்தில் அ. தி. மு. க. வைச் சார்ந்து தான் இருக்க வேண்டிய நிலையில் உள்ளது.

தமிழகத்தில் இ. காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்திருப்பதால், அக்கட்சியுடன் தேர்தல் உடன்பாடும், தொகுதிப் பங்கீடும், சுமுகமான முறையில் வைத்துக் கொள்ள முடிகிறது. இதனால் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், சட்டமன்றத் தேர்தல்களிலும், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலும் கணிசமான இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் வெற்றி பெற முடிகிறது. தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டிருந்தால்இவைநிச்சயம்கிடைத்திருக்காது.

எம். ஜி. ஆர். அவர்களுக்குத் தமிழகத்தில் நல்ல செல்வாக்கு உள்ளதோடு அவர் நம் பிரதமர் ராஜீவ் காந்தியுடனும், தமிழக இ. காங்கிரஸ் தலைவர்களுடனும் மிகவும் சுமுகமாகவும், நெருக்கமாகவும் இணைந்து செயல்பட்டு வருகிறார். இந்தச் சூழலில் தமிழகத்தில் இ. காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்துதான் இருக்க வேண்டும்.

தமிழகத்தில் இ. காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்து இருப்பதால், எம். ஜி. ஆர்., அவர்களின் தலைமைக்குப் பின்பு, அ. தி. மு. க. வில் உள்ள ஒரு கணிசமான பகுதியினர் நிச்சயம் இ. காங்கிரஸில் இணையக் கூடிய நிலை உருவாகும். அப்போதுதான் தமிழகத்தில்இ.காங்கிரஸ்பலமிக்கஅரசியல் கட்சியாகத் தனித்து நிலைத்து இயங்க முடியும்.

— கே. சுப்பராஜ், விருதுநகர்.

பாதாளத்தில் தள்ளப்பட்டிருந்த இ. காங்கிரஸ் சட்ட சபையில் இரண்டாவது பெரும் கட்சியாக உயர்த்தப்பட்டதென்றால் அதற்கு அ.தி.மு.க. — இ. காங்கிரஸ் தேர்தல் உறவு முக்கியக்காரணமாகிறது.தமிழகத்தில்உள்ள மற்ற கட்சிகளை விட இ. காங்கிரஸில் கோஷ்டி பூசல் தொடர்ந்து நீடித்து வருவதால் தனித்து நின்று ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்குச் செல்வாக்குள்ள கட்சியாக அது உருவாகும் என்று தோன்றவில்லை. எனவே, இ. காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்து தான் இருக்க வேண்டும்.

— சோ. கனகராஜன், ஆலங்குடி.

'67 க்கு முன் ஆளும் கட்சியாக இருந்த இ. காங்கிரஸ் கட்சி, பிரச்சார இயக்கத்தில் போதிய கவனம் செலுத்தாமல் இருந்து வருவது துரதிர்ஷ்டமே. தி. மு.கழகத்திற்கும், அ. இ. அ. தி. மு. கழகத்திற்கும் தமிழகத்தில் அவர்கள் கொள்கைகளை விளக்கும், தினசரி, வாரப் பத்திரிகைகள் உள்ளன. இ. காங்கிரஸ் கட்சிக்கோ, தற்போதுதான் பாரதம் என்ற நாளேடு ஒன்று வெளிவரத் துவங்கியுள்ளது. அதுவும் இப்போது காணமல் போய்விட்டது.

வாசகர் தீர்ப்பு

இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க. வைச் சார்ந்திருக்க வேண்டும் 34%

இந்திரா காங்கிரஸ் சுதந்திரமாகத் தனித்தியங்க வேண்டும் 66%



பிரதான பேச்சாளர் இரண்டு மாதம், மூன்று மாதம் கழித்துத்தான் கிடைப்பார். அதுவரை கூட்டம் நடத்தாமல் இருப்பது. பின் பிரதான பேச்சாளர் வந்தால் தடபுடலான விளம்பரம், வித்தோ போஸ்டர், மேடை அலங்காரம் என்று ஒரு கூட்டம்

நடத்திவிட்டு, அந்தப் பெருமையை அடுத்த ஆறுமாதங்கள் சொல்லிக்கொண்டு உட்காருவது போன்ற போக்கு இ. காங்கிரஸிலுள்ள பலவீனமே. மக்கள் கட்சியாக மலராத வரை இ. காங்கிரஸ் அ. இ. அ. தி. மு. க. வைச் சார்ந்துதான் தமிழகத்தில் இயங்க வேண்டும். வேறு வழி இல்லை.

— ஹானஸ்ட்ராஜ்மோகன், புதுக்கோட்டை.

. தமிழக மக்கள் கவர்ச்சியும் உணர்ச்சியும் எங்கே நடக்கிறதோ, அங்கே மனத்தைப் பறி கொடுக்கும் நிலைக்குப் பண்பட்டு விட்டனர். தாயின் மணிக்கொடியின் மகிமையை உணராத தாய்க்குலம் ஒரு முழ மல்லிகைப் பூவிற்கு மனத்தைப் பறிகொடுக்கத் தயாராகியுள்ள நிலையில், தமிழகத்தில் இ. காங்கிரஸ் இரட்டை இலைகளில் ஒட்டுண்ணியாக ஒன்றுவதே நன்று. இப்போதைக்கு அ. தி. மு. க. காக்கைக் கூட்டில், இ. காங்கிரஸ் குயில் முட்டை இடுவதே நல்லது.

— புலவர் பெ. நடராசன், திருச்சி — 5.





கட்சிக்கும் சக்தியில்லை, கட்சிக்காரங்களுக்கும் கட்சியைத் தாங்கி நிறுத்தற சக்தியில்லை. இந்த நிலைல தனியா நிற்பேன்ங்கற ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா? நிற்கறதுக்கே தானம் போடற நிலைல, 'நாற்காலி'ல போய் உட்கார வேறு செய்யணும்! இதுக்கு ஒரே வழி 'இப்ப இருக்கிறவங்களோட தயவா இருந்துக்கறதுதான். மணக்கணும்னா, பூவாக முடியல்லேன்னாலும், நாராகவாவது இருந்தாத்தானே மணக்கலாம்.

— நிவேதிதா, நாச்சியார் கோயில்

சினிமாவில் வளர்ந்த பாசம், பற்று, மக்களுக்கு எம். ஜி. ஆரிடம் நிஜ வாழ்க்கையிலும் வேரூன்றி, ஆழமாக, பரவலாக வளர்ந்துவிட்டது. அ.தி.மு.க. அரசு தோன்றியது. இதை மேலும் நிலைபெறச் செய்தவை, முதியோர் உதவித் தொகை, இலவச வேட்டி — சேலை வழங்குதல், சத்துணவு வழங்குதல், விதவைகளுக்கு வேலை வாய்ப்பு, அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு, அரசு மூலம் பலதரப்பட்ட நன்கொடைகள், உதவிப் பணம் வழங்கல் முதலியன. இந்நிலையில் மக்களின் கவனத்தைத் தேர்தல் களத்தில் திருப்புவது என்பது இயலாத காரியம். மத்திய அரசு, மாநில அரசை அணைத்துச் செல்ல வேண்டும். இதுவே சிறந்த ராஜதந்திரம். இதைத்தான் காங்கிரஸ் செய்து வருகிறது. இதனால் மத்திய அரசுக்கும் பெரும் பிரச்னை இல்லை; மாநில அரசுக்கும் பெரும் தலைவலிகள் இல்லை.

— டாக்டர் சி. ஜெகநாதன், சேலம்.

இந்திரா காங்கிரஸ் தனித்தியங்க வேண்டும்

முதல் பரிசு வாதம்

ஒரு ஊரில் யானை ஒன்று இருந்தது. ஒருநாள் அது வழிதவறிக் குட்டையில் மாட்டிக்கொண்டது. விழுந்த வேகத்தில் சேற்றை வாரிவாரித் தன் உடல்மீது போட்டுக்கொண்டது. குட்டையிலிருந்து வெளிவந்தும் துர்நாற்றம் அதைவிட்டுப் போகவில்லை. தன் கம்பீரத் தோற்றத்தையும் பலத்தையும் மறந்து திரிந்தது. ஊரில் அதன் மதிப்புக் குறைந்து போயிற்று. அந்த யானைதான் தமிழக இ. காங்கிரஸ். அதைப் புனிதப்படுத்தி, புத்துணர்வு ஊட்டினால்தான் இந்த ஆட்சியின் ஊழல், லஞ்சம், சுயநலம், அரசியல் பித்தலாட்டம் முதலியன ஓரளவாவது கட்டுப்படுத்தப்





படும். இந்த அரசியல் மோசடிக்குக் காங்கிரஸ் கட்சியும் துணை போனால் தமிழகத்துக்கு விமோசனமே கிடையாது.

மதுரையில் நடைபெற்ற ரசிகர் மன்றக் கூத்தை நேரில் பார்த்த எந்த சுய அறிவுள்ள மனிதனும், தமிழகம் கற்காலத்தை நோக்கிப் பீடுநடை போடுகிறது என்றுதான் நினைப்பான். காங்கிரஸ் மேலிடமும் கீழிடமும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஏன்? பன்றியோடு சேர்ந்த பசுவுக்கும் அந்தச் சேர்க்கை தோஷம் வந்துவிட்டது. அ. தி. மு. க. வைச் சார்ந்திருப்பதால் காங்கிரஸ் தலைசாய்ந்து போயிற்று.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று' இந்த வரி சிறுவர் பாடப் புத்தகத்திலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு கலந்து கொள்ளும் அரசு நிகழ்ச்சியில், எம். ஜி. ஆர்., தொழிலாளி படத்தில் பாடிய பாட்டு "நீராரும் கடலுடுத்த" இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. இன்னும் ஒருபடி மேலே போய் ஒரு பள்ளித் தலைமை ஆசிரியர் மேடையில் பேசுகிறார், "எம். ஜி. ஆரின் சினிமாப் பாடல்களைப் பள்ளியில் 'மாரல் சயன்ஸ்' பாடமாக வைக்க வேண்டும்" என்று. இப்படிப் பிஞ்சு உள்ளங்களில் நஞ்சு கலவாமல் தடுக்கக் காங்கிரஸ் தனித்து இயங்க வேண்டாமா?

தமிழக அரசியலே ஒரு சினிமா ஆகிவிட்டது. அதில் காணும், பொய் வேடங்களை மெய்யென்று நம்பும் அப்பாவி கிராமத்து மக்களிடம் ஒரு விழிப்பு உணர்ச்சி ஏற்படச் செய்யாமல் காங்கிரஸ் கட்சியும் அதில் குளிர் காயலாமா? அது தன்னை உணர வேண்டும். தேர்தல் சமயத்தில் அல்லாது சாதாரண நாட்களிலும் மக்கள் சேவையில் ஈடுபட வேண்டும். அது ஒரு சேவை மனப்பான்மை கொண்ட உயிருள்ள கட்சி என்ற எண்ணம் மீண்டும் மக்களிடம் உண்டாக வேண்டும். தமிழகம் மாயையிலிருந்து விடுபட வேறு வழியில்லை.

— ஆர். எம். தேனம்மை, ஒசூர்.

அ. தி. மு. க. வுடன் கூட்டு சேர்ந்திருப்பதால் அவர்கள் செய்யும் கோமாளித்தனங்களையெல்லாம் அங்கீகரித்தது போல அல்லவா ஆகிவிட்டது? கூட்டணி என்று இருந்தாலும் முக்கியமான விஷயங்களில் எதிரும், புதிருமாக அறிக்கை விடுவதே வழக்கமாகி விட்டது. "21 ஆம் நூற்றாண்டுக்கு அழைச்சிட்டுப் போறேன் வாங்க" என்று ராஜீவ் அழைப்பு விடுக்க, அவரது தோழமைக் கட்சியினர் சம்புவரையர் மாவட்டம், அந்த மாவட்டம், இந்த மாவட்டம்னு பேர் வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். (எங்க ஹீரோ வந்தியத்தேவனுக்கு ஒரு மாவட்டம் கிடையாதா சார்?) இப்படி முரண்பாடுகளையுடைய கூட்டணியைத் தவிர்க்க வேண்டும்.

— வே. மீனு, திருச்செந்தூர்.

1967 இல் காங்கிரஸ் மீது வெறுப்புற்ற மக்கள் தி. மு. க. ப்க்கம் திரும்பினார்கள். ஆனால் கிடைத்ததோ ஏமாற்றம். அடிமுதல் நுனி வரை ஊழல் என்ற நிலை. அதை விடுத்து அதிலிருந்து பிரிந்த அ. தி. மு. க. பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள். ஆனால் இன்றோ அ. தி. மு. க. கொள்ளையின் மொத்த உருவமாக இருக்கிறது. காங்கிரஸோ கழகங்களின் முதுகிலேயே காலந்தள்ள நினைப்பதால் அதை நம்ப முடியவில்லை. வெறுப்புற்ற

மக்கள் யார் பக்கம் போவது என்று திண்டாடி நிற்கிறார்கள்.

— சிவ. சோமசுந்தர, மறைஞாயநல்லூர்.

அ. தி. மு. க. எம். ஜி. ஆரால், எம். ஜி. ஆருக்கென அமைக்கப்பட்ட கட்சியாகத்தான் இயங்கி வந்துள்ளது. பத்தாண்டு காலத்தில், அண்ணாவின் கொள்கைகளிலிருந்து, எல்லா வகைகளிலும் திசை திருப்பப்பட்டு, இன்று நங்கூரமில்லாத கப்பல் போல், எம். ஜி. ஆரின் உடல்நலக் குறைவால், 'அரசியல்' எனும் கடலிடையே தத்தளித்துக் கொண்டிருக்கிறது. அதற்கே சாய்ந்து கொள்ள ஒரு கொம்பு தேவைப்படும் நிலையில் இ. காங்கிரஸ் அதைச் சார்ந்துதான் இயங்க இயலுமா?

— ஜானகி, கோவை — 38.

குமரி அனந்தன், நெடுமாறன் போன்ற திறம் படைத்த நல்ல தலைவர்களை, இந்திரா காங்கிரஸ் கட்சியில் இணையச் செய்து, அவர்களுக்குத் தகுந்த அந்தஸ்தைக் கொடுத்து — வயது முதிர்ந்தவர்கள் கட்சிப் பொறுப்புக்களிலிருந்து விலகி, இளைஞர்களுக்குப் பொறுப்புக்களைக் கொடுத்து, தமிழகத்தில் மீண்டும் நல்லாட்சியை வெகு விரைவில் இந்திரா காங்கிரஸ் மூலம் கொண்டு வர வாய்ப்பிருக்கிறது. வரவேற்க மக்கள் இருக்கிறார்கள். வாழ்த்துக் கூற நல் உள்ளங்கள் இருக்கின்றன. இனியும் இந்திரா காங்கிரசார் அ. தி. மு. க. வை நம்பி இருக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் (சார்ந்திருப்பதால்) அ. தி. மு. க. வுக்கு மட்டுமே லாபம். நாளடைவில் இந்திரா காங்கிரஸ் இருக்கிற தன் தொண்டர்களையும் இழந்து தவிக்கின்ற காலம் ஏற்பட்டுவிடும்.

— திருமதி ரேணுகாதேவி முருகேசன்,
கொட்டாரம்.

இந்திரா காங்கிரஸ் அ. தி. மு. க. வுடன் கூட்டு வைத்துள்ளது ஊழலுக்குத் துணை புரிவதைப் போன்றாகி விடுகிறது. தமிழ்நாட்டிலுள்ள இந்திரா காங்கிரஸ் தலைவர்களுக்குக் கொஞ்சமாவது தீர்க்க தரிசன புத்தியும், எள்ளளவாவது மானமும், ரோசமும் இருந்தால் அ. தி. மு. க. விடம் இந்திரா காங்கிரஸ் கொத்தடிமையாக இருப்பதிலிருந்து விடுதலை பெற்றுக் காங்கிரஸ் கட்சியின் 10 அம்சத் திட்டம், புதிய 20 அம்சத் திட்டம் போன்றவைகளைப் பிரசாரம் செய்வதுடன் திராவிட இயக்கப் பாரம்பரியக் கட்சிகளினால் தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்களைப் பற்றியும், வீதிக்கு வீதி, வீட்டிற்கு வீடு மக்களிடம் சென்று கூறுவார்கள். இப்படிச் செய்தால் அடுத்துவரக்கூடிய ஆட்சி இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியாகும்.

—எம். பி. நாராயணசாமி, சென்னை — 10.

ஓர் வேண்டுகோள்



குமார் 300 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருப்பிடம், கல்வி அளித்து வரும் சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டு தோறும் தீபாவளி அன்று குழ்ந்தைகளுக்கு புத்தாடை, பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை ஒரு புதிய பாதையில் கொண்டு செல்லும் ஆசிரமத்தின் அரியதொரு செயலையும், திக்கற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதையும், அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறோம். எனவே இது சம்பந்தமாக தாங்கள் அளிக்கும் உதவி ஆதரவற்ற குழந்தைகளுக்கும், ஆசிரமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தின் முதியோர்களும், இல்லக் குழந்தைகளும் மன மகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மக்கள் அளிக்கும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். பொது மக்கள் தங்களால் இயன்ற உதவியை பணம் அல்லது பொருட்களாக

நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,

நெ. 20, கம்பர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை-600059

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — III

ராஜ்மோகன் காந்தி



• வேவல்



• • பிரகாசம்



• ஆட்லி

5

தேச விடுதலைக்கு முன் காந்திஜியிடமிருந்து விடுதலை!

எதிர்பார்த்தபடியே சென்னை மாகாண சட்டசபையில் காங்கிரஸ் மிகப் பெரும் பான்மை பலம் பெற்றது. 205ல் 165 இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் காங்கிரஸின் சட்டசபைத் தலைவர் யார் என்பது குறித்து ஏகமனதான அபிப்ராயம் உருவாகவில்லை. ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய காங்கிரஸ்களின் தலைவர்களான பிரகாசம், மாதவ மேனன், காமராஜ் ஆகிய மூவரும் காங்கிரஸ் மேலிடத்தில் யோசனை கேட்ட போது மேலிடம் ராஜாஜியையே சிபாரிசு செய்தது. (ஸி. ஆர். ஆட்சேபிக்கவில்லை.) ஆனால் தன் யோசனையை ஏற்றுத்தான் ஆக வேண்டும்என்றுமேலிடம்நிர்ப்பந்தப்படுத்தவுமில்லை. காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் மேலிடத்தின் சிபாரிசை 148க்கு 38 என்ற விகிதத்தில் நிராகரித்தனர். இதன்பிறகு கோஷ்டிகள் உருவாயின. பிரகாசத்துக்கும் முத்துரங்க முதலியாருக்கும் இடையில் போட்டி. காமராஜ் முத்துரங்க முதலியாரை ஆதரித்தார். ஆனால் பிரகாசமே 13 வோட்டுக்கள் அதிகம் பெற்று வென்றார். இந்தப் பலப் பரீட்சையின்போது ஸி. ஆர். ஆதரவாளர்கள் நடுநிலை வகித்தனர்.

அனைத்திந்திய ரீதியில் காங்கிரஸ் எட்டு மாகாணங்களில் அமைச்சரவைகளை

அமைத்தது. பஞ்சாபில் அகாலிகளுடன் கூட்டு மந்திரிசபை உருவாயிற்று. வங்கத்திலும் சிந்துவிலும் முஸ்லீம் லீக் கூட்டணி அமைச்சரவைகளுக்குத் தலைமை தாங்கியது.

மத்திய ஆட்சி பிரிட்டனிடமே இருக்குமா அதுவும் கைமாறுமா? பெதிக் லாரன்ஸ், ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ், ஏ.வி. அலெக்ஸாண்டர் ஆகிய மூவர் அடங்கிய குழு பேச்சு வார்த்தைகள் நடத்த இந்தியாவுக்கு வரும் என்று பிரதமர் அட்லி அறிவித்தார். ''இந்தியா காமன்வெல்த்துக்குள்ளேயே இருக்க விரும்பும் என்று நம்புகிறேன். என் நம்பிக்கை பொய்த்து அது பூரண சுதந்திரத்துடன் விளங்க விரும்பினால் அந்த உரிமை அதற்கு உண்டு'' என்று பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பிரதமர் அட்லி கூறினார்.

லண்டன் இந்த அளவுக்குத் திட்டவட்டமாக இதற்கு முன் எப்போதுமே பேசியதில்லை. மகிழ்ச்சியில் திளைத்த ஸி. ஆர். ''இன்னும் ஆறு மாதங்களில் சுதந்திரம் வந்து விடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது'' என்றார். ''அதிகபட்சம் போனால் இரண்டு வருஷம்'' என்று கணித்தார்.

காபினட் மிஷன் என்று அழைக்கப்பட்ட மூவர் குழு மார்ச் 24ம் தேதி வந்து சேர்ந்தது. எத்தனையோ ஏற்றத் தாழ்வுகளைக் கண்டிருந்த போதிலும் என்றுமே நம்பிக்கையைத் தளர விடாத ஸி. ஆர். மூவர் குழுவின் வெற்றிக்கு முழு மனத்துடன் பாடுபட்டார். அவர் காங்கிரஸ் சார்பில் அதிகார பூர்வமாகப் பேசவில்லை. அந்தப் பணி, ஆஸாத், நேரு, பட்டேல் ஆகியோரிடம் விடப்பட்டது. காந்திஜியும் முக்கிய பங்கு வகித்தார். ஆனால் அதிகாரபூர்வமாக இல்லாவிடினும் ஸி. ஆரும் காங்கிரஸ் சார்பிலேயே வாதிட்டார். அவர் பேச்சிலே இருந்த யதார்த்தப் போக்கு அவருடைய வாதங்களுக்குப் பலம் அளித்தது. இந்திய அமைச்சரான பெதிக் லாரன்ஸ், வைஸ்ராய் வேவலிடம் பேசும் போது, ''இந்திய அரசியலில் மிகப் பெரிய மனிதர் ஸி. ஆர். தான்'' என்று குறிப்பிட்டார்.

மூவர் குழுவுடன் நடத்திய பேச்சு வார்த்தையில் மகாத்மா, ஸி. ஆர். திட்டத்தைத் தான் முன் வைத்தார். இந்தத் திட்டத்தில் விவரித்துள்ள பகுதிகளில் பாகிஸ்தான் அமையலாம் என்று மூவர் குழுவும் அபிப்பிராயப்பட்டது. ஆனால் ராஜாஜி — காந்திஜி திட்டப்படி அல்லாமல் அங்கு அமையும் பாகிஸ்தான் பூரண சுயாதிக்க உரிமை பெறும், தனிச் சுதந்திர நாடாக விளங்கும். ஜின்னா இதனை ஏற்கவில்லை. அவர் விரும்பிய அகண்ட பாகிஸ்தான் இது அல்லவே! மேலும் கல்கத்தாவை விடவும் அவருக்கு மனமில்லை! 'அப்படியானால் சரி,' என்று மூவர் குழு ஒரு மாற்றுத் திட்டத்தைச் சமர்ப்பித்தது. அதன்படி ஜின்னா விரும்பிய பகுதிகள் எல்லாமே பாகிஸ்தானாக விளங்கும். அதற்குப் பல அம்சங்களில் சுயாட்சியும் இருக்கும். ஆனால் வேறு முக்கியமான பல அம்சங்களில் அது இந்திய யூனியனுடன் பிணைக்கப்பட்டிருக்கும். பரிபூரண சுதந்திர நாடாக இராது. இதை ஏற்றுக் கொள்வது போல் காணப்பட்ட ஜின்னா, ஒரு நிபந்தனை விதித்தார். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தனி நாடாகப் பிரிந்து விட உரிமை கோரினார்! காங்கிரஸ் அவரது நோக்கத்தை உடனே புரிந்து கொண்டது. அகண்ட பாகிஸ்தான் என்ற தமது கனவை இந்த முறையில் நனவாக்கிவிடலாம் என்ற தந்திரத்துக்கு முட்டுக்கட்டை போட்டது.

ஒருவழியாக மே பதினாறாம் தேதி முன்னுக்குப் பின் முரணான ஒரு திட்டத்தை காபினட் மிஷன் என்றழைக்கப்பட்ட மூவர் குழு அறிவித்தது. இதனை முதலில் ரொம்ப உற்சாகமாக வரவேற்ற காங்கிரஸ்காரர்கள் அதில் உள்ள முரண்பாடுகள் புரிய வந்த போது கலங்கி, தயங்கினார்கள். இதே நேரத்தில் வெகு சாமர்த்தியமாக இடைக்கால அரசு பற்றியும், பிரிட்டிஷ் அரசு அறிக்கைவிட்டது. மே 16 திட்டத்தை ஒப்புக் கொண்டாலன்றி இடைக்கால அரசில் காங்கிரஸ் பங்கு பெற முடியாது. ஏற்கெனவே அந்தத் திட்டத்தை ஒப்புக் கொண்டு விட்ட முஸ்லிம் லீக்குக்கு அதிகார மாற்றம் நிகழும்! ஜின்னா மட்டுமே இடைக்கால அரசு அமைப்பார். இந்த அனர்த்தம் நேராதிருக்க, பெதிக் லாரன்ஸும் கிரிப்ஸும் மே 16 திட்டத்தை ஏற்குமாறு தனிப்பட்ட முறையில் பட்டேல், நேரு, ஸி. ஆர். ஆகியோரை வற்புறுத்தினர்.

மகாத்மா, 'கூடவே கூடாது' என்றார். ஆனால் மந்திரி பதவிகள் இப்போது காங்கிரஸ் தலைவர்களைக் கண்சிமிட்டி அழைத்துக் கொண்டிருந்தன. காந்திஜியின் அறிவுரைக்கு அவர்கள் மௌனத்தையே பதிலாக்கினார்கள்!

ஆகக் கூடி பிரிட்டிஷாரிடமிருந்து நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே காங்கிரஸ் தலைவர்கள் (ஸி. ஆர். உள்பட) மகாத்மாவிடமிருந்து விடுதலை பெற்றுக் கொண்டு விட்டார்கள்! மகாத்மாவிடமிருந்து கருத்து மாறுபடுவது ஸி. ஆருக்குப் புதிதல்ல. 1940 லேயே அவர் அந்த முடிவெடுத்திருந்தார். ஆனால் முன்னர் ராஜாஜியை இதற்காகத் தீவிரமாக எதிர்த்த தலைவர்களே இன்று மகாத்மாவைப் புறக்கணித்தார்கள்!

(தொடரும்)

தமிழாக்கம்: ஜெ. ராஜேந்திரன்

கணவன்: அடியே, சீக்கிரம் புறப்படுக...! நாளைக்கு முதல்-ஷோவுக்கு டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டேன்...

மனைவி: நீங்க சுத்த மோசம்; கடைசி நேரத்துலதான் அவசரப் படுத்துவீங்க!

— கரடிகுளம் ஜெயாபாரதி ப்ரியன்



வாழ்க்கை வாழ்வதற்கே!

பொன்னுசை பொல்லாதது அல்ல!



"பணம் பண்ணுவதற்குச் சுலபமான வழி என்ன?'' என்று ஒரு செல்வந்தரைக் கேட்டபோது, இரண்டே வார்த்தைகளில் பதில் கூறினார்: "செலவழிக்காமல் இருப்பது!'' இதையேதான் கல்பாக்கம் ராஜுவும் தமது கடிதத்தில் எழுதுகிறார்:

"என் மாத வருமானம் ரூ 1200. இதில் நாலில் ஒரு பங்கு அதாவது ரூ 300 சேமித்து வருகிறேன். அநாவசியச் செலவுகளைக் குறைப்பதால்தான் இது சாத்தியமாகிறது. ஒவ்வொரு பொருளை வாங்குமுன்னரும் பல விதமாக யோசிப்பேன். 'இதை வாங்கினால் என்ன நன்மை? வாங்காவிட்டால் என்ன நஷ்டம்?' என்று சிந்திப்பேன். என் மனைவியும் குழந்தைகளும் இதில் என்னுடன் ஒத்துழைக்கிறார்கள். ஆனால் சாப்பாடு விஷயத்தில் மட்டும் நாங்கள் கட்டுப்பாடு விதித்துக் கொள்வதில்லை. அவரவருக்குப் பிடித்ததை வீட்டில் செய்து சாப்பிடுகிறோம். எனக்கு நாற்பத்தொரு வயதாகிறது. இதுவரை பைசா கூடக் கடன் வாங்கியது கிடையாது. என் நண்பர் ஒருவர் பிராவிடண்ட் ஃபண்டில் ஒன்பதாயிரம் ரூபாய் கடன் பெற்று கலர் டி.வி. வாங்கியிருக்கிறார். இப்படிச் செய்வதால் விதிமுறைகளை மட்டுமின்றி, நம்மை நாமேயும் ஏமாற்றிக் கொள்கிறோம் அல்லவா? கடன் வாங்குவதாலோ ஆடம்பரமாகச் செலவழிப்பதாலோ வாழ்க்கையில் மகிழ்ச்சி பெற முடியாது.''

சேமிப்பது, கடன் வாங்குவது பற்றி கல்பாக்கம் ராஜு கூறுவதை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இது மட்டும் போதாது. இதற்கு மேலும் சிறிது கூற வேண்டும். சேமிப்பது நல்லதுதான். ஆனால் ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் விழுந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் மறக்கக் கூடாது. நேற்றைய ஆயிரம் ரூபாயின் மதிப்பு இன்று நூறு ரூபாய்தான். எனவே சேமிக்க மட்டும் செய்தால் கடைசியில் நஷ்டப்பட்டுப் போனதைத்தான் உணர்வோம். ஆனால் சேமித்த பணத்தை பங்கு மார்க்கெட்டிலோ, பொன்னுபரணத்திலோ, நிலத்திலோ முதலீடு செய்தால் அதன் மதிப்பு நாளுக்கு நாள் உயர்கிறது. லாபமடைகிறோம். "நமது பெண்மணிகளின் நகை ஆசை பெருங்குற்றமல்ல; அவர்கள் கழுத்திலோ காதிலோ உள்ள பொன்தான் இந்நாட்டின் உண்மையான சொத்து'' என்பார் ராஜாஜி. அளவுக்கு மீறிய அல்லது சக்திக்கு மீறிய நகை ஆசைதான் தவறு. புறநகர் பகுதிகளில் நிலம் வாங்கினாலும் அதன் மதிப்பு நாளுக்கு நாள் கூடும். நாளை ஓர் அவசரத்துக்கு விற்க நேர்ந்தால் நல்ல விலை கிடைக்கும். 1952ல் அன்று புறநகராக இருந்த கஸ்தூர்பா நகர் பகுதியில் என் நண்பர் ஒருவர் மூவாயிரம் ரூபாய்க்கு ஆறு கிரவுண்டு நிலம் வாங்கினார். இன்று அவரது வாரிசிடம் இரண்டு கிரவுண்டுதான் பாக்கி இருக்கிறது. ஆனால் அந்த இரண்டு கிரவுண்டின் மதிப்பு மூன்று லட்சத்துக்கும் அதிகம்!

ஆனால் ஒன்று. நிலமோ நகையோ பத்திரமாகக் கட்டிக் காக்க வேண்டும். வேலி போட்டு அடிக்கடி போய்ப் பார்த்து அனுபவ பாத்தியதை கொண்டாட வேண்டும். இல்லாவிட்டால் பறி போய் விடும். மோசடி வியாபாரிகளிடம் ஏமாந்து போகக் கூடாது என்பது இரண்டுக்குமே பொருந்தும். இனி ஷேர் மார்க்கெட் பக்கம் வருவோம்.


எக்ஸைட் பாட்டரி தெரியுமில்லையா? அவர்கள் முதன்முதலாக இந்தியாவில் தயாரிப்பு 1960ல் தொடங்கி ஷேர்களை வெளியிட்டபோது பத்து ரூபாய் பங்குகள் முந்நூறு கேட்டு எழுதினேன். பத்து பங்குகள் ஒதுக்கினார்கள். அதாவது என் முதலீடு நூறு ரூபாய்தான். அதன் பிறகு போனஸ் ஷேர்கள் என்று அவ்வப்போது இலவசமாகக் கொடுத்து வந்திருக்கிறார்கள். இன்று என்னிடம் உள்ள பங்குகள் 121. விற்கப் போனால் ஒரு பங்கின் மார்க்கெட் மதிப்பு இன்றைய தேதியில் ரூ 120. ஆக, என்னுடைய நூறு ரூபாய் இன்று எத்தனை மடங்கு மதிப்பில் உயர்ந்திருக்கிறது, கணக்குப் போட்டுப் பாருங்கள். இந்த 121 ஷேர்களுக்கும் (அதாவது ரூ 1210க்கு) இருபத்தைந்து சதம் வருடா வருடம் லாபத்தில் பங்கு தருகிறார்கள். ஆகக் கூடி, நூறு ரூபாய் முதலீடுக்கு இன்று ஆண்டொன்றுக்கு முந்நூறு ரூபாய்க்கு மேல் வருவாய் கிடைக்கிறது! இதைப் படித்துவிட்டு நாளைக்கே பங்கு மார்க்கெட்டுக்குள் பாயாதீர்கள்! எச்சரிக்கை! மோசமான கம்பெனிகளும் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் அனுபவசாலிகளான உண்மை நண்பர்களின் யோசனைகளைக் கேட்டுக் கொண்டுதான் இறங்க வேண்டும்.

— ஜீவன்

தங்க கவரிங் நகைகளுக்கு தன்னிகரற்ற பெயர் "மேரி"

கண்ணைக் கவரும், அழகும், பொலிவும், தரமும் உத்திரவாதமும் உடைய உலகப் புகழ்பெற்ற 22ct "மேரி" தங்க கவரிங் நகைகளை வாங்கி அணிந்து மகிழுங்கள்!

நகைகளின் நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் நகைகள் அனுப்பப்படும். வி.பி.பி. சார்ஜ் தனி. இலவச கேட்லாக்கைப் பெற எழுதுங்கள்!



மேரி கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

தபால்பெட்டி: 1405, 14, ரங்கநாதன் தெரு,
தி. நகர், சென்னை-600017.




எஸ்.வி. சேகரை ஏமாற்றிய 'வால் பையன்!'


'வால் பையன்' நாடகம் மேட்டூர் சேலம் கேம்ப் பில் உள்ள கல்பனா தியேட்டரில் 31.8.86 அன்று நடந்து கொண்டிருந்தது. திடீரென்று நாடகத்தைப் பாதியிலேயே நிறுத்தி விட்டதைக் கண்ட ரசிகர்கள் ஒன்றும்புரியாமல்குழப்பத்தில்ஆழ்ந்தனர்.எஸ்.வி. சேகர் மேடையில் வந்து, "மேட்டூர் பழங்கலை பாதுகாப்பு மன்றம்' சார்பில் ஒரு வாலிபர் என் னிடம் வந்து ரூ. 1500 அட்வான்ஸ் கொடுத்தார். மீதிப் பணத்தை நாடகம் நடத்தும்போது தருவ தாகக் கூறியிருந்தார். ஆனால் இதுவரையிலும் பேசியபடி பணம் தரவில்லை. என்னிடம் ஒப்பந்தம் பேசிய அந்த வாலிபரையும் காணவில்லை. நான் இதைப் பற்றிப் போலீசில் புகார் செய்யப் போவ தில்லை'' என்று கூறிவிட்டு நாடகத்தைப் பாதியி லேயே முடித்துக் கொண்டார்.

'அன்று தன்னை ஏமாற்றிய அந்த 'வால் பையனை'ப் பற்றிப் போலீசில் புகார் கூறாமல் சென்று விட்டது சேகருக்கு வேண்டுமானால் நியாயமாகப்பட்டிருக்கலாம். ஆனால் ரூ. 10, 20 என்று பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி ஆவலு டன் நாடகம் பார்க்க வந்திருந்த அப்பாவி ரசிகர் களைப் பாதியிலேயே குழப்பத்தோடு தவிக்க விட்டுவிட்டுச் சென்றது எந்த வகையில் நியாயம் என்பதுதான் புரியவில்லை!

— நவபாரதி



"சின்ன வயசுலே இப்படி சுவத் திலே கிறுக்கியதற்காக வீட்டிலே எவ்வளவு அடி, உதை வாங்கி யிருக்கேன் தெரியுமா?''



நிஜமான அதிர்ஷ்டசாலி


● சேகர்


● கங்கை அமரன்

மியூசிக் அகாடமியில் கங்கை அமரனின் இசை நிகழ்ச்சி. ஏற்பாடு செய்திருந்தவர்கள் லலிதா ஜுவல்லரி நிறுவனத்தினர். இடைவேளையில், நிகழ்ச் சிக்கு வந்திருந்த வாடிக்கையாளர்களில் மூவருக்கு அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் முறையே ஒரு சவரன், அரை சவரன், கால் சவரன் பரிசு தருவதாய் அறிவித் திருந்தனர்.

முதல் இரு அதிர்ஷ்ட எண்களை கங்கை அமரன் அறிவிக்க, உரியவர்கள் வந்து பரிசு பெற்றுச் சென் றனர். மூன்றாவது அதிர்ஷ்ட எண்ணையும் கங்கை அமரன் அறிவித்தார். யாரும் வரவில்லை! நீண்டது சஸ்பென்ஸ்!'யாரும் வரவில்லை எனில் நானே எடுத்துக் கொண்டு விடுவேன்' என்றார் அமரன் தமா ஷாய். அதன்பின்னரும் அந்த எண்ணுக்குரியவர் வராததால், நான்காவதாய் ஓர் அதிர்ஷ்டசாலியைத் தேர்ந்தெடுத்து அவருக்கே மூன்றும் பரிசு தரப்பட்டது!

அந்த அதிர்ஷ்டசாலி இந்தியன் பாங்கில் வேலை பார்க்கும் சேகர். "அந்தப் பரிசு எனக்குத்தான் என்று விதித்திருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்? நான் தான் அன்றைக்கு வந்தவர்களிலேயே நிஜமான அதிர்ஷ்டசாலி'' என்றார் சேகர்!

— ஜூவி

'ராஜா' பற்றி 'ராணி'யின் புத்தகம்!





ராணி மைந்தன்

"போன வருஷம் அமைச்சர் ராஜாராமின் பிறந்த நாளன்று அவர் வீட்டில் அவரைப் பார்த்துவிட்டுப் புறப்படும்போது, அங்கே யாரோ 'அமைச்சருக்கு அடுத்த வருஷம் 60 வயது' என்று சொல்லிக் கொண்டிருந்தது காதில விழுந்தது. உடனே, 'பல சுவையான விஷயங்கள் கொண்ட அமைச்சர் ராஜாராமின் வாழ்க்கை வரலாற்றைப் புத்தகமாய் எழுதி, அவரது மணி விழா சமயத்தில் வெளியிட்டால் என்ன?' என்று தோன்றியது" என்கிறார் ராணி மைந்தன். இதைச் சாவியிடம் சொன்னதும் அவரும் 'நல்ல ஐடியா' என்று 'ஓகே' செய்தாராம்.

"தினமும் காலை ஆறரை மணிக்கு அமைச்சர் வீட்டுக்குப் போய்விடுவேன். பெரும்பாலான நாட்களில் நான்தான் வாசற்படியில் கிடக்கிற அத்தனை நியூஸ் பேப்பர்களையும் வாரிக் கொண்டு, காலிங் பெல்லை அழுத்துகிற முதல் ஆசாமியாக இருப்பேன். பீச்சில் காலை வாக்கிங் முடித்துவிட்டு, வீடு திரும்புவார் அமைச்சர். சுமார் ஒரு மணி நேரம் பேசுவார். நேரம் ஆக ஆக விசிட்டர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அவர்களைச் சந்திக்க ஆரம்பித்து விடுவார். பல தினங்களில் ஒன்பது வரை காத்திருந்து விட்டு வெறுங் கையோடு திரும்பியிருக்கிறேன். 'இன்றைக்கு ஏகப்பட்ட பேர் வந்து விட்டார்கள். நாம் பேச முடியவில்லை; சாரி!' என்று அமைச்சர் சொல்லுவார்.

"அமைச்சர் ராஜாராம் வீட்டிற்குச் சுமார் நூற்றி முப்பது தடவை போயிருப்பேன். அவர் சொன்னவற்றையெல்லாம் குறிப்புகள் எடுத்துக் கொண்டு அன்று இரவே எழுதி, மறுநாள் போகும்போது, அவருக்குப் படிக்கக் கொடுப்பேன். பெரும்பாலும் திருத்தம் இருக்காது.

அவரது திருமண வாழ்க்கை பற்றிய அத்தியாயத்தைச் சொன்ன அன்று, தமது மனைவியின் நினைவில் ராஜாராம் அழுது விட்டது என்னை நெகிழச் செய்தது. அவரும், அவரது மனைவியும் சேர்ந்து இருக்கிற போட்டோ அவரிடம் ஒன்றுகூட இல்லை. அவருடைய சகோதரி சுலோசனாவிடம், 'எப்படியாவது தேடிப் பார்த்து அவரது கல்யாண போட்டோவை எடுத்துக் கொடுங்கள்' என்று கேட்டேன். அவரும், சேலத்திலே அவர் வீட்டில் பழசையெல்லாம் 'கிளறிப் பார்த்து, ஒரு நெகடிவ்வை எடுத்துத் தர, அதைப் பெரிதாய் பிரிண்ட் போட்டு, அமைச்சரிடம் காட்டினபோது அவருக்கு இனிய ஆச்சரியம்! 'எங்கேய்யா பிடிச்சே இதை?' என்று புளகித்துப் போய்க் கேட்டார்.

"அமைச்சருக்கு ஷுகர் பிரச்னை உண்டு. ராயபுரத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு ஒருநாள் காலை அவர் ஏழு மணிக்குப் போக வேண்டும். இது தெரிந்து நான் காலையில் நேரே ஆஸ்பத்திரிக்கே போய் விட்டேன். 'என்ன! இங்கேயும் வந்துட்டியா? விட மாட்டேங்கறியே!' என்றார் சிரித்துக் கொண்டே. அங்கே என்னோடு ஒரு மணி நேரம் பேசினார்.

"என் வீட்டுக்கு ஒருநாள் சாப்பிட வர வேண்டும் என்று அழைத்தபோது எந்தவித பந்தாவும் இல்லாமல், 'ஓ! மே தினத்தன்று உங்கள் ஏரியாவில் மீட்டிங். அது முடிந்ததும் உங்கள் வீட்டில்தான் டின்னர். சிக்கன் செய்து வை!' என்றார்."

ராணி மைந்தனிடம் பேசிவிட்டுப் புத்தகத்தைப் புரட்டினால், 300 பக்கங்களில் அமைச்சரின் வாழ்க்கை சுவையாய் வளர்ந்திருப்பதைக் காண்கிறோம். இதை எழுதியுள்ள ராணி மைந்தன் ரிஸர்வ் பாங்கில் உத்யோகம் பார்க்கும்போது ராதா கிருஷ்ணனாக விளங்குகிறார். அழகான 'கெட் அப்'பில் அருமையாக அச்சாகியுள்ளது நூல் என்றால் அது 'சாவி' தயாரிப்பாக இருப்பதால்தான்!

—மௌஷ்மி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543).
Assistant Editor: P. S. Mani.
Editor: K. Rajendran.



Cyan, Magenta, Yellow, Black.

EGISTERED No. M. 4392
egistered as a Newspaper in Sri Lanka

ஹைகூ சேலைகள்



ஹைகூ...
ஜப்பானிய மொழியிலே கவிதை.
உங்கள் மேனியிலோ பட்டின் மென்மை உணர்வு!

ஹைகூ...பாம்பே டையிங் புதுப்படைப்
நேர்த்தியான, பட்டுப்போன்ற புதுவகை
க்ரேப் டி ஷீன், ஜாக்கார்ட், ஜ்யார்ஜெட்
தென்றலென மேனியிலே தவழும்
மென்சுகம், எதுகையும் மோனையும் பே
...உங்கள் எழிற்கோலமும், இவற்றின்
வண்ண ஜாலமும்.

ஜப்பானிய ஹைகூ கவிவடிவம் பிறட்
எழிற்கோல துணி வகைகள், பாம்பே
டையிங் படைக்கும் ஹைகூ—உங்கள்
மேனியிலே புதுக்கவிதை!

பட்டுப்போன்ற பாலியெஸ்டர் சேலைகள். படைப்பு.

பாம்பே டையிங்

BD/228/TAM